2014, October 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014

ஊவா மாகாண சபைத்தேர்தல் எதிரணிக்கு புகட்டுகின்ற பாடம்

மகிந்தவை தோற்கடிக்க ரணிலால் முடியுமா?

மங்கலாகிப்போகும் ராஜபக்ஷ மாயவித்தை

அடுத்த ஜனாதிபதி தேர்தலும் தமிழர் அரசியலும்

இலங்கை தமிழர் பிரச்சினையில் தமிழக உணர்வுகளின் எதிர்கால நிலை?

ஸ்கொட்லாந்து சர்வஜன வாக்கெடுப்பின் மூலமான படிப்பினைகள்

இஸ்லாமிய அரசுடன் மோதும் மேற்குலகம்

கசந்துபோன சீன ஜனாதிபதியின் இந்திய விஜயம்



## நிலைகுலைந்து நிற்கும் தமிழக அரசியல்

| | | |
|---|---|---|
| INDIA..............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS





**Subscribe Today**

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781
ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரச்சினைகளைத் தோற்றுவித்தபோது எந்தச் சிந்தனையைப் பயன்படுத்தினோமோ, அதே சிந்தனையினால் அப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

அல்பேர்ட் அயன்ஸ்டீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சமகாலம்

2014, ஒக்டோபர் 01 - 15

**பக்கங்கள் - 68**





**11** மங்கலாகிப்போகும் ராஜபக்ஷ மாயவித்தை

**15** ஊவா மாகாண சபைத் தேர்தல் எதிரணிக்கு புகட்டுகின்ற பாடம்

**18** அடுத்த ஜனாதிபதி தேர்தலும் தமிழர் அரசியலும்

**26** மகிந்தவை தோற்கடிக்க ரணிலால் முடியுமா?

**31** தமிழர்களின் சாத்வீகம்

**34** பெங்களூர் வழக்கால் நிலைகுலைந்து நிற்கும் தமிழக அரசியல்

**42** கசந்துபோன சீன ஜனாதிபதியின் இந்திய விஜயம்

**48** ஸ்கொட்லாந்தின் சுதந்திரம்; சர்வஜன வாக்கெடுப்பு தோல்வி, ஆனாலும் பல விடயங்களில் வெற்றி

**52** பிரிவினைவாதத்தைக் கையாளுதல்

**56** பதவி மீதான மன்மோகனின் காதல்

**60** சீன ஜனாதிபதியின் தெற்காசிய விஜயம் கிளப்பும் கேள்விகள்

**62** இஸ்லாமிய அரசுடன் மோதும் மேற்குலம்










*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# இலங்கை தமிழர் பிரச்சினையில் தமிழக உணர்வுகளின் எதிர்கால நிலை?

வருமானத்தை மீறிய சொத்துக்குவிப்பு வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டு தமிழக முதலமைச்சர் பதவியை இழந்த செல்வி ஜெயலலிதா பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில் தமிழக அரசியலின் எதிர்கால நிகழ்வுப் போக்குகள் எத்தகையவையாக இருக்கும் என்பதே உலகம் பூராகவும் வாழும் தமிழர்கள் விடைகாண அக்கறை கொண்டிருக்கும் ஒரு முக்கிய கேள்வியாகும். 18 வருடங்களாக நீடித்த இந்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு ஏற்பட்ட தோல்வியைப் போன்றே பெங்களூர் விசேட நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு எதிராக அவர் தரப்பில் செய்யப்பட்டிருக்கும் மேன்முறையீட்டு மனுவின் கதியும் அமையுமேயானால் அடுத்த 10 வருடங்களுக்கு தேர்தல் எதிலும் போட்டியிட முடியாமற்போகும். நான்கு வருட சிறைவாசத்துக்குப் பிறகு மேலும் 6 ஆண்டுகள் காத்திருந்தே ஜெயலலிதா தேர்தல் அரசியலில் பங்கேற்கக்கூடியதாக இருக்கும். அவ்வாறானால், அடுத்துவரும் 2016 சட்டசபைத் தேர்தல், 2019 பாராளுமன்றத் தேர்தல், 2021 சட்டசபைத் தேர்தல், 2024 பாராளுமன்றத் தேர்தல் என்று தொடர்ச்சியாக நான்கு தேர்தல்களை அவர் இழக்க வேண்டியிருக்கும். 2001 ஆம் ஆண்டில் முன்னரும் ஒருதடவை இதே போன்று முதலமைச்சர் பதவியை இழந்த ஜெயலலிதா சிலமாதகால இடைவெளிக்குள் ஊழல் வழக்கில் இருந்து விடுதலை பெற்று மீண்டும் முதலமைச்சராக பதவியேற்கக்கூடியதாக இருந்தது. அத்தகைய வாய்ப்பு அவருக்கு இந்த வழக்கிலும் கிடைக்குமாக இருந்தால் அது வேறு விடயம். மற்றும்படி தமிழக அரசியலில் பல மாற்றங்கள் ஏற்படவே செய்யும் என்று கூறுவதற்கு எவரும் அரசியல் அவதானியாகவோ அரசியல் அறிஞராகவோ இருக்க வேண்டியதில்லை.

தமிழகத்தின் முதலமைச்சராக முதலில் இருதடவைகள் பதவி வகித்த ஜெயலலிதா தனது மூன்றாவது பதவிக்காலத்தின் இடைநடுவிலேயே சிறைசெல்ல வேண்டியேற்பட்டிருக்கிறது. மக்கள் செல்வாக்கைப் பொறுத்தவரை மிகுந்த உச்சநிலையில் இருந்த வேளையிலேயே அரசியல்வாழ்வில் ஜெயலலிதாவுக்கு இது நேர்ந்திருக்கிறது. நான்கு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் உள்ள 39 லோக்சபாத் தொகுதிகளில் 37 தொகுதிகளை அவரின் அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக்கழகம் அதிகப் பெரும்பான்மை வாக்குகள் வித்தியாசத்தில் கைப்பற்றியது. அந்தக் கட்சியின் ஸ்தாபகரான முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரனால் கூட நிகழ்த்த முடியாதிருந்த இந்தச் சாதனையை ஜெயலலிதா வேறு எந்தக் கட்சியுடனுமே கூட்டுச் சேராமல் தன்னந்தனியாக நின்று செய்து காட்டினார். அண்ணா தி.மு.க.வுக்கு தமிழக மக்கள் மத்தியில் இருக்கும் பேராதரவை தற்போதைக்கு குறைக்கக்கூடிய எந்தவொரு வியூகத்தையுமே வகுக்க இயலாதவர்களாக அவரது அரசியல் எதிரிகள் பெரிதும் பலவீனமுற்றிருந்த நிலையில் பெங்களூர் விசேட நீதிமன்றத்தின் தீர்ப்பின் வடிவில் அரசியலில் பாதிப்பு வந்திருக்கிறது.

ஜெயலலிதாவின் தீவிர விசுவாசியான பன்னீர்ச் செல்வம் மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராகியிருக்கின்ற போதிலும், தலைவி நீண்டகாலம் வெளியேவர முடியாமற் போகும் பட்சத்தில் அவரால் அண்ணா தி.மு.க.வை இதே செல்வாக்குடன் கட்டிக் காத்துக்கொள்ள முடியும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. திராவிட இயக்கக்கட்சிகளில் மிகப்பெரிய இருகட்சிகளில் ஒன்றான அண்ணா தி.மு.க.ஜெயலலிதாவின் நேரடித் தலைமைத்துவம் இல்லாத நிலையில் பலவீனமடையும் பட்சத்தில் அந்த இடைவெளிக்கு என்ன நேரும் என்பது இன்னொரு முக்கியகேள்வி.

அரசியல் அரங்கில் ஜெயலலிதா நீண்டகாலத்துக்கு இல்லாமற் போகக்கூடிய சூழ்நிலை உருவாகுமானால், அதனால், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் தமிழக மக்கள் மற்றும் அரசியல் சக்திகள் மத்தியில் நிலவுகின்ற உணர்வுகளுக்கு எத்தகைய தாக்கம் அல்லது பாதிப்பு ஏற்படும் என்று கேட்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அண்மைக்காலங்களில் ஜெயலலிதா இலங்கைத் தமிழர் பிரச்சினையில் எடுத்திருக்கக்கூடிய நிலைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இவர்களின் கேள்வியில் உள்ள அர்த்தத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

தமிழகத்தின் பிரதான திராவிட இயக்கக்கட்சிகளின் தலைவர்கள் தங்களுக்கிடையிலான அரசியல் பகைமைக்கு வசதியான முறையிலேயே இலங்கைப் பிரச்சினையை அணுகிவந்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதிக்கு எதிராகப் பயன்படுத்த முடியுமென்றால், அதனால் வரக்கூடிய விளைவுகளைப் பொருட்படுத்தாமல், எந்தப் பிரச்சினையையும் ஜெயலலிதா பயன்படுத்தத் தவறியதில்லை. அதே போன்றே ஜெயலலிதாவுக்கு எதிராகப் பயன்படுத்த

(25ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடிதங்கள்










## மைக்கேல் பிறவுண் விவகாரம்

அமெரிக்காவின் மிசோரி மாநிலத்தின் பெர்குசன் நகரைச் சேர்ந்த ஆபிரிக்க - அமெரிக்க இளைஞன் மைக்கேல் பிறவுண் ஒரு வெள்ளையின பொலிஸ் அதிகாரியால் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து அங்கு ஏற்பட்ட குழப்ப நிலை மற்றும் இச்சம்பவத்தை ஒத்த கடந்த கால அனுபவங்கள் தொடர்பில் சமகாலத்தின் அமெரிக்க விவகாரம் பகுதியில் வெளியான 'கறுப்பு நகரம், வெள்ளைப்பொலிஸ், மைக்கேல் பிறவுண்' எனும் தலைப்பிலான கட்டுரையில் ஆராயப்பட்டிருந்தது. சட்டத்தை அமுலாக்கும் பிரிவினரால் சிறுபான்மையினர் எப்படியெல்லாம் ஒடுக்கப்படுகின்றனர் என்று இந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் விடயங்கள் அமெரிக்காவிற்கு மட்டுமல்லாது, பல்லினச் சமூகங்களைக் கொண்ட இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கும் பொருந்தும். அதிலும், பெர்குசன் நகரில் ஆபிரிக்க-அமெரிக்கர்களே பெரும்பான்மையினராக இருக்கும் நிலையிலும், பெர்குசனின் பொலிஸ் திணைக்களத்திலுள்ள 50 உத்தியோகத்தர்களில் மூவர் மாத்திரமே ஆபிரிக்க - அமெரிக்கர்கள் என்று இந்தக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இது இலங்கையில் வட மாகாணத்தின் நிலைமையை ஏறக்குறைய முற்றிலுமாக பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறதல்லவா?

சிற்றம்பலம் கருனேஸ்வரன், சாவகச்சேரி.

## ரிச்சர்ட் அட்டன்பரோ

இங்கிலாந்தின் பழம்பெரும் திரைப்பட இயக்குநரும் நடிகரும் தயாரிப்பாளருமான ரிச்சர்ட் அட்டன்பரோ பற்றிய கட்டுரையொன்று சமகாலத்தின் நினைவுப்பரவல் பகுதியில் வெளியாகியிருந்தது. 'காந்தி' என்ற திரைப்படத்திற்காகவே பெரியதாக அறியப்பட்ட ரிச்சர்ட் அட்டன்பரோவின் திரை உலக வாழ்க்கை பற்றி பலரும் பொதுவாக அறிந்திராத பல விடயங்கள் இந்தக் கட்டுரையில் வெளியாகியிருந்தன. மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக்கப்படும் போது, அது யதார்த்தபூர்வமாக இருக்க வேண்டும் என்பதற்காக அப்போதைய இந்திய பிரதமர் இந்திரா காந்தியையே சந்தித்து ஆலோசனை கேட்கும் அளவுக்கு அவர் மேற்கொண்டிருந்த முயற்சிகள் ஒன்றே அவரது படைப்புகளுக்கான உழைப்பின் நேர்த்தியை உணர்த்திக் காட்டுவதற்கு போதுமானதாக அமைந்திருக்கிறது. அதிலும், ஈழத்து தமிழ்ச்சூழலில் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்படைந்த காலகட்டத்தில் பரவலாக காட்சிப்படுத்தப்பட்ட திரைப்படங்களில் 'காந்தி' படத்துடன் சேர்ந்து உமர் முக்தார் படமும் இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. லிபியாவில் இத்தாலிய காலனித்துவத்துக்கு எதிராக போராடி இறுதியில் கைது செய்யப்பட்டு இத்தாலிய ஆட்சி

## பாலாதம்பு, சாம்விஜயசிங்க

இது மகத்தான மனிதர்கள் என்ற தலைப்பில் வெளியான தொழிற்சங்கவாதி பாலா தம்பு, முன்னாள் பாராளுமன்ற செயலாளர் நாயகம் சாம் விஜயசிங்க ஆகியோர் பற்றிய ராஜன்பிலிப்ஸின் கட்டுரையில் எந்தவொரு தமிழ் ஊடகத்திலும் வெளிவராத தகவல்களை சமகாலம் தந்திருந்தது. பாலா தம்பு, சாம் விஜயசிங்க போன்றோரைப் பற்றி இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்திருக்க வேண்டியது அவசியம் என்பதை இக்கட்டுரையினை படித்ததின் ஊடாக புரிந்துகொண்டேன்.

கந்தையா சண்முகரட்ணம்,
வெள்ளவத்தை.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்களால் தூக்கிலிடப்பட்ட லிபிய விடுதலைப் போராட்டத் தலைவரான உமர் முக்தாரின் இறுதிக்காலகட்டப் போராட்டங்களை சித்தரிக்கும் வகையில் 'Lion of the Desert' என்ற பெயரில் அந்தத் திரைப்படம் வெளியாகியிருந்தது. சிரிய- அமெரிக்க திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குநருமான முஸ்தபா அல் அக்கட்டினால் தயாரித்து இயக்கப்பட்ட இந்தி திரைப்படத்திற்கு கேணல் கடாபி யின் லிபிய அரசாங்கம் நிதியுதவி வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சர்வேஸ்வரன் சிவலிங்கம், வவுனியா.

### தமிழரசுக்கட்சியின் புதிய தலைவர்

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா நியமிக்கப் பட்டமை தொடர்பில் சமகாலத்தின் ஆசிரிய தலையங்கத்திலும் சத்தியமூர்த்தி யின் கட்டுரையிலும் வரவேற்கப்பட்டிருந்ததுடன் அவரின் பொறுப்புகளும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. ஆனால் இலங்கை தமிழரசுக் கட்சியின் 15 ஆவது மகாநாட்டில் அதன் தீர்மானங்களை நிறைவேற்றுவதிலேயே கருத்து முரண்பாடு களும் வாய்த்தர்க்கங்களும் மூண்டிருந்த நிலையில் புதிய தலைவர் மாவை சேனாதிராஜாவை தமிழரசுக்கட்சியின் 'புதிய வரவு'கள் சுயமாகவும் சுதந்திரமா கவும் செயற்படவிடுவார்களா என்பதுதான் எனது கவலை. அத்துடன் இலங்கை தமிழரசுக்கட்சியின் 15ஆவது மாகாநாடு, ஈ.பி.ஆர்.எல்.எவ்.வின் மகாநாடு என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உள்ள பங்காளிக் கட்சிகள் ஒவ்வொன்றும் தமது பலத்தைக் காட்ட முதற்படுவதுடன் தமக்கிடையிலான அரசியல் போட்டிகளை வெளிப்படுத்த தலைப்பட்டுள்ளதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே புதிய தலைமைகள், புதியமகாநாடுகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற விருட்சத்தை சாய்க்காதிருக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை.

பாலசுப்பிரமணியன் கிருபா, முகத்துவாரம், கொழும்பு.

### அமெரிக்காவின் பாசாங்கு

'காசா மோதல்களுக்கு மத்தியிலும் இஸ்ரேலுக்கு ஆயுதம் வழங்கும் அமெரிக்கா' என்ற தலைப்பில் செய்தி ஆய்வை வாசித்தேன். இஸ்ரேல்-பாலஸ் தீன நெருக்கடியைப் பொறுத்த வரையில் அமெரிக்கா அவ்வப்போது சமாதான பேச்சுவார்த்தைகள் என்ற பெயரில் பாசாங்கு நாடகங்களை அரங்கேற்றினாலும் அதன் உளமார்ந்த ஆதரவு எப்போதும் இஸ்ரேலின் பக்கமே இருந்திருக்கிறது என்பது ஒன்றும் புதிய விடயமல்ல. அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு யாவ ருக்கும் வெளிப்படையானது என்கின்ற அதேவேளை, பாலஸ்தீனம் பாரிய இழப்புகளை சந்தித்துவருவதை நேரில் கண்டும் அது பற்றி இஸ்லாமிய அரசாங் கங்கள் மௌனிகளாக இருந்து வருவது தான் அமெரிக்காவின் கபடத்தனத்திலும் பார்க்க கவலைக்குரிய விடயமாகும்.

சிவசுந்தரம் ரமேஷ், அச்சுவேலி




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 07
2014, ஒக்டோபர் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)


**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்

சலக காரியங்களையும் தானாகவே செய்யவிரும்புகின்ற அல்லது சகல பெருமைகளையும் தனதாக்கிக் கொள்ள விரும்புகின்ற ஒருவர் நல்ல தலைவராக வரமுடியாது.

- அன்ட்ரூ கார்னகி



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....

உள்நாட்டுப் போரில் இலங்கை அரசாங்கம் வெற்றிபெற்றுவிட்ட போதிலும், பிரபாகரனின் கனவை நனவாக்குவதற்கு வடக்கு மாகாணம் விக்னேஸ்வரனிடமும் சுமந்திரனிடமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.



அமைச்சர் சம்பிக்க ரணவக்க

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தும் யோசனையொன்று முன்பு இருந்தது. ஆனால், ஐக்கிய தேசியக்கட்சிக்குள் பிளவு இருப்பதன் காரணத்தாலும், அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியின் வேட்பாளராக களத்தில் குதிக்கப்போவதாக அறிவித்திருப்பதன் காரணமாகவும் இப்போது ஒரு பொதுவேட்பாளரில் எமக்கு நம்பிக்கையில்லாமற்போய்விட்டது.



ஜனாதிபதி பெரமுனை தலைவர் அநுரகுமார திசநாயக்க

தற்போதைய பாராளுமன்றம் மக்களின் அபிலாசையைப் பிரதிபலிக்கவில்லை. இறுதியாக நடந்த பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு எதிரணிக்கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் பலர் ஆளும் கட்சிக்கு தாவிவிட்டார்கள். அதனால், ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதே பொருத்தமானது.



நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம்

முன்னைய மாகாணசபைத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது ஊவா மாகாணசபைத் தேர்தலில் எனது கட்சி பாரிய பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. அதனால் இத்தேர்தல் முடிவை ஏற்றுக்கொள்ள முடியாது. இறுதியாக நடைபெற்ற இரு மாகாணசபைத் தேர்தல்களில் எனது கட்சி கணிசமான ஆதரவைப் பெற்றது. ஆனால், ஊவா முடிவுகள் அதையெல்லாம் நிர்மூலஞ் செய்துவிட்டது.



ஜனநாயகக் கட்சித் தலைவர் சரத்பொன்சேகா

சொத்துக்குவிப்பு வழக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சாதகமானதாகும். அத்தீர்ப்பையடுத்து, இலங்கை கடற்பிராந்தியத்தியத்துக்குள் அத்துமீறி மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி காணப்படுகிறது.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

நண்பர் ஒருவர் என்னைச் சந்திக்க வீட்டுக்கு வந்தாலும் மறுநாள் புலனாய்வு அதிகாரிகள் அவரை விசாரணை செய்கிறார்கள். அதிகாரத்தில் உள்ளவர்களுடன் இணங்க மறுக்கின்ற சகலருக்கும் இன்று இதே உபத்திரவம் தான். இதெல்லாம் ஒரு இராணுவ ஆட்சிக்கான அறிகுறிகள்.



முன்னாள் ஜனாதிபதி திருமதி குமாரதுங்க

தற்போது பாராளுமன்றத்தில் இருக்கும் 725 எம்.பி.க்களில் 142 பேர் க.பொ.த.உயர்தரப்பரீட்சையிலும் 94பேர் சாதாரணதரப் பரீட்சையிலும் சித்தி பெறத்தவறியவர்கள். நாட்டைப் பரிபாலணம் செய்கின்ற பாராளுமன்றத்தின் இன்றைய இலட்சணம் இதுதான். மாகாணசபைகளினதும் ஏனைய உள்ளூராட்சி சபைகளினதும் உறுப்பினர்களினதும் கல்வித்தகைமைகள் பற்றிய புள்ளிவிபரங்கள் என்னிடம் இல்லையெனினும், அந்த உறுப்பினர்களில் கல்வித்தகைமைகள் என்றும் இதைவிட மேம்பட்டதாக இருக்க முடியாது என்பதே என் அபிப்பிராயம்.



ஐக்கிய தேசியக்கட்சி எம்.பி.புத்திகபத்திரன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# ஹொங்கொங் கொந்தளிப்பு

ஹொங்கொங்கில் தொடருகின்ற ஜனநாயக ஆதரவு ஆர்ப்பாட்டங்களும் நகரமத்தி ஆக்கிரமிப்புகளும் பிரிட்டிஷ் காலனியாக இருந்த அந்தப் பிராந்தியத்தின் கட்டுப்பாட்டை தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்த பிறகு சீனா எதிர்நோக்குகின்ற மிகப் பெரிய சவாலாக அமைந்திருக்கிறது.

1997ஆம் ஆண்டு பிரிட்டனிடமிருந்து ஹொங்கொங்கைப் பொறுப்பேற்பதற்கு முன்னதாக வழங்கிய அரசியல் உறுதிமொழிகளைச் சீனா மதித்து நிறைவேற்றுவதில் அக்கறை காட்டியிருந்தால், இன்றைய கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்க வாய்ப்பே இல்லை. உறுதிமொழிகளை உதாசீனம் செய்த பெய்ஜிங்கில் உள்ள அரசாங்கம் ஹொங்கொங்கில் ஜனநாயக ரீதியான தேர்தலை வேண்டி வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருக்கும் மாணவர்கள் மற்றும் மக்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதற்கு அப்பிராந்திய நிருவாகத்தை அனுமதித்திருக்கிறது.

150 வருடங்களுக்கும் அதிகமான கால பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பிறகு 1997 ஜூலையில் ஹொங்கொங்கிற்குள் சீன இராணுவம் பிரவேசித்து அமைதியான முறையில் நகரத்தைக் கையேற்றபோது, 'ஒருநாடு, இரு சமூக அமைப்புகள்' (One Country, two system) என்ற நிலைமையைப் 2047வரை பேணுவதாக அளித்த உறுதிமொழியை சீனா நிறைவேற்றாது என்று அஞ்சுவதற்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை. ஹொங்கொங்கின் கட்டுப்பாட்டை கைமாற்றும் உடன்படிக்கைக்கு உத்தரவாதிகளாக இருக்க பிரிட்டனும் அமெரிக்காவும் அந்த நேரத்தில் முன்வந்தபோதிலும், இப்போது அவ்விருநாடுகளும் அந்தப் பொறுப்பில் பெரிதாக அக்கறை காட்டுவதாக இல்லை என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

சீனாவும் பிரிட்டனும் செய்துகொண்ட அந்த உடன்படிக்கை ஹொங்கொங் அதன் திறந்த சந்தைப் பொருளாதாரத்தையும் சுயாதீனமான நீதித்துறையுடன் கூடிய சட்டமுறையையும் சீனப் பெரு நிலப்பரப்பின் பிரஜைகளுக்கு இருப்பதையும் விட கூடுதலான குடியியல் சுதந்திரங்கள் உட்பட ஏனைய உரிமைகளையும் தொடர்ந்து பேணுவதற்கு அனுமதித்தது. அத்துடன் ஹொங்கொங்கின் ஆட்சித் தலைவரை (Chief Executive) தெரிவு செய்வதற்கு 2017ஆம் ஆண்டு சுதந்திரமான தேர்தலை நடத்துவதாகவும் சீனா உறுதியளித்தது.

ஆனால், அத்தேர்தலுக்கான திட்டம் குறித்து சீனா






ஆகஸ்ட் மாத இறுதியில் வெளியிட்ட அறிவிப்பு ஹொங்கொங் மக்களுக்கு பலத்த ஏமாற்றத்தை தந்தது. சீனாவின் பாராளுமன்றத்தின் (தேசிய மக்கள் காங்கிரஸ்) நிலையியற் குழு நிறைவேற்றிய தீர்மானம் ஆட்சித் தலைவர் தேர்தலுக்கு பல கட்டுப்பாடுகளை விதிப்பதாக அமைந்திருக்கிறது. ஆட்சித் தலைவரைத் தெரிவு செய்வதற்கு ஹொங்கொங் பிரஜைகள் அனுமதிக்கப்படுவர் என்ற போதிலும், அத்தேர்தலில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படுகிறது. ஹொங்கொங் ஆட்சித் தலைவரை தெரிவு செய்வது பெரும்பாலும் சீன ஆட்சியாளர்களுக்கு விசுவாசமானவர்களினால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தெரிவுக் குழுவேயாகும். அதைப் போன்ற விசேட குழுவே தேர்தலில் நிற்கக்கூடிய வேட்பாளர்களுக்கு அங்கீகாரம் அளிக்கும். அக்குழு அங்கீகரிக்காத வேட்பாளர் தேர்தலில் நிற்கமுடியாது.

(25ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு



# ஆப்கானிஸ்தானில் ஆட்சிமாற்றம்

ஆப்கானிஸ்தானின் வரலாற்றில் முதற்தடவையாக ஆட்சியதிகார மாற்றம் அமைதியான முறையில் நடந்தேறியிருக்கிறது. புதிய ஜனாதிபதியாக அஷ்ரப் கானி செப்டெம்பர் 29இல் பதவிப்பிரமாணம் செய்திருக்கிறார். ஜனாதிபதி தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அப்துல்லா அப்துல்லா பிரதம நிறைவேற்று அதி காரியாக (Chief Executive Officer) பதவியேற்றிருக்கிறார். இந்தப் பதவி புதியதொன்றாகும். இன்னும் இரு வருடங்களில் இது பிரதமர் பதவியாக மாற்றப்படுமென்று கூறப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலையடுத்து தோன்றிய முட்டுக்கட்டை நிலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் சுமார் 6 மாதகாலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த மிகவும் சிக்கலான பேச்சுவார்த்தைகளின் இறுதியில் காணப்பட்ட உடன்பாட்டிற்குப் பின்னரே கானியுடன் அதிகாரப் பங்கீட்டுக்கு அப்துல்லா இணங்கிக் கொண்டார். இரண்டாவது சுற்று ஜனாதிபதி தேர்தலில் கானியை எதிர்த்துப் போட்டியிட்ட அப்துல்லா தேர்தல் மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறி முடிவுளை ஏற்றுக்கொள்ள முதலில் மறுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கானி பஸ்தூன் இனத்தைச் சேர்ந்தவர். முன்னர் உலகவங்கியின் உயரதிகாரியாக பணியாற்றிய அவர் ஜனாதிபதி ஹமிட் கார்சாயின் அரசாங்கத்தில் ஒருதடவை நிதியமைச்சராகவும் பதவி வகித்திருந்தார். தஜிக் இனத்தவரான அப்துல்லா ஒரு மருத்துவராவார். ஆப்கானிஸ்தானின் வடக்கு கூட்டணி என்று அழைக்கப்பட்ட இயக்கத்தின் கொலையுண்ட தலைவரான அஹமட் ஷா மசூத்தின் நெருங்கிய நண்பராகவும் ஆலோசகராகவும் விளங்கியவர். அமெரிக்காவின் உதவியுடன் காணப்பட்டிருக்கும் உடன்பாடு இவ்விரு தலைவர்களையும் ஒரு ஆட்சி நிருவாகத்தில் அங்கம் வகிக்க வைத்திருக்கிறது.

கிளர்ச்சி மீண்டும் தீவிரமடைந்துவருகின்ற நாட்டில் சமாதானத்தை உறுதிப்படுத்துவதும் சர்வதேச உதவியில் தங்கியிருக்கும் பொருளாதாரத்தைச் சீர்படுத்த வேண்டியதுமே புதிய ஜனாதிபதி கானி எதிர்நோக்குகின்ற பிரதா னமான சவால்களாகும். அத்துடன் பாகிஸ்தான் உட்பட வல்லமைமிக்க பிராந்திய நாடுகளிடமிருந்துவரக்கூடிய கோரிக்கைகளை அல்லது நிபந்தனைகளை கணக்கில் எடுத்து வெளியுறவுக் கொள்கையொன்றை வகுக்க வேண்டிய கட்டாயமும் அவருக்கு உண்டு.

கானி ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட தினத்தில் தலைநகர் காபூலில் விமானநிலையத்துக்கு அண்மையாக தற்கொலைக் குண்டுத் தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டது. ஒரிரு நாட்கள் கழித்து மீண்டும் காபூலில் இடம்பெற்ற இரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் ஏழு பேர் பலியாகினர். அமெரிக்க மற்றும் வட அத்திலாந்திக் ஒப்பந்த (நேட்டோ) நாடுகளின் துருப்புகள் வருட இறுதியில் வெளியேறவிருப்பதால் உற்சாகம் பெற்றிருக்கும் தலிபான் போராளிகள் கானி பதவியேற்பதற்கு சில தினங்கள் முன்னதாக தலைநகரில் இருந்து வெகு தொலைவில் இல்லாத காஷ்னி மாகாணத்தில் படுமோசமான தாக்குதலை நடத்தியிருந்தனர். இவ்வாறாக தீவிரமடைந்து

(14ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



# மங்கலாகிப்போகும் ராஜபக்ஷ மாயவித்தை

திஸ்ஸரணி குணசேகர

ஊவா மாகாணசபைத்தேர்தல் முடிவுகள் ஆளும் குடும்பத்துக்கு ஒரு அவமதிப்பாகவும் ராஜபக்ஷ மாய வித்தை மதிப்புக்குறைந்து மங்கலாகிக் கொண்டு போவதன் ஒரு தெளிவான அறிகுறியாகவும் அமைந்திருக்கிறது. ராஜபக்ஷாக்கள் ஊவாவில் ஒருவாறாக 51.2 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெறக்கூடியதாக இருந்தது. அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தத்தின் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் சகல அரசியல் கட்சிகளும் அவற்றின் தேர்தல் பிரசாரச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சமமான வாய்ப்புகளைப் பெற முடியாத நிலையிலும் கூட, அரசாங்கத்தரப்பு உற்சாகமற்ற செயற்பாட்டையே வெளிக்காட்டியிருக்கிறது. கோமாளித்தனத்தையே கைவந்த கலையாகக் கொண்ட நகைப்பிற்கிடமான தேர்தல் ஆணையாளரையும் தேர்தல் வன்முறைகளைத் தடுக்கவோ அல்லது சட்டத்தை மீறுகின்ற ஒருவரைத்தானும் கைது செய்யவோ இயலாத அளவுக்கு அடிமை நிலைப்படுத்தப்பட்ட பொலிஸையும் வைத்துக்கொண்டே அரசாங்கத்தினால் ஊவா தேர்தலில் ஒரு மினி யுத்தத்தைப் போன்றே பிரசார இயக்கம் முன்னெடுக்கப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஹரின் பெர்னாண்டோ களத்தில் இறங்கியதால் தேர்தல் முடிவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஐக்கிய தேசியக்கட்சியைப் பொறுத்தவரையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைய மாகாணசபைத் தேர்தல்களில் பொருத்தமான முதலமைச்சர் வேட்பாளர்களை நிறுத்த இயலாமற் போனமை அது எதிர்நோக்கிய முக்கியமான ஒரு பிரச்சினையாகும். ஏனைய முதலமைச்சர் வேட்பாளர்கள் தங்கள் சொந்தப் பகுதிகளில் செல்வாக்குடையவர்களாக இருந்திருக்கலாம். ஆனால், அவர்களில் எவருமே தேசிய அளவில் ஒரு படிமத்தைக் கொண்டவர்களாக இருக்கவில்லை. வாக்காளர்களின் பார்வையில் அவர்கள் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருக்கவில்லை. ஊவாவில் போட்டியிடுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறப்பதற்கு தீர்மானித்ததன் மூலம் பெர்னாண்டோ அந்த முக்கியமான இடைவெளியை நிரவினார். தென்மாகாணத்தில் சஜித் பிரேமதாசாவும் மேல் மாகாணத்தில் ரவி கருணாநாயக்க அல்லது ஹர்ஷா டி சில்வாவும் வடமேல்மாகாணத்தில் தயாசிறி ஜெயசேகரவும் செய்திருக்கவேண்டியதை- செய்யாததை ஊவாவில் பெர்னாண்டோ செய்து காட்டினார். பதுளை மாவட்டத்தில் ராஜபக்ஷாக்களினால் 50 சதவீத வாக்கு எல்லையை எட்ட முடியவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணிக்கு 47.37 சதவீதவாக்குகள் கிடைத்த அதேவேளை ஐ.தே.க.வும் ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி)யும் சரத்பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியும் எல்லாமாகச் சேர்ந்து 50.6சதவீத வாக்குகளைப் பெற்றன.

தேர்தல் பிரசாரங்களின் போது படுமோசமான வன்முறைகளை அனுபவித்த மொனராகலை மாவட்டத்தில் கூட, ராஜபக்ஷாக்களின் வாக்குத்தளமும் பெரும்பான்மை வாக்கு வித்தியாசமும் கடுமையான அளவுக்கு வீழ்ச்சியடைந்திருந்தன. 2009 மாகாண சபைத்தேர்தலின்போது ஆளும் கட்சிக்கு உச்சபட்சமாக 81சதவீதவாக்குகள் அந்த மாவட்டத்தில் கிடைத்தன. (2009 தேர்தலின் போது சசீந்திர ராஜபக்ஷவின் செயற்பாட்டையும் இத்தடவை ஹரின் பெர்னாண்டோவின் செயற்பாட்டையும் ஒப்பிடும் போது ராஜபக்ஷ தனிப்பட்ட முறையில் எந்தளவுக்கு பின்னடைவைச் சந்திக்க வேண்டியிருந்தது என்பதைக் கவனிக்க வேண்டியது முக்கியமானதாகும்)

முதலமைச்சர் வேட்பாளராக ஹரின் பெர்னாண்டோ களத்தில் இறங்கியதால் ஊவா தேர்தல் முடிவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஐ.தே.க.வை பொறுத்தவரை முன்னைய மாகாண சபைத் தேர்தல்களில் பொருத்தமான முதலமைச்சர் வேட்பாளர்களை நிறுத்த இயலாமல் போனமை ஒரு முக்கியமான ஒரு பிரச்சினையாக இருந்தது

ஊவா தேர்தலின் போது படுமோசமான வன்முறைகளையும் துஷ்பிரயோகங்களையும் இலஞ்சத்தையும் காணக்கூடியதாக இருந்தது. தேர்தல் ஓரளவுக்கேனும் சுதந்திரமானதாகவும் நீதியானதாகவும் இருந்திருந்தால், எதிரணிக்கட்சிகள் ஐக்கியப்பட்டிருந்தால் ஊவாவில் ராஜபக்ஷாக் களைத் தோற்கடித்திருக்க முடியும்.

ஊவா மாகாணம் கடந்த காலத்தில் ராஜபக்ஷாக்களுக்கு சாதகமானதாகவே இருந்திருக்கிறது. அங்கு 2009 மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி 72.39 சதவீத வாக்குகளைப்பெற்றது. 2010 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு 58.6 சதவீத வாக்குகளும் 2010 பாராளுமன்றத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 63.6 சதவீத வாக்குகளும் 2011 உள்ளூராட்சித் தேர்தல்களில் 55.87 சதவீத வாக்குகளும் கிடைத்தன. ஊவாவில் இந்த கடந்த காலச் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்



போது, இத்தடவை தேர்தலிலும் ராஜபக்ஷாக்களினால் வெகு சுலபமாக வெற்றியைப் பெற்றிருக்கக் கூடியதாக இருந்திருக்கவேண்டும். ஆனால் நடந்தது எதிர்மாறானதாகவே இருக்கிறது. வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் தவிர, ஏனைய எந்தவொரு மாகாணத்திலும் நடைபெற்றிருக்கக்கூடிய மாகாணசபைத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது ஊவாவில் ராஜபக்ஷாக்களின் செயற்பாடு மோசமானதாக இருக்கிறது.

எதிர்காலத்தில் என்னதான் நடந்தாலும், அதுவேறு விடயம். ஆனால், ஊவாவைப் பொறுத்தவரை ஹரின் பெர்னாண்டோவின் துணிச்சலான தீர்மானமே ஐக்கியதேசியக் கட்சிக்கு பெரிதும் தேவைப்பட்ட உற்சாகத்தைக் கொடுத்தது என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அவர் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவர். குறிப்பிடத்தக்க செயற்பாட்டுக்கு சஜித் பிரேமதாசவின் செல்வாக்கு ஒரு காரணியாக அமைந்தது என்று கூறிவிடமுடியாது. ஊவாவில் ஒரு சில தேர்தல் கூட்டங்களில் மாத்திரமே பிரேமதாச தோன்றினார். மற்றும்படி அவர், தேர்தல் பிரசாரத்தின் முக்கியமான இறுதி வாரத்தில் ஊவாவில் அல்ல அம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாந்தோட்டையிலேயே இருந்ததாகக் கூறப்படுகிறது.)

## எதிர்காலத்துக்கான ஒருபாதை

எதிரணிக் கட்சிகள் ஐக்கியப்பட்டு பலம் பொருந்திய ஒரு வேட்பாளரைக் களமிறக்கினால், மகிந்த ராஜபக்ஷவுக்கு மிகவும் பாரதூரமான ஒரு சவாலைத் தோற்றுவிக்க முடியும் என்பதை ஊவா மாகாண சபைத் தேர்தல் எந்தவிதமாக நியாயமான சந்தேகங்களுக்கும் அப்பால் நிரூபித்திருக்கிறது. அத்தகைய ஐக்கியப்பட்டதொரு எதிரணி அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஒரே தடவையில் நேரடியான வெற்றியை ராஜபக்ஷ பெறுவதைத் தடுத்து, இரண்டாவது சுற்றுக்கு போட்டியைத் தள்ளிவிடக் கூடிய ஒரு அருமையான வாய்ப்பைக் கொண்டிருக்கும்.

2012/2013/2014 மாகாண சபைத்தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்ற தேசியரீதியான சராசரி வாக்கு 54 சதவீதமேயாகும்.தேசியத் தேர்தல்களிலும் மாகாணசபைத் தேர்தல் போன்ற தேசியரீதியில் அல்லாத தேர்தல்களிலும் வேறுபட்ட இயக்க விசைகள் (Dynamics) செயற்படுகின்றன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண அரசியல்வாதிகள் பலரை விடவும் மகிந்த ராஜபக்ஷ பெருமளவுக்கு செல்வாக்குடையவராக விளங்கக் கூடியது சாத்தியமே. அவ்வாறு இருக்கின்ற போதிலும் கூட, 2010ஆம் ஆண்டு ராஜபக்ஷாக்கள் மக்கள் செல்வாக்கைப் பொறுத்தவரை அனுபவித்த அதியுச்ச நிலையுடன் ஒப்பிடும்போது தற்போது அவர்களின் செல்வாக்கு மிகவும் கணிசமான அளவுக்கு வீழ்ச்சி கண்டுவிட்டது என்ற தர்க்கரீதியான ஒரு முடிவுக்கு எம்மால் வரமுடியும்.

தென்னமெரிக்க நாடான சிலியில் 1988ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் எதிர்பாராத வகையில் தோல்வி கண்டதற்குப் பிறகு, சர்வாதிகாரி ஜெனரல் அகஸ்டோ பினோஷே அதிகாரத்தில் இருந்து இறங்கும் உத்தேசத்தைக் கொண்டிருக்கவில்லை. இன்னொரு சதிப்புரட்சியை நடத்த அவர் திட்டமிட்டார். மக்களின் தீர்ப்பை அலட்சியம் செய்யும் ஜெனரல் பினோஷேயன் திட்டத்தை தானும் ஆளும் இராணுவக் குழுவினரும் கடுமையாக எதிர்த்ததாக முன்னாள் விமானப்படை ஜெனரலும் இராணுவக் குழுவின் ஒரு உறுப்பினருமான பெர்னாண்டோ மத்தீய் தனது சுயசரிதையில் குறிப்பிட்டிருக்கிறார். ஜனாதிபதி ராஜபக்ஷ அடுத்த தேர்தலில் ஒரேயடியாக நேரிடையான வெற்றியைப் பெறத் தவறி, போட்டி இரண்டாவது சுற்றுக்குப் போகுமேயானால், ராஜபக்ஷாக்கள் தங்களுக்கு அனுகூலமான முறையில் தீட்டக்கூடிய திட்டங்களுக்கு உடந்தையாக செயற்பட அரசில் இருக்கக்கூடிய



**எதிரணிக்கட்சிகள் ஐக்கியப்பட்டு பலம் பொருந்திய ஒரு வேட்பாளரைக் களமிறக்கினால் மகிந்த ராஜபக்ஷவுக்கு பெரும் பாரதூரமான ஒரு சவாலை தோற்றுவிக்க முடியும் என்பதை ஊவா மாகாண சபைத் தேர்தல் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபித்திருக்கிறது. ராஜபக்ஷாக்கள் அடுத்த தேர்தல்களில் சகலதையும் துவம்சம் செய்துகொண்டு தங்களுக்கு வெற்றியை தேடிக்கொள்வதைத் தடுக்க ஒரே வழி எதிரணிக்கட்சிகளின் ஐக்கியமேயாகும்**

முக்கிய சக்திகள் விரும்பாமல் போகக்கூடிய சூழ்நிலை தோன்றக் கூடும். அத்தகையதொரு சூழ்நிலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருக்கக்கூடிய அதிருப்தியாளர்கள் துணிச்சல் கொண்டு பகிரங்கத்துக்கு வந்து ராஜபக்ஷாக்களின் அதிகாரத்துக்கு எதிரானவர்களாக தங்களைப் பிரகடனம் செய்யவும் வழிவகுக்கக்கூடும். ஆனால், அவ்வாறு ஏதாவது நடப்பதற்கு எதிரணிக் கட்சிகளிடையே ஐக்கியம் ஏற்பட்டாக வேண்டும்.

இலங்கை அரசியலில் ஜே.வி.பி. இப்போது இன்றியமையாத ஒரு சக்தியாகிவிட்டது. பிரசாரம் மற்றும் ஒழுங்கமைப்பு விடயங்களில் ஜே.வி.பி. இணையற்ற ஆற்றல்களைக் கொண்டிருக்கிறது. ஆனால், நல்லதுக்கோ கெட்டதுக்கோ, இலங்கை இன்னமும் இரு கட்சி வாக்காளர் தொகுதியாகவே இருக்கிறது. தேசிய ரீதியில் நோக்கும் போது மூன்றாவது பெரிய அரசியல் சக்தி என்றால் அது ஜே.வி.பி. அல்ல, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பேயாகும். இந்த யதார்த்தத்தை ஜே.வி.பி.யினர் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு புரிந்துகொள்ள மறுத்தால், அந்தப் பிழையான எண்ணம் ராஜபக்ஷ ஆட்சியைத் தோற்கடிப்பதில் ஜே.வி.பி வகிக்க வேண்டியிருக்கும் பங்கை நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்கும்.

பெருமளவுக்கு வாக்குகளைப் பெறக்கூடிய ஒரு கட்சியாக ஜே.வி.பி. இல்லாவிட்டாலும்,நெருக்கமான போட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியாக அமையக் கூடிய தேசியத்தேர்தல் ஒன்றில் வெற்றிக்கும் தோல்விக்கும் இடையே தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆற்றலை அக்கட்சி கொண்டிருக்கிறது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

ஜே.வி.பி.யும் ஜெனரல் பொன்சேகாவும் நடைமுறைச் சாத்தியமான முறையில் சிந்தித்துச் செயற்படவேண்டியது அவசியமானதாகும். அதேவேளை, ஐ.தே.க.தாராள மனப்பான்மையுடன் விட்டுக்கொடுத்துச் செயற்படத் தயாராயிருக்க வேண்டும். ராஜபக்ஷாக்கள் மீண்டும் வெற்றி பெறுவார்களேயானால், இந்த மூன்று கட்சிகளுக்குமே பெரும் இழப்பு ஏற்படும்.

எதிரணிக் கட்சிகளுக்கிடையிலான ஐக்கியம் இன-மத வழிகளிலும் ஏற்படவேண்டிய தேவை இருக்கிறது. அடுத்த தேர்தலில் ராஜபக்ஷாக்கள் வெற்றிபெறுவார்களேயானால், அவர்கள் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை மேலும் உள்ளுக்குள்ளால் குடைந்து வெறுமையாக்குவதற்கும் வடக்கிலும் கிழக்கிலும் நிலைவரங்களில் தாறுமாறான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அந்த வெற்றியைப் பயன்படுத்துவார்கள். ராஜபக்ஷவுக்குக் கிடைக்கக் கூடியதொரு மூன்றாவது பதவிக்காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் குடிப்பரம்பலின் இன விகிதாசாரத்தில், மாற்றத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகள் மேலும் துரிதப்படுத்தப்படும். அத்தகையதொரு செயற்திட்டம் பூர்த்தியடையும் போது சிறுபான்மை இனக்குழுமங்களின் அரசியல், தேர்தல் பேரம் பேசும் வல்லமை பாரதூரமான அளவுக்கு குறைக்கப்பட்டுவிடும். அதன் காரணத்தினால் சிறுபான்மை இனத்தவர்கள் எதிரணிக்கட்சிகளின் கூட்டணியையே ஆதரிக்க வேண்டும். ராஜபக்ஷவின் இன்னொரு பதவிக் காலத்தை சிறுபான்மையின மக்களால் தாங்கிக் கொள்ளவே முடியாது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தினால் (Center for policy Alternatives) ஊவாவில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பொன்றின்படி, 43 சதவீதமானவர்கள் கடந்த இருவருடங்களில் தங்களது பொருளாதார நிலைவரம் சற்று மோசமடைந்துவிட்டதாகவும் அதே வேளை 31.9சதவீதமானவர்கள் தங்கள் பொருளாதார நிலைவரம் பெருமளவுக்கு மோசமானதாகவும் மாறிவிட்டதாக நினைக்கிறார்கள் என்று தெரிய வந்திருக்கிறது. ஊவாவில் 28.6 சதவீதமான குடும்பங்கள் கடந்த வருடம் மருந்து அல்லது மருத்துவ சிகிச்சை இல்லாமல் சமாளிக்க வேண்டியிருந்ததாகவும் 43 சதவீதமான குடும்பங்கள் உணவுப் பொருட்கள் கொள்வனவில் குறைப்பைச் செய்ய வேண்டியிருந்ததாகவும் தெரியவந்திருக்கிறது.

ஊவா வாக்களிப்பில் பொருளாதார நிலைவரம் மிகவும் குறிப்பிடத்தக்க பாத்திரத்தை வகித்திருக்கிறது. ஜனாதிபதி ஆட்சிமுறை பெருந்தீங்கை விளைவித்துக் கொண்டிருப்பதால் அதை இல்லாதொழிக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதனால், அந்த ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான அரசியல் கோரிக்கையின் அடிப்படையில் எதிரணிக் கட்சிகள் ஐக்கியப்பட முடியும். ஆனால், மக்களின் பொருளாதார அக்கறைகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல், எதிரணிக்கட்சிகளினால் தேர்தல்களில் வெற்றி பெற முடியாது. ஊவாவில் ராஜபக்ஷாக்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. சாத்தியமான சகல ஆயுதங்களையும் பயன்படுத்தி தங்களைத் தயார்படுத்துவதில் அவர்கள் அடுத்த பல மாதங்களைச் செலவிடுவார்கள். நேர்மையற்ற குறிப்பிட்ட சில தேர்தல் நடைமுறைகளை சட்டவிரோதமற்றவையாக்கக் கூடியதாக தேர்தல் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கான திட்டங்கள் ஏற்கனவே தீட்டப்பட்டுவிட்டன.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் ஊவா மாகாண சபைத் தேர்தலையும் விட படுமோசமான அளவுக்கு வன்முறைகள் நிறைந்ததாகவும் நேர்மையற்றதாகவும் இருக்கும். ராஜபக்ஷாக்கள் சகலதையும் துவம்சம் செய்து கொண்டு தங்களுக்கு வெற்றியைத் தேடிக்கொள்வதைத் தடுக்க ஒரேவழி எதிரணிக் கட்சிகளின் ஐக்கியமேயாகும். அத்தியாவசியமான அந்த முன்னிபந்தனை நிறைவேற்றப்பட்டால், ராஜபக்ஷவின் இன்னொரு பதவிக் காலத்தில் இருந்தும் அது கொண்டுவரக்கூடிய பயங்கரங்களில் இருந்தும் நாட்டு மக்களைக் காப்பாற்றக் கூடியதாக இருக்கும். ■

---

*(10ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

கொண்டிருக்கும் தலிபான் கிளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதென்பது புதிய அரசாங்கத்துக்கு பெரும் பலப்பரீட்சையாகவே இருக்கப்போகிறது.

இவ்வருட இறுதியில் வெளிநாட்டுப் படைகளின் வாபஸுக்குப் பின்னரும் சில அமெரிக்கத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானில் தொடர்ந்தும் தங்கியிருக்க வகை செய்யக் கூடிய உடன்படிக்கையொன்றில் (வாஷிங்டனின் வற்புறுத்தலுக்கு மத்தியிலும்) கைச்சாத்திடுவதற்கு கார்சாய் மறுத்து விட்டார். மேற்குலகிற்குச் சார்பானவர் என்று தன்னைப் பற்றியிருக்கும் அபிப்பிராயத்தை தனது பதவியின் இறுதிக் காலத்தில் களைந்துவிட வேண்டுமென்பதில் கார்சாய் அக்கறைகொண்டவராக இருந்ததாக அவதானிகள் கூறுகிறார்கள்.

ஆனால், கானியின் அரசாங்கம் அதன் முதல் நடவடிக்கைகளில் ஒன்றாக அமெரிக்காவுடன் இருதரப்பு பாதுகாப்பு உடன்படிக்கையொன்றில் செப்டெம்பர் 30 ஆம் திகதி கைச்சாத்திட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் வருட இறுதியில் வெளிநாட்டுப் படைவிலகலுக்குப் பின்னரும் ஆப்கானிஸ்தானில் 10 ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் தொடர்ந்து நிலைகொண்டிருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# ஊவா மாகாண சபைத் தேர்தல் எதிரணிக்கு புகட்டுகின்ற பாடம்



லக்சிறி பெர்னாண்டோ

**ஐ.தே.க. தலைவர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஐக்கியம் தற்சமயம் எந்தளவுக்குத்தான் நொய்தானதாகவிருந்தாலும் ஊவாவில் அக்கட்சியின் சிறப்பான செயற்பாட்டிற்கு அந்த ஐக்கியமே பெரிய காரணியாக இருந்தது என்பது எனது உறுதியான அபிப்பிராயம்**

அண்மையில் நடந்து முடிந்த ஊவா மாகாண சபைத் தேர்தலின் முடிவுகளைப் பார்க்கும் போது தெளிவாக இரு முடிவுகளுக்கு வரக்கூடியதாக இருக்கிறது. முதலாவது, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் ஐக்கியம் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராக அக்கட்சி மீதான வாக்காளர்களின் நம்பிக்கையை பெருமளவுக்கு மேம் படுத்தியிருக்கிறது. இரண்டாவது, தற்போதைய அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு சகல எதிர்க்கட்சிகளும் அல்லது பெரும்பாலான எதிர்க்கட்சிகள் ஐக்கியப்பட வேண்டியது முக்கியமானதாகும்.

நாட்டில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் தேசிய நல்லிணக்கத்தையும் மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தை மாற்றவேண்டிய அவசியத்தை மனதிற்கொண்டே இந்த முடிவுகள் குறிப்பாக இரண்டாவது முடிவு முன்னிலைப்படுத்தப்படுகிறது. எந்தவொரு அரசாங்கத்தினதும் ஏமாற்றுத்தனமான கொள்கைகள் தன்னிச்சையாகவே அந்த அரசாங்கத்தை மாற்றுவதற்கான வழியைத் திறந்து விடுமென்று நினைப்பது தவறானதாகும்.

### தெளிவான போக்குகள்

பதுளை மாவட்டத்தில் மூன்று தேர்தல் தொகுதிகளில்- பதுளை, ஹாலி எல மற்றும் வெலிமடை- ஐக்கிய தேசியக்கட்சி தீர்க்கமான வெற்றியைப் பெற்றிருக்கிறது. 2009 மாகாணசபைத் தேர்தலின் போது அவ்வாறான ஒரு வெற்றியை ஐ.தே.க. பெற முடியவில்லை. சகல தேர்தல் தொகுதிகளிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியே மிகப் பெரும்பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இத்தடவை, முன்னர் ஆளும்கட்சி வெற்றி பெற்ற தொகுதிகளில் கூட, அவர்களின் வாக்கு வீதம் கணிசமான அளவுக்கு குறைவடைந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அந்த விடயத்தைப் பற்றி முதலில் பார்ப்போம்.

பதுளை மாவட்டத்தில் பசறை தேர்தல் தொகுதியில் தான் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் வசதியான முறையில் வெற்றிபெறக்கூடியதாக இருந்தது. அதுவும் கூட 16 சதவீத வாக்குகள் வித்தியாசத்திலான வெற்றியாகவே அமைந்தது. ஆனால், அதன் வாக்குவீதம் 65சதவீதத்திலிருந்து 56 சதவீதமாகக் குறைந்துவிட்டது. இத்தடவை எந்தவொரு தேர்தல் தொகுதியிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் ஆகக்கூடுதலாகப் பெறக்கூடியதாக இருந்த வாக்கு வீதம் ஐம்பத்தியாறேயாகும். 2009 தேர்தலின் போது மகியங்கனை தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் 74சதவீத வாக்குகளைப் பெறக்கூடியதாக இருந்த அதேவேளை, மாவட்டத்தில் சராசரியாக 68 சதவீத வாக்குகளைப் பெற முடிந்தது. மகியங்கனையில் கூட இத்தடவை 74 சதவீதத்திலிருந்து 51 சதவீதமாக ஆளும் கட்சியின் வாக்குகள் குறைந்துவிட்டன.

2009 தேர்தலில் பசறையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 23,959 பேர் வாக்களித்திருந்தனர். ஆனால், இத்தடவை அந்த எண்ணிக்கை 23,188 ஆகக் குறைந்துவிட்டது. அது ஒன்றும் பெரிய பின்னடைவு இல்லை. அரசாங்கம் எப்படியாவது வெற்றிபெற்றுவிட்டதே என்று எவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணலாம். ஆனால், ஐ.தே.க. வாக்குகள் 9736 இலிருந்து 16426 ஆக அதிகரித்திருப்பதைக் கவனிக்கத் தவறக்கூடாது. தனது வாக்குத் தளத்தில் அதிகரிப்பை ஐ.தே.க. எங்கிருந்து, எப்படிப் பெறக்கூடியதாக இருந்தது? முன்னைய தேர்தல்களில் வாக்களிக்காத பாரம்பரிய வாக்காளர்களில் சிலரும் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட இளம் வாக்காளர்களும் இத்தடவை ஐ.தே.க.க்கு வாக்களித்திருக்கக் கூடியது சாத்தியம். இதற்கு, பல்வேறு காரணிகளுக்கு மத்தியில் ஐ.தே.க.க்கு ஏற்பட்டிருக்கும் ஐக்கியம் தீர்க்கமான ஒரு காரணியாக இருந்திருக்க வேண்டும்.

பதுளை மாவட்டத்தைப் பொறுத்தவரை பசறை தேர்தல் தொகுதியே ஐ.தே.க.க்கு குறைந்தளவுக்கு அனுகூலமானதாக இருந்திருக்கிறது. பதுளை, ஹாலி- எல மற்றும் வெலிமடை தேர்தல் தொகுதிகளில் அக்கட்சி பெற்றிருக்கும் தெளிவான வெற்றியை கீழ்வரும் அட்டவணையில் காண்க.

| | Badulla | | Hali-Ella | | Welimada | |
|---|---|---|---|---|---|---|
| | 2014 | 2009 | 2014 | 2009 | 2014 | 2009 |
| UNP | 54.23 | 34.4 | 50.39 | 26.47 | 45.46 | 26.57 |
| UPFA | 38.23 | 60.89 | 44.5 | 67.32 | 44.01 | 65.93 |
| JVP | 5.84 | 1.79 | 4.09 | 1.81 | 4.9 | 2.5 |

மக்கள் மத்தியிலான விருப்புவெறுப்புப் பாங்கு தெளிவாகத் தெரிகிறது. பதுளை தேர்தல் தொகுதியில் ஐ.தே.க. வாக்கு வீதத்தை 34.4 இலிருந்து 54.23ஆக அதிகரித்திருக்கும் அதே வேளை ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் வாக்கு வீதம் 60.89 இலிருந்து 38.23 ஆகக் குறைந்திருக்கிறது. இது ஒரு பாரிய அலைபாய்வு ஆகும். ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.)யும் கூட அதன் வாக்கு வீதத்தை (2சதவீதத்திலிருந்து சுமார் 6 சதவீதமாக) அதிகரித்திருக்கிறது. இதேமாதிரியான போக்குகளை ஹாலி- எல தேர்தல் தொகுதியிலும் வெலிமடை தேர்தல் தொகுதியிலும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. வெலிமடையில் ஐ.தே.க.வும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் மிக நெருக்கமான வாக்குகளைப் பெற்றிருக்கின்றன. ஆனால், ஆளும் கட்சியின் வாக்குத்தளம் 66 சதவீதத்திலிருந்து 44 சதவீதமாக சரிந்திருக்கிறது.

### ஏனைய போக்குகள்

ஊவா தேர்தலில் ஒட்டுமொத்த வாக்களிப்பு வீதம் மிகவும் தெளிவாக அதிகரித்திருந்ததைக் காண முடிந்தது. 2009 தேர்தலில் 70 சதவீத வாக்குப் பதிவே இடம்பெற்றது. ஆனால் இத் தடவை அது 76 சதவீதமாக இருக்கிறது. இதற்கு தேர்தலில் அல்லது அரசியலில் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய ஏதாவது புதிய ஆர்வம், உற்சாகம் காரணமாக இருக்கக்கூடும். ஆனால், அதேவேளை, கணிசமான அளவுக்கு ஆள்மாறாட்டம் இடம் பெற்றிருக்கக்கூடும் என்பதற்கான அறிகுறியாகவும் இது இருக்கலாம். இறந்தவர்களுக்காகவும் சுகவீன முற்று வெளியில் நடமாட முடியாதிருப்பவர்களுக்காகவும் 'பிசாசு வாக்காளர்கள்' வந்து வாக்களிப்பதென்பது ஒன்றும் நடைபெறமுடியாத விடயங்கள் அல்ல. தொலைதூர தேர்தல் தொகுதிகளில் வாக்குப் பதிவு வியப்புத்தருகிற அளவுக்கு அதிகரித்திருந்தமை மூலம் இது தெளிவாகிறது. தொலைதூர பகுதிகளில், குறிப்பாக மொனராகலை மாவட்டத்தில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதென்பது மிகவும் சவால்மிக்கதாகும்.

இறுதி முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு நோக்கும்போது, பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆக 47.99 சதவீதவாக்குகளையே பெற்றது. ஐ.தே.க.க்கு 45.38 சதவீதவாக்குகளும் ஜே.வி.பி.க்கு 4.73 சதவீதவாக்குகளும் கிடைத்தன. இதன் விளைவாக ஆளும் கட்சிக்கு 9 ஆசனங்களும் ஐ.தே.க.க்கு 8 ஆசனங்களும் ஜே.வி.பி.க்கு ஒரு ஆசனமும் கிடைத்தன. இது மிகவும் நெருக்கமான போட்டியாகும்.

மொனராகலை சற்று வேறுபட்டதாகத் தெரிகிறது. என்றாலும் போக்குகள் தெளிவானவை. மொனராகலை தேர்தல் தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 62.46சதவீத வாக்குகள் கிடைத்தன. ஆனால், இது 2009 தேர்தலில் ஆளும் கட்சி பெற்ற 82.35 சதவீதவாக்குகளில் இருந்து 19சதவீதம் குறைவானதாகும். புள்ளி விபரங்களின் அடிப்படையில் நோக்கும்போது வாக்குகள் வீழ்ச்சியின் சதவீதம் பற்றிய எனது கணிப்பீடு (19சதவீதம்) கச்சிதமாகத் திருத்தமானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், மக்களின் விருப்பு வெறுப்பு பாங்குகள் தெளிவாக வெளிக்காட்டப்பட்டிருக்கின்றன.

பிபிலை தேர்தல் தொகுதியில் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணிக்கு 62.25 சதவீத வாக்குகள் கிடைத்திருக்கின்றன. ஆனால், இது 2009 தேர்தலில் ஆளும் கட்சி பெற்ற 81.37 சதவீத வாக்குகளில் இருந்து 19 சதவீதம் குறைவானதாகும். அதேபோன்றே, வெள்ளவாயா தேர்தல் தொகுதியில் ஆளும் கட்சிக்கு 54.41 சதவீத வாக்குகள் கிடைத்தன. இது 2009 தேர்தலில் அக்கட்சி பெற்ற 79.98 சதவீத வாக்குகளில் இருந்து சுமார் 20 சதவீதம் குறைவானதாகும்.

இந்தத் தேர்தல் தொகுதிகள் சகலவற்றிலும் ஐ.தே.க. வாக்குகளை பாரியளவில் அதிகரித்திருக்கிறது. ஆனால், அந்த அதிகரிப்பு ஆளும் கட்சியைத் தோற்கடிக்கவோ அல்லது அதற்கு நெருக்கமாக வரவோ போதுமானதாக இல்லை. 2009 தேர்தலில் மொனராகலை மாவட்டத்தில் ஐ.தே.க. செயற்பாடு மிகவும் படுமோசமானதாக இருந்தது. ஆனால், இத்தடவை அக்கட்சி பிபிலை தொகுதியில் அதன் வாக்குகளை 14.50 சதவீதத்திலிருந்து 30.33 சதவீதமாகவும் மொனராகலை தொகுதியில் 15.31 சதவீதத்திலிருந்து 31.22 சதவீதமாகவும் வெள்ளவாயா தொகுதியில் 16.78 சதவீதத்திலிருந்து 33.97 சதவீதமாகவும் அதிகரிக்கக் கூடியதாக இருந்திருக்கிறது. அதேபோன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிரணியின் ஐக்கியம் என்பது எண் கணிதத்துடனோ அல்லது தூய கணிதத்துடனோ சம்பந்தப்பட்ட ஒரு விவகாரம் அல்ல. இலக்கங்களைக்கூட்டுவது என்பதை விடவும் ஐக்கியத்தில் உள்ள முக்கியத்துவம் என்னவென்றால் அதனால் மாற்றத்திற்கான புதிய சக்தியையும் வலிமையும் தோற்றுவிக்கக் கூடியதாகவிருக்கும்.**

ஜே.வி.பி.யும். மிதமான அளவுக்கு அதன் வாக்குகளை அதிகரித்திருக்கிறது. ஆனால், பலம் வாய்ந்த சக்தியாக வெளிப்படுவதற்கு அந்த வாக்குகள் போதுமானவையல்ல.

மொனராகலை மாவட்டத்தின் இறுதி முடிவுகளின்படி பதிவான மொத்தவாக்குகளில் 58.55 சதவீத வாக்குகளைப் பெற்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முதலாவதாகவும் 32.03 சதவீத வாக்குகளைப் பெற்று ஐ.தே.க.இரண்டாவதாகவும் 6.63 சதவீதவாக்குகளைப் பெற்று ஜே.வி.பி. மூன்றாவதாகவும் வந்தன.

### முற்றுமுழுதான நிலைவரம்

கீழ்வரும் அட்டவணை ஊவாமாகாணம் முழுமையிலும் மூன்று பிரதான கட்சிகளும் அல்லது கூட்டணிகளும் பெற்றிருக்கும் வாக்குகளின் தெளிவான விபரங்களைக் காண்பிக்கிறது. 'சபலப்படுகின்ற வாக்காளர்களின்' நம்பிக்கையை இன்னமும் கூட தன்வசம் வைத்திருக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மொத்த வாக்குகளில் 52.21 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கிறது. ஆனால், 2009 தேர்தல் முடிவுகளுடன் ஒப்பிடும் போது நிலைவரம் நம்பிக்கை தரக்கூடியதாக இல்லை. 2009 தேர்தலில் ஊவா மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 418,909 வாக்குகள் அல்லது பதிவான மொத்த வாக்குகளில் 72.39 சதவீதம் கிடைத்தது.

ஐ.தே.க. இத்தடவை சிறப்பான செயற்பாட்டை வெளிக்காட்டியிருக்கிறது. 2009 தேர்தலில் ஐ.தே.க 129,144 வாக்குகளை அல்லது மொத்தவாக்குகளில் 22.32 சதவீதத்தைப் பெற்றது. இத்தடவை அக்கட்சி பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 274,773 ஆகும். இது ஒரு 113 சதவீத அதிகரிப்பாகும். மறுபுறத்திலே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வாக்குகளில் 17சதவீத வீழ்ச்சி (69 ஆயிரம் வாக்குகள்) ஏற்பட்டிருக்கிறது. பல வருடகாலமாக ஆளும் கட்சி அதன் கைவசம் இருக்கக்கூடிய அதிகாரங்கள் சகலதையும் பயன்படுத்தி வலுப்படுத்தி வந்திருக்கும் வாக்கு வங்கியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, எதிர்காலத்தில் அவசியமான மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு எதிரணிக் கட்சிகள் அந்த வாக்கு வங்கிக்குள் ஊடுருவல்களைச் செய்ய வேண்டியிருக்கிறது.

### முடிவுரை

ஐ.தே.க. செயற்பாட்டில் பாரிய மேம்பாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஐ.தே.க.க்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஐக்கியம் தற்சமயம் எந்தளவுக்குத் தான் நொய்தானதாக இருந்தாலும், ஊவாவில் சிறப்பான செயற்பாட்டுக்கு அந்த ஐக்கியமே பெரிய காரணியாக இருந்தது என்பது எனது உறுதியான அபிப்பிராயம். அந்த ஐக்கியத்துக்கான பாராட்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கே உரியதாகும் என்பதிற் சந்தேகமில்லை. அத்தகையதொரு ஐக்கியத்தின் மூலமாக எந்தவொரு இயக்கத்திற்குள்ளும் அல்லது எந்தவொரு நாட்டுக்குள்ளும் புதியதொரு நம்பிக்கையை, புதிய ஆற்றலைத் தோற்றுவிக்கக்கூடியதாக இருக்கும். மிக நீண்டகாலமாக இலங்கையில் இல்லாமல் இருப்பது இதுதான்.

ஜே.வி.பி.யும் கூட குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றத்தைக் காண்பித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். அக்கட்சி அதன் வாக்குத்தளத்தை வலுப்படுத்தி அதை மேம்படுத்தும் நோக்கில் செயற்பட்டிருக்கிறது. ஆனால், தேர்தல் முடிவுகள் உணர்த்துவதைப் போன்று ஏனைய சிறிய கட்சிகள் கணக்கில் எடுக்கக்கூடிய மக்கள் ஆதரவு வெளிப்பாட்டை எந்தவிதத்திலும் காண்பிக்கவில்லை. அக்கட்சிகளுக்கு அனுதாபிகளும் ஆதரவாளர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குப் போகிறார்கள் இல்லை.

இந்த மாகாணசபைத் தேர்தலில் போதாத செயற்பாட்டை வெளிக்காட்டியமைக்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் சுயவிமர்சனங்களும் முறிவுகளும் இடம்பெறும். பதுளை மாவட்டத்தில் தோல்வி வெளிப்படையானது என்பதால், அந்த மாவட்டத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முக்கியஸ்தர்கள் கடுமையான கண்டனங்களுக்குள்ளாகக் கூடும். மொனராகலையில் குடும்பத்தினரே பிரசாரங்களை முன்னின்று நடத்தியதால் கோட்டையைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடியதாக இருந்தது என்று கூறப்படக்கூடும். இவ்வாறாக வெளிப்படக்கூடிய விரிசல்களை எதிரணி மதியூகிகள் அடுத்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்த வேண்டும். ஐ.தே.க. அணிகளை ஒன்றிணைத்துக்கொண்டு ஐக்கியமாகச் செயற்படவேண்டும். அதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்

(25ஆம் பக்கம் பார்க்க...)

**Provincial Picture**

| | Badulla | Moneragala | Total | % |
|---|---|---|---|---|
| UPFA | 209,056 | 140,859 | 349,906 | 52.21 |
| UNP | 197,708 | 77,065 | 274,773 | 41.01 |
| JVP | 20,625 | 15,955 | 36,580 | 5.46 |
| Other | 5,045 | 3,781 | 8,826 | 1.32 |
| Total | 432,434 | 237,651 | 679,085 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# அடுத்த ஜனாதிபதி தமிழர் அரசியலும்



இலங்கையில் தேசிய அரசியலைத் தீர்மானிப்பது சிங்கள சமூகமாகும். 'காவியுடைக் காடைத்தனம்' கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள போருக்குப் பிந்திய இலங்கையில் சிங்கள சமூகம் தேசிய அரசியலைத் தீர்மானிப்பதில் முதன்மைப்பங்கை வகிப்பதைக் காணலாம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதற்கு முந்திய தமிழ் அரசியல் தலைமைகளைப் போன்றே தேசிய அரசியலில் பங்கு கொள்ளாமல் ஒதுங்குவது தேசிய அரசியலில் சிங்கள ஆதிக்கத்திற்கு நியாயப்பாட்டை வழங்குகிறது. தமிழர் அபிலாசைகள் பற்றி பிரசார இயக்கங்களை முன்னர் தமிழரசுக் கட்சி வடபகுதிக்குள் நடத்தியமையும், ஒதுங்கிக் கொண்டமையும் காரணமாக தேசிய அரசியலில் தமிழரசியல் வெளிப்படுத்தப்படவில்லை. தமிழர் அரசியல் அமுக்கக் குழுக்கள் வடக்கு, கிழக்கு என்று கூட இல்லாது வடக்கை மையம் கொண்டு இன்று செயற்படுவதையும் காணலாம். இவ்வாறு தேசிய அரசியலில் இருந்து ஒதுங்குவதால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெளிச்சக்தி என்ற நிலையையே பெறுகிறது. சிங்களக் கூட்டு உள்ளத்தில் வெளிச்சக்தியாகத் தென்படும் இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரான 'பொதுவேட்பாளர்' என்ற பிரச்சினையிலும் 18 ஆவது திருத்தம் பற்றிய விவாதத்திலும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தீவிரமாகப் பங்கெடுக்காத நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் அரசியல் இவ்விதம் பங்கெடுக்காத நிலையில் இலங்கையின் தேசிய அரசியலில் சிங்கள வாக்குகளை ஒட்டுமொத்தமாக இனவாத கோஷத்தின் கீழ் சுரண்டும் நிலை காணப்படுகிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் ஆழமான அரசியல் புரிந்துணர்வும் அறிவார்ந்த நோக்கும் உள்ளது. பெரும்பான்மையான எதிர்க்கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலும்



குசல் பெரேரா



பாராளுமன்ற உறுப்பினர்களை விட கூட்டமைப்புத் தலைவர்கள் பல விடயங்களில் தெளிந்த அறிவு உடையவர்கள் என்பதை பாராளுமன்ற விவாதங்களின் போது நிகழ்த்திய உரைகள், வெளியிட்ட அறிக்கைகள் என்பனவற்றின் மூலம் நிரூபித்துள்ளார்கள். ஆயினும் பாராளுமன்றம் 'மக்கள் அரசியலுக்கான' களமாக இன்று இல்லை. தேசிய மட்டத்தில் அரசியலைத் தீர்மானிப்பது இன்று பாராளுமன்றம் அன்று. பாராளுமன்றத்திற்கு வெளியே நடைபெறும் அரசியல் தான் வெகுஜனங்களின் உணர்வுகளைத் தூண்டி பொதுக் கருத்தை உருவாக்குகின்றது. இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் தமிழர் அபிலாசைகள் என்று எவற்றைக் குறிப்பிடுகிறதோ, எவை பற்றி வாதிடுகின்றதோ அவை தேசிய அரசியலில் வெளிப்படுவதில்லை. சிங்கள சமூகம் நடத்தும் அரசியல் ஒன்றுபட்ட பன்மைச் சமூகத்தின் அரசியலாக எல்லா தேசியங்களதும் பண்பாட்டைப் பிரதிபலிப்பதாக அமைவதில்லை. இந்தக் குறைபாடுதான் தென்பகுதியில் 'பிரிவினைவாத அரசியல்' எனப்படுகிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தாம் ஒன்றுபட்ட பிளவுபடாத தேசத்தையே விரும்பி நிற்கிறோம் என்று எவ்வளவு தான் கூறினும் பயன் இல்லை.

ராஜபக்ஷ மூன்றாவது தடவையும் போட்டியிடலாமா என்பது குறித்து எழுந்துள்ள இன்றைய விவாதத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பங்கு கொள்ளுதல் இன்றியமையாதது. நான் மேலே குறிப்பிட்டபடி தேசிய அரசியலில் தமிழர் தலைமை பங்கு கொள்வதா இல்லையா என்ற தர்க்கத்துடன் இவ்விடயம் தொடர்புபட்டது. சுமந்திரன் ஊடகங்களுக்கு கருத்துக் கூறியபோது தென்பகுதியில் சாதாரண மக்கள் இந்த வாதத்தை முக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய ஜனாதிபதி மூன்றாம் தடவையும் பதவியில் அமர்வதற்கு எடுக்கும் முயற்சிக்கு எதிராக பொதுஜன அபிப்பிராயத்தைத்திரட்டும் கடப்பாடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் உள்ளது. இவ்வாறானதொரு பிரசார இயக்கம் மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதியாவதைத் தடுத்து நிறுத்தி 2016 ஏப்ரலில் பாராளுமன்ற தேர்தலை நடத்துவதை சாத்தியமாக்கும். இதன் பயனாக அடுத்து வரும் இருவருட காலத்தில் அவர் பலமிழந்த ஜனாதிபதியா கவே காலத்தைக் கடத்த வேண்டியிருக்கும்

மானதாகக் கருதுகிறார்கள். ஆனால் இதனை முன்வைத்தவரின் நம்பகத் தன்மை பற்றிய ஐயம் உள்ளது என் றார். இதன் தர்க்க ரீதியான விளைவு யாதெனில் ராஜபக்ஷ 18ஆவது திருத்தத்தை உபயோகித்து மூன்றா வது தடவையும் போட்டியிடுவதை யும் தனது இரண்டாவது பதவிக் காலத்தை 4 வருடங்களாகக் குறைத் துக்கொள்வதையும் கைகட்டிப் பார்த் துக் கொண்டிருந்துவிட்டு சட்ட முறை யற்ற நடைமுறையொன்றுக்கு தமது அங்கீகாரத்தை வழங்குவதாகவே இருக்கும். 18ஆவது திருத்தம் பற்றிய விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தனது உரை யைப் பின்வருமாறு ஆரம்பித்தார்.

'திருவாளர் சபாநாயகர் அவர் களே. நான் இன்று பேசுவதற்காக மிகுந்த மனவேதனையுடன் எழுந்து நிற்கிறேன். இந்தச்சபைக்கு நான் வந்து ஆறு மாதம் கூட ஆகவில்லை. நான் ஒரு உறுப்பினராக இச்சபைக்கு வந்தபோது இதுபோன்றதொரு மசோதா குறித்துப் பேச வேண்டியி ருக்கும் என்று நான் கருதியதே கிடையாது. இந்த நாட்டில் ஜனநாய கத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் நோக்குடைய சட்ட மூலம் ஒன்றைப் பற்றி நாம் இன்று பேசிக் கொண்டி ருக்கிறோம்'.

இருதடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடி யாது என்ற கட்டுப்பாட்டை நீக்குவ தற்கு எதிராக அன்று சுமந்திரன் வாதிட்டார். தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் சார்பில் பேசிய அவர் திருத்தச் சட்ட மூலத்தின் தீய நோக் கங்களை எடுத்துக்காட்டினார். ஆகவே இன்று தமிழ்த்தேசியக் கூட் டமைப்புக்குச் சரத்தில்வா முன்வைத் திருக்கும் அரசியல் யாப்பு விளக்கம் குறித்துப் பேசுவதும் தனது அரசியல் நிலைப்பாட்டை வலியுறுத்துவதும் ஓர் தார்மீகக் கடமையாக உள்ளதல்

# தற்போதைக்கு ஜனாதிபதி தேர்தல் ராஜபக்ஷவுக்கு தற்கேடான விடயம்

ஊவா மாகாணத்தில் நடந்து முடிந்த தேர்தலின் போது இடம்பெற்ற காடைத்தனமும் அரச இயந் திரத்தின் முழுமையான அனுசரணையுடனான பிரசார நடவடிக்கைகளும் எமக்கு திருமதி குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் வடமேல் மாகாணசபைக்கு நடத்தப் பட்ட தேர்தலை நினைவுக்குக்கொண்டுவந்தன. ஊவா தேர்தல் முடிவுகள் குறித்து நான் செப்டெம்பர் 14 ஆம் திகதி எதிர்வொன்றைக் கூறியிருந்தேன். மொனரா கலை மாவட்டத்தில் (இத்தடவை 3 ஆசனங்கள் கூடுத லாக) ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 8 ஆசனங் களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 5 ஆசனங்களும் ஜனதாவிமுக்தி பெரமுனைக்கு (ஜே.வி.பி) ஒரு ஆசன மும் கிடைக்கும் என்றும் பதுளை மாவட்டத்தில் (இத்த டவை 3 ஆசனங்கள் குறைவாக) ஆளும் கட்சிக்கு 10 ஆசனங்களும் ஐ.தே.க.க்கு 7 ஆசனங்களும் ஜே.வி.பி.க்கு ஒரு ஆசனமும் கிடைக்கும் என்றும் அதில் கூறியிருந்தேன். மாகாண சபையில் ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணிக்கு 18 ஆசனங்கள், ஐ.தே.க.க்கு 12 ஆசனங்கள், ஜே.வி.பி.க்கு 2 ஆசனங்கள், ஆளும் கட்சிக்கு ஆக 4 ஆசனங்களே பெரும்பான்மை என் பதே எனது கணிப்பீடாக இருந்தது. இது சரியாக அமைந்தால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு விளைவுகள் எத்தகையவையாக இருக்கும் என்றும் கேட்டிருந்தேன்.

பதுளை மாவட்டத்தைத் தவிர (அங்கு ஒரு ஆசனம் ஐ.தே.க.க்கு கூடுதலாக கிடைத்துவிட்டது) எனது கணிப்பீடு அனேகமாக சரியாகவே அமைந்துவிட்டது. நிலைவரம் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியைப் பொறுத்தவரை நெருக்குதலானதாகவே இருக்கிறது. ஊவா தேர்தல் முடிவுகளை தேசிய ரீதியான ஒரு குறி காட்டியாக நோக்குவதானால், ஜனாதிபதி தேர்தலின் முடிவுகள் எத்தகையதாக அமையும் என்று என்னிடம் யாரோ கேட்டார்கள். உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலையோ அல்லது பாராளுமன்றத் தேர்தலையோ தற்போது நடத்த முற்பட்டால், அது இந்த அரசாங்கத்துக்கு ஒரு தற்கேடாகவே முடியும் என் பதே எனது மதிப்பீடாகும். இன்னும் மேலதிகமாக, ஒரு சில மாதங்களில் அல்லது அண்மைய எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தலொன்றில் ஜனாதிபதி ராஜபக்ஷ போட்டியிடுவாரேயானால், அவருக்கு அது பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லவா? சுமந்திரன் அன்று பேசும் போது கூறினார். 'சட்டவியலில் 'Per incuriam rule' என்று ஒரு தத்துவம் உள்ளது. (இந்த லத்தீன் மொழித் தொடரின் அர்த்தம் யாதெனில் ஒரு நீதிமன்றம் ஏற்கனவே சட்டத்தில் உள்ள ஒரு விடயம் பற்றி அல்லது நீதிமன்றின் முற்தீர்ப்பு (a precedent) விதி ஒன்றைப் பற்றி மறதி காரணமாகக் கவனத்தில் கொள்ளாது தீர்ப்பை வழங்கினால், அத்தீர்ப்பு அந்நீதிமன்றினாலேயே தள்ளுபடி செய்யப்படலாம்) ஆகையால் இம் மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டால் பின்னர் ஒரு தடவை நீதிமன்றத்தினால் வலுவுடைய சட்டம் அல்ல என்று தள்ளுபடி செய்யப்படலாம்' அவ்வாறாயின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்த அனுமானத்தின் அடிப்படையில் இப்போது செயற்படவேண்டும் அல்லவா? சரத் சில்வாவினால் முன்வைக்கப்பட்ட இந்தக்கருத்து அவருடையது இக்கருத்திற்கான உரிமம் அவருக்கே உள்ளது என்று யாரும் கூற முடியாது. இக்கருத்தை பொது வழக்குக்காக (Public Litigation) மாற்றி பொது மக்கள் மத்தியில் எடுத்துச் சென்று பிரசாரப்படுத்துவதோடு அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தத்தை நீதிமன்றில் கேள்விக்குட்படுத்தல் வேண்டும். இதனைத் தனியொரு நபரோ அல்லது பலரோ இணைந்து செய்தல் முடியும். இக்கருத்தை முதன் முதலில் எடுத்துக்கூறியவர் தனிப்பட்ட நன்மை கருதியே கூறியிருத்தல் வேண்டும் என்பது நாம் இதனைப் பொதுக்கருத்தாக ஆக்குவதற்கு ஒரு தடையாக இருத்தல் முடியாது. பொது மக்களின் பங்களிப்பும் தலையீடும் அப்படியொரு தடை இருக்குமானால் அதை இல்லாமல் செய்துவிடும்.

தற்போதைய ஜனாதிபதி மூன்றாவது தடவையும் பதவியில் அமர்வதற்கு எடுக்கும் முயற்சிக்கு எதிராகப் பொதுசன அபிப்பிராயத்தைத் திரட்டும் கடப்பாடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு உள்ளது. இவ்வாறான ஒரு பிரசார இயக்கம் மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தடவையாக ஜனாதிபதி ஆவதைத் தடுத்து நிறுத்தி 2016 ஏப்ரலில் பாராளுமன்றத் தேர்தலை நடத்துவதைச் சாத்தியமாக்கும். இதன் பயனாக அடுத்து வரும் இரு வருட காலங்களில் மகிந்த பலமிழந்த ஒரு ஜனாதிபதியாகவே காலம் கடத்துவார். அவர் யாப்புச் சீர்திருத்தங்களையும் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டி ஏற்படும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இப்பிரசார இயக்கத்தில் பங்குகொள்வதால் பாராளுமன்றத்தில் செல்வாக்கைப் பெற்றுக் கொள்ள முடியும். எதிர்ப்புப் பிரசார இயக்கத்தையும் மீறி மகிந்த மூன்றாவது தடவையும் போட்டியிடுவாரேயானால் எதிர்க்கட்சியும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் மதிப்பிலும் செல்வாக்கிலும் குறைந்துபோன ஒரு

தற்கேடானதாகவே அமையும் என்ற முடிவுக்கே வரக்கூடியதாக இருக்கிறது.

ஊவா தேர்தல் முடிவுகள் சமூகத்தில் ஏற்படுத்தியிருக்கக்கூடிய மனப்போக்கு ஒரு வெற்றிக்குரிய போக்கு அல்ல, அரசியல் தோல்வி உணர்வேயாகும்.

ஊவா மாகாணத்தில் அரசாங்கம் பெருஞ் செல்வாக்கைக் கொண்டிருந்தது. அத்தகைய செல்வாக்குடைய மாகாணத்தில் நடத்தப்பட்ட தேர்தலில் 2009ஆம் ஆண்டில் 72.3 சதவீத வாக்குகளுடன் 25 ஆசனங்களைப்பெற்ற நிலையில் இருந்து இப்போது



**சஜித் பிரேமதாச அம்பாந்தோட்டையில் உள்ள அவரது குட்டி உலகத்திற்கு வெளியே ஒரு பெறுமதியான முக்கியஸ்தர் அல்ல. சஜித் பிரேமதாச இல்லாமலேயே ஹரின் பெர்னாண்டோ பதுளையில் ஐ.தே.க.வின் மீள் எழுச்சியை நிகழ்த்திக்காட்டியிருக்கிறார். சஜித்தை பெரியதொரு செல்வாக்கான தலைவர் என்ற நினைப்பை கைவிட்டு விடலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியாக மகிந்தவை ஆக்குவதில் வெற்றிகாண்பர்.

மேற்குறித்த சாத்தியப்பாடுகள் உள்ள பாதையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தேர்ந்துகொள்ள மறுப்பதன் மூலம் அது தென்னிலங்கை அரசியலில் இருந்து தன்னை அந்நியப்படுத்திக்கொண்டு ஒரு வெளிஆள் ஆகவே செயற்படும். தேசிய அரசியலில் இருந்து விலகி நிற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பேரம் பேசும் சக்தியும் குறைந்து போகும். இந்நிலையில் ராஜபக்ஷ 2014 நவம்பர் 18 இன் பின் எப்போதாவது ஒரு திகதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மூன்று வகையான தெரிவுகள் இருக்கும்.

1. தெற்கின் அரசியல் களத்தில் முன்வைக்கப்படும் 'பொது வேட்பாளர்' என்ற முன்மொழிவை கூட்டமைப்பு ஆதரிக்குமா? இப்போது பொதுவேட்பாளர் என்ற இந்த விடயம் சோபிததேரர் என்ற தனிநபரைச் சுற்றிச் சுழல்வதாக உள்ளது. அவர் மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி என்ற இரு கட்சிகளினதும் சம்மதத்தை இன்னும் பெறவில்லை. சோபிததேரரை பொது வேட்பாளராக ஏற்றுக்கொண்டால் 'மஞ்சள் காவி உடையின் எழுச்சியை' சிங்கள சமூகத்தினால் அங்கீகரித்துக் கொள்வதாக ஆகிவிடும். சோபிததேரர் தன் 'செல்வழி' (Road map) என்று கூறியிருப்பதில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு எதனையும் கொடுப்பதாகச் சொல்லவேயில்லை. இதனால் அவர் 'பௌத்த சிங்கள வேட்பாளராகவே' முன்னிறுத்தப்படுவார். ஆகையால் சோபித தேரரை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்க முடியாது. சரத் பொன்சேகாவை ஜனவரி 2010 இல் (சில விமர்சனங்களை தமக்குள் வைத்துக் கொண்டபடி) ஆதரித்தது போல் கூட சோபித தேரரை ஆதரிக்க முடியாது. சரத் பொன்சேகாவை யுத்தம் முடிந்து ஆறுமாதங்கள் கடந்த நிலையில் ஆதரித்தனர். அப்போது தமிழ்ச்சமூகம் சிதைவுற்ற நிலையில் இருந்தது. மீண்டு எழுந்து தன்னை அரசியல் அரங்கில் எப்படி நிலைநிறுத்தலாம் என்று அது தடுமாறிக் கொண்டிருந்தது. 'பொது எதிரணி' என்ற கருத்து அப்போது தப்பிக்கும் வழியாக இருந்தது என்று வாதிட இடமுள்ளது. ஆனால் இப்போது அந்த நிலை இல்லை. யுத்தம் முடிந்து ஐந்து ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாக மாறியுள்ளது. கூட்டமைப்பு அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக கூறியுள்ள ஆகக்குறைந்த நிபந்தனைகளு க்கும் கீழே போவதற்கோ இராணுவமயமாக்கல், வடக்கு, கிழக்கில் சிவில் நிர்வாகம் ஆகிய விடயங்களில் விட்டுக் கொடுப்புகளுக்கு இணங்கிப் போகவோ முடியாது. நில அபகரிப்பு, மீளக்குடியமர்வு, நல்லிணக்கம்

52.8 சதவீதவாக்குகளுடன் 17 ஆசனங்களைப் பெற்றிருப்பதென்பது சாதாரண வீழ்ச்சியேயல்ல. இத்தேர்தலில் ஐ.தே.க. வெளிக்காட்டியிருக்கும் வியக்கத்தக்க செயற்பாடு பெரும் முதலாளித்துவ வர்த்தக சமூகத்தின் மத்தியில் அக்கட்சிக்கு சார்பான போக்கைத் தோற்றுவிக்க நிச்சயம் உதவும். ஐ.தே.க. நிதியைத்தேடுவது பெரும் கஷ்டமான காரியமாக இருக்கப்போவதில்லை. அரச உயரதிகாரிகள் கடந்த 5 வருட காலமாக செய்து வந்ததைப் போன்று இழிவான கையாள் வேலைகளைச் செய்வதற்கும் அரசியல் உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவதற்கும் சற்று தயங்குவார்கள். அசௌகரியப்படுவார்கள்.

இத்தேர்தல் முடிவுகள் ஐ.தே.க, வினர் மத்தியில் துணிச்சலான மனோ நிலையைத் தோற்றுவிக்கும். அதனால் எதிர்காலத் தேர்தல்களில் ஐ.தே.க.க்கு மக்களை அணிதிரட்டுவதென்பது பெரும் சிரமமானதாக இருக்கப்போவதில்லை. ராஜபக்ஷவின் அரசாங்கம் கூட, சிங்கள பௌத்த வாக்குகளை மாத்திரம் பெற்றுக் கொண்டு தேர்தலில் சுலபமாக வெற்றிபெற்றுவிட முடியுமென்று நினைத்துச்செயற்பட முடியாத சூழ்நிலையை ஊவா தேர்தல் முடிவுகள் உணர்த்தியிருக்கின்றன.

2009 மே யில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாகப் பிரகடனம் செய்யப்பட்ட போது சிங்களக் கிராமங்களில் உள்ள இளைஞர்களோ கிராம மக்களோ சிங்கக் கொடிகளை ஏந்திக்கொண்டு வீதிகளில் அட்டகாசம் செய்யவில்லை. ஆட்களுக்கு வலுக்கட்டாயமாக பால்சோறு ஊட்டவில்லை. அந்தக் காரியங்களைச் செய்ததெல்லாம் கொழும்பிலும் ஏனைய சில முக்கிய நகரங்களிலும் சிங்கள தீவிரவாதப் போக்குடைய சக்திகளினால் கூலிக்கமர்த்தப்பட்ட நகர்ப்புறச் சக்திகளேயாகும். இதை ஐ.தே.க. தலைமைத்துவம் கூட விளங்கிக் கொள்ளவில்லை.

ஜாதிக ஹெலஉறுமய தேர்தல்களில் காவியுடை

**அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் அதிருப்தியும் வெறுப்பும் ஒரு அரசியல் போக்காக உற்சாகப்படுத்தப்படும் போதுதான் அரசாங்கத்தை தோற்கடிக்கக்கூடிய வல்லமையை எதிர்க்கட்சிகளால் பெறக் கூடியதாக இருக்கும். அத்தகையதொரு அனுகூலமான அரசியல் சூழ்நிலையை தோற்றுவிப்பது எதிரணிக்கட்சிகளின் விவேகத்திலும் துணிச்சலிலுமே தங்கியிருக்கிறது.**

அணிந்தவர்களை நிறுத்திய போது கிராமப்புற வாக்காளர்கள் அவர்களுக்கு வாக்களிக்கவில்லை. கொழும்பில் உள்ள சிங்கள மத்திய வர்க்கத்தினரும் நகர்ப்புற வர்த்தகர்களுமே அவர்களுக்கு வாக்களித்தார்கள்.

இத்தடவை ஊவா மாகாணசபைத் தேர்தலில் கூட, பதுளையில் ராஜபக்ஷாக்கள் ஐ.தே.க. விடவும் கூடுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணில் இந்தத்தடவையாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்று துடியாய்த் துடிப்பார். அவரிடம் 30% வாக்குவங்கி ஒன்று உள்ளது. இதனோடு புதிதாக ஒரு தொகுதி வாக்குகள் சேரவேண்டும். அதனை 10%தால் உயர்த்தி 40%மாக ஆக்க வேண்டும். அப்போதுதான் அவர் நம்பிக்கையோடு தன் தேர்தல் பிரசார வேட்டையை ஆரம்பிக்கலாம்.

ஆகியவற்றிலும் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை.

இவ்விடயங்களில் சிங்கள பௌத்தர்களின் பொது வேட்பாளராக நிற்கப்போகும் சோபித தேரரிடம் தமிழ் மக்களுக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் பதில் சொல்வதற்கு எதுவும் இல்லை.

ரணில் விக்கிரமசிங்கவை பொது வேட்பாளராகத் தாம் ஆதரிக்கப் போவதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அறிவித்தல் முடியுமா? அவ்வாறு செய்தல் 'பொது வேட்பாளராக' சோபிததேரரை நிறுத்துவதை நிராகரிப்பதாகவும் அமையும். அத்தோடு மக்கள் விடுதலை முன்னணி தமது வேட்பாளரைத் தெரிவு செய்வதையும் தூண்டுவதாக இருக்கும். ரணில் விக்கிரமசிங்கவின் மேடைகளில் தென்பகுதியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தோன்றிப் பிரசாரத்தில் ஈடுபடும் வாய்ப்பும் கிட்டும். ஆனால் இவை யாவும் சாத்தியப்படுவதற்கு ஒரு முன்தேவை உள்ளது. ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சில உறுதிமொழிகளையும் கூறவேண்டும். நல்லிணக்க ஆணைக்குழுவின் (எல்.எல்.ஆர்.சி) சிபார்சுகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும் என்ற வெற்று வார்த்தைகளும், தெளிவற்ற கூற்றுகளும் ரணிலை ஆதரிப்பதற்கான முடிவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுப்பதற்கு உதவமாட்டாது.

ரணில் இந்தத் தடவையாவது தான் வெற்றிபெற்று விடவேண்டும் என்று துடியாய் துடிப்பார். அவரிடம் 30வீத வாக்குவங்கி ஒன்று உள்ளது. இதனோடு புதிதாக ஒரு தொகுதி வாக்குகள் சேர வேண்டும். அதனை பத்து வீதத்தால் உயர்த்தி 40 வீதமாக உயர்த்த வேண்டும். அப்போதுதான் அவர் நம்பிக்கையோடு தன் தேர்தல் பிரசார வேட்டையை ஆரம்பிக்கலாம். ஆனால் இப்பத்து வீதத்தை தென்பகுதியில் இருந்து ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொள்ளும் சாத்தியம் இல்லை. நகரங்களிலும் கிராமங்களிலும் வாழும் சிங்கள இளை

வாக்குகளைப் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் சிங்கள வாக்காளர்கள் அல்ல, பெருந்தோட்டப்புற தமிழ் மக்களேயாவர். பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு கிடைத்த 9 ஆசனங்களில் மூன்று ஆசனங்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு போயிருப்பதன் மூலம் இது தெளிவாகிறது.

ஊவா தேர்தலில் இருந்து ஐ.தே.க. படிக்க வேண்டிய இன்னொரு முக்கியமான பாடம் இருக்கிறது. சிங்கள மக்கள் நம்பவேண்டுமென்று ஊடக மகாராஜாக்கள் எதைத்தான் நினைத்தாலும், சஜித் பிரேமதாச அம்பாந்தோட்டையில் உள்ள அவரது குட்டி உலகத்துக்கு வெளியே ஒரு பெறுமதியான முக்கியஸ்தர் அல்ல, ஐ.தே.க. செல்வாக்கு அதிகரிப்பதற்கு சஜித் பிரேமதாச ஒரு கனதியான காரணியாக இருந்திருந்தால், அக்கட்சி மொனராகலை மாவட்டத்தில் பெற்றதையும் விட (31.9 சதவீதம்) கூடுதலான வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும். சஜித் பிரேமதாச இல்லாமலேயே ஹரின் பெர்னாண்டோ பதுளையில் ஐ.தே.க. மீள் எழுச்சியை நிகழ்த்திக் காட்டியிருக்கிறார். அந்த மாவட்டத்தில் ஐ.தே.க.க்கு 45 சதவீதமான வாக்குகள் கிடைத்திருக்கின்றன. சஜித்தை பெரியதொரு செல்வாக்கான தலைவர் என்ற நினைப்பை இனிமேல் கைவிட்டுவிடலாம்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் தலைவர்களை அவர்களது மக்கள் முற்றாகவே நிராகரித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பேரம் பேசுவதற்குக் கூட அந்த முஸ்லிம் தலைவர்களுக்கு அருகதையோ தெம்போ இல்லாமற் போய்விட்டது. ராஜபக்ஷாக்களுக்கு எதிரான முஸ்லிம் வாக்குகள் ஐ.தே.க.வுக்குப் போய்விடாமல் தடுப்பதற்காக ரவூப் ஹக்கீமையும் ரிஷாத் பதியுதீனையும் கூட்டுச்சேர வைத்த- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் + அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கூட்டணி பதுளையில் இருந்தும் மொனராகலையில் இருந்தும் வெறுமனே 10,600 வாக்குகளை மாத்திரம் பெற்று பரிதாபத்துக்குரிய தோல்வியைத் தழுவியிருக்கிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செல்வாக்கு 72சதவீதத்திலிருந்து 52.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்த அதேவேளை, ஐ.தே.க. செல்வாக்கு இருமாவட்டங்களிலும் பாரிய அளவில் அதிகரித்திருக்கிறது. பதுளையில் அக்கட்சியின் செல்வாக்கு 25.8 சதவீதத்திலிருந்து 44.8 சதவீதமாகவும் மொனராகலையில் 15.5 சதவீதத்திலிருந்து 31.9 சதவீதமாகவும் அதிகரித்திருக்கிறது. ஊவா மாகாணத்தை ஒட்டுமொத்தமாக நோக்கும் போது ஐ.தே.க. வாக்குத்தளம் 23.3 சதவீதத்திலிருந்து 38.4 சதவீதத்துக்கு பெரும் பாய்ச்சலைச் செய்திருக்கிறது.

ராஜபக்ஷ அரசாங்கம் அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்து, சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி, சட்ட மீறல்களைச் செய்து முன்னெடுத்த பிரசாரங்களுக்கு மத்தியில் ஐ.தே.க. செல்வாக்கு முன்னேற்றத்தை நிகழ்த்திக்காட்டியிருக்கிறது. ஆட்சியாளர்கள் நீதிமன்ற உத்தரவொன்றைப் பயன்படுத்தி தேர்தல் ஆணையாள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர்களை அவரால் கவர்ந்திழுக்க முடியாது. நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையே உள்ள பொருளாதார இடைவெளியைக் குறைப்பதற்கு ஏற்ற தெளிவான சமூக பொருளாதார அபிவிருத்தி நோக்கு ஒன்று அவரிடமிருந்து வருவதற்கான வாய்ப்பு இல்லை. இதனால் நகரத் தொழிலாளர்களையும், கிராமத்தவர்களையும் அவரால் கவர்ந்திழுக்க முடியாது. பதவிக்கு வரவேண்டும் என்ற பேராசையும், மேடைகளில் தலைவர்களை நிறுத்திப் புகைப்படம் எடுத்து வைத்துக்கொண்டு இப்போது ஐக்கியப்பட்டு விட்டதென்று வெற்றுப் பிரசாரம் நடத்துவதும் அதிக நன்மைகளைத் தரப்போவதில்லை. 30 வீதமாக இருக்கும் வாக்குப்பலம் 35வீதமாகக் கூடலாம். ஆனால் இன்னும் 15வீத வாக்குகளைக் கவர வேண்டும். இது சாத்தியமா? சஜித் விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆகக்குறைந்த கோரிக்கைகளை ஏற்றுத்தான் ஆக வேண்டிவரும். இதனைவிட முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி பௌத்த தீவிரவாதம் குறித்த தெளிவான நிலைப்பாட்டை எடுத்தலும் வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் வடக்கு, கிழக்கில் 6 இலட்சம் முதல் 6.5 இலட்சம் வாக்குகள் உள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களிலும் மாகாண சபைத் தேர்தல்களிலும் கூட்டமைப்பு இதனை நிரூபித்துள்ளது. இந்தளவு வாக்குகள் தான் 2005 ஜனாதிபதித் தேர்தலின் போது ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கிடைக்காமல் செய்யப்பட்டவை. ராஜபக்ஷ 0.02 வீத வாக்கு வித்தியாசத்திலேயே அப்போது வெற்றிபெற்றார். இந்த வாக்குகள் தான் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு உதவக்கூடியவை. கூட்டமைப்பின் இந்த வாக்குப்பலத்தைக் கொண்டு தான் தனது ஆகக்குறைந்த கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும்.

ரணில் விக்கிரமசிங்க சஜித் பிரேமதாசாவைக்கட்சியின் பிரதித் தலைவராக்கி சமரச உடன்பாட்டிற்கு வந்துள்ளார். சஜித் தொடர்ச்சியாக யுத்தத்தை ஆதரித்தவர், யுத்தம் பற்றி எந்த விசாரணையும் தேவையில்லை என்று கூறிவந்தவர், குற்றங்கள், பொறுப்புக்கூறல் பற்றியும் மாகாணசபைகளுக்கு காணியதிகாரம் வழங்குதல் என்பனவற்றில் விட்டுக்கொடுக்காத தீவிர நிலைப்பாட்டை உடையவர். அவர் கட்சியின் இரண்டாம் நிலைத் தலைவராகியதும் தனது இனவாதக் கருத்துகளை கைவிடப்போவதில்லை. தன்னிடம் உள்ள சிங்கள தேசியவாதம் தான் ரணில் விக்கிரமசிங்கவைத் தன்பக்கம் இழுக்கிறது என்று சஜித் நம்புகிறார். நிலைமை இவ்வாறிருக்க ரணில் எவ்வாறு சிறுபான்மையினரிடம் வாக்குக் கேட்கப் போகிறார்.

ரணில் சிறுபான்மை மக்களுடன் உடன்பாட்டுக்கு வரத்தவறினால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்

ரின் உத்தரவுகளை அலட்சியம் செய்து ஒரு இலட்சம் மக்களுக்கு (தலா 2500 ரூபா வீதம்) வரட்சி நிவாரணத்தை விநியோகித்தனர். என்றாலும் கூட, அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் உணர்வுகள் பெருமளவுக்கு அதிகரித்து வருகின்றது என்பது தெளிவாகியிருக்கிறது.

அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் அதிருப்தியும் வெறுப்பும் ஒரு அரசியல் போக்காக உற்சாகப்படுத்தப்படும் போதுதான் அரசாங்கத்தைத் தோற்கடிக்கக்கூடிய வல்லமையை எதிர்க்கட்சிகளினால் பெறக்கூடியதாக இருக்கும். அத்தகையதொரு அனுகூலமான அரசியல் சூழ்நிலையைத் தோற்றுவிப்பது எதிரணிக் கட்சிகளின் விவேகத்திலும் துணிச்சலிலுமே தங்கியிருக்கிறது.

ராஜபக்ஷாக்களின் செல்வாக்கு படிப்படியாக சுருங்கிக்கொண்டு போகும் நிலையில், ஐ.தே.க இப்போது 40 சதவீதத்துக்கும் கூடுதலான வாக்கு வங்கியை கையிருப்பில் வைத்துக்கொண்டு சிங்கள தெற்கில் ஜனாதிபதி தேர்தலுக்கான அதன் பிரசாரங்களை எளிதாக முன்னெடுக்க முடியும். இதை ராஜபக்ஷாக்கள் ஒரு பகிடியாக எடுக்கக்கூடாது. சிங்கள வாக்குகளை மாத்திரம் குறிவைக்குமாறு தனக்கு ஆலோசனை வழங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு சில தான்தோன்றித்தனமான பேர்வழிகளின் கதைகளை ரணில் விக்கிரமசிங்க அலட்சியம் செய்து, சகல இனங்களுக்கும் மதங்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஏற்புடையதானதொரு ஜனநாயக வேலைத்திட்டத்தை முன்வைப்பாரேயானால், ஜனாதிபதித்தேர்தலில் வெற்றி பெறுவதற்குத் தேவையான எஞ்சிய 11 சதவீத வாக்குகளையும் ஐ.தே.க. பெறக்கூடியதாக இருக்கும்.

வடக்கிலும் கிழக்கிலும் தற்போது இருக்கும் ஆளுநர்களை மாற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிவிலியன் அதிகாரிகளை அப்பதவிகளுக்கு நியமிப்பதாகவும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை முழுமையாகவும் பயனுறுதியுடைய முறையிலும் நடைமுறைப்படுத்துவதாகவும் உறுதியளித்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகளை விக்கிரமசிங்க ஆரம்பிப்பது இதுவிடயத்தில் பொருத்தமான அணுகுமுறையாக இருக்கும்.

அத்தகையதொரு பரந்தளவிலானதும் விட்டுக்கொடுப்புகளைச்செய்து சகல இனங்கள், மதங்களையும் அரவணைத்துச் செல்லக்கூடியதுமான ஒரு விஞ்ஞாபனத்தின் அடிப்படையில் தனது அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் விக்கிரமசிங்க அக்கறை காட்டுவாரானால், தேசியத்தேர்தலொன்றில் அவர் 52 சதவீத வாக்குகளை எதிர்பார்க்க முடியும்.

இவ்வாறான சூழ்நிலையொன்று தோன்றும்பட்சத்தில், மகிந்த ராஜபக்ஷவின் சாதகப்பலனின்படி இப்போது தேர்தலுக்குப் போவது நல்லதென்று இருந்தால் கூட, தற்போதைக்கு ஒரு ஜனாதிபதி தேர்தல் அவருக்கு தற்கெடுதியாகவே முடியும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னொரு மாற்றுவழியைத் தேட வேண்டும்.

3. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனித்து ஒரு ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்த முடியுமா தமிழர்களதும், முஸ்லிம்களினதும் வாக்குகளைப் பெறுவதற்காக ரணில் ஒரு உடன்பாட்டிற்கு வரத்தவறினால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு 2015 ஜனாதிபதித் தேர்தலில் தானே ஒரு தீர்மானத்திற்கு வரவேண்டும். யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையில் ஜனாதிபதி பதவிக்குத் தமிழ்வேட்பாளர் ஒருவர் போட்டியிடுதல் எந்தளவு பொருத்தம் உடையது? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு ஜனாதிபதி வேட்பாளரை நிறுத்தி வடக்கு, கிழக்கின் 75 வீத வாக்குகளைவென்று, தெற்கில் உள்ள தமிழர்கள், கொழும்புத்தமிழர், மலையகத் தமிழர்கள் ஏனைய மிதவாதிகளின் வாக்குகளையும் பெறமுடியுமானால் யார் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவார் என்பது இரண்டாவது விருப்பு வாக்குகளை எண்ணுவதன் மூலமே தீர்மானிக்கப்படும். அதுமட்டுமன்றி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யபடுபவர், தமிழர் தரப்பு அழுத்தங்களுக்குப் பணிந்துதான் முடிவுகளை எடுத்தல் வேண்டும். 18ஆவது திருத்தத்தின்படி ஜனாதிபதி மூன்றாவது தடவை போட்டியிடுவதற்குத் தகுதியற்றவர் என்ற பிரசார இயக்கத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இப்பொழுது இறங்க வேண்டும். அதன் மூலம் தென்பகுதி அரசியலில் அது தனக்கு ஒரு செயற்பாட்டு வெளியை உருவாக்கிக் கொள்ளலாம். அதன் மூலம் தேசிய அரசியலில் புகுந்து கொள்ளலாம். அது எல்லோருக்கும் பயன்தரும் அவசியமான விடயமாகும். ■

*(03ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

முடியுமென்றால் எந்தப் பிரச்சினையையுமே கருணாநிதி பயன்படுத்தத் தவறியதில்லை. திராவிட இயக்க அரசியலின் இந்த எழுதப்படாத விதிக்கு இலங்கைத் தமிழர்களின் அவலங்களும் கூட விதிவிலக்கானதாக இருந்ததில்லை. பிரதான திராவிடக் கட்சிகளுக்கிடையிலான இந்த ஏட்டிக்குப் போட்டியான போக்குகள் தமிழக அரசியல்சக்திகள் மத்தியில் இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் ஓரளவுக்கேனும் கருத்தொருமிப்பை ஏற்படுத்துவதற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்துவந்துள்ளன என்பது தமிழர்கள் மத்தியில் நிலவுகின்ற பரவலான கருத்தாகும்.

போர்க் காலகட்டத்தையும்விட போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் தான் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் தமிழகத்தில் கூடுதலான அளவுக்கு அக்கறை காட்டப்பட்டு போராட்ட இயக்கங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கின்றன என்று கூறலாம். இந்த உணர்வு நிலையைத் தணியவிடாமல் வைத்திருக்கக்கூடியதாகவும் ஏனைய தமிழக அரசியல் சக்திகள் தன்னைவிட இதுவிடயத்தில் மேம்பாடான நிலைக்குச் சென்றுவிடாதிருப்பதை உறுதி செய்யக்கூடியதாகவும் ஜெயலலிதா தீவிரமான நிலைப்பாடுகளை எடுத்து சட்டசபையிலும் பெருவாரியான தீர்மானங்களை நிறைவேற்றியதைக் காணக்கூடியதாக இருந்தது. அவர் சிறைக்குப் போகும் வரை இலங்கைப் பிரச்சினையை மையப்படுத்தி தமிழகத்தின் முக்கிய கட்சிகளில் எதுவுமே ஜெயலலிதாவை முந்திச்செல்ல முடியாத நிலை இருந்தது. அத்தகைய பின்புலத்தில் ஜெயலலிதா உள்ளே இருக்கும் நிலையில், ஏட்டிக்குப் போட்டியான போக்குகளில் தணிவு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இது இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஆரோக்கியமான அணுகுமுறைக்கு வழிவகுக்குமா அல்லது ஒருமைப்பாட்டு உணர்வு நிலையில் தணிவு ஏற்படக் காரணமாகுமா? ■

*(09ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

இந்த ஏற்பாடு சீன ஆட்சியாளர்களினால் தெரிந்தெடுக்கப்படும் வேட்பாளர்களே ஹொங்கொங் ஆட்சித் தலைவருக்கான தேர்தலில் போட்டியிட வழிவகுக்கும். இதையொரு பாரதூரமான ஜனநாயகவிரோதச் செயல் என்று கருதும் ஹொங்கொங் மக்கள் தங்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளை ஒவ்வொன்றாக மறுதலிப்பதற்கான காரியங்களில் பெய்ஜிங் இறங்கியிருப்பதாக அஞ்சுகிறார்கள்.

'ஒரு நாடு, இரு சமூக அமைப்புகள்' என்ற கொள்கையின் கீழ் 70 இலட்சம் மக்களைக் கொண்ட ஹொங்கொங் சீனாவின் 'விசேட நிருவாகப் பிராந்தியம்' என்று வரையறுக்கப்பட்டுள்ளது. சீனாவுக்கு கையளிக்கப்பட்ட பிறகு 50 வருடங்களுக்கு - அதாவது 2047 வரை ஹொங்கொங் மிகக் கூடுதலானளவு சுயாட்சியை அனுபவிக்க அனுமதிக்கப்படும் என்பதே உறுதிமொழி. ஆனால், ஹொங்கொங் அதன் ஆட்சித் தலைவரைத் தெரிவு செய்வதற்கான வழிமுறை தொடர்பில் சீன ஆட்சியாளர்கள் மேற்கொண்டிருக்கும் தீர்மானம் அந்தப் பிராந்திய மக்களின் சுதந்திரங்களை அரித்தெடுத்துவிடப் போகிறது. இதுவே தற்போதைய கொந்தளிப்புக்கு காரணம். ■

*(17ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

கட்சியினர் ராஜபக்ஷாக்களை எதிர்க்க வேண்டும்' என்று நான் முன்பு கூறியிருந்தேன். ஐ.தே.க.க்கு ஐக்கியம் என்பதும் சுதந்திரக் கட்சிக்குள் பிளவு என்பதுமே இதன் அர்த்தமாகும்.

நாட்டில் ஜனநாயகம் மீட்டெடுக்கப்பட வேண்டுமென்றால் அரசியலும் ஆட்சிமுறையும் கண்ணியமும் நாகரிகப் பண்பும் கொண்டதாக இருக்கவேண்டுமானால் ஊவா மாகாண சபைத் தேர்தலில் இருந்து படிக்கக்கூடிய இன்னொரு கூடுதல் பாடம் இருக்கிறது. அதாவது, எதிரணிக்கட்சிகள் மத்தியில் ஐக்கியம்வேண்டும். இது மிகவும் சிரமம்மிக்கதாகவும் விட்டுக் கொடுப்புகள் தியாகங்களை வேண்டி நிற்பதாகவும் இருக்கக்கூடும். ஐக்கியம் என்பது எண்கணிதத்துடனோ அல்லது தூயகணிதத்துடனோ சம்பந்தப்பட்ட ஒரு விவகாரம் அல்ல. இலக்கங்களைக் கூட்டுவது என்பதைவிடவும் ஐக்கியத்தில் உள்ள முக்கியத்துவம் என்னவென்றால், அதனால் மாற்றத்துக்கான புதிய சக்தியை யும் வலிமையையும் தோற்றுவிக்கக்கூடியதாக இருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பி.பேர்ட்டி ரணவீரகே



# மகிந்தவை தோற்கடிக்க ரணிலால் முடியுமா?



ஊவா மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெளிக்காட்டிய சிறப்பான செயற்பாடு மற்றும் அதன் தலைவர்கள் மத்தியில் ஏற்பட்ட ஐக்கியம் ஆகியவற்றின் விளைவாக எதிர்வரும் மாதங்களில் மேலும் பலம்பொருந்தியதாக வளரும் என்பதிற் சந்தேகமில்லை. 2015 ஏப்ரில் மாதத்துக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைத் தோற்கடிக்கப் போதுமான அளவுக்கு அக்கட்சி பலம்பெறுமா என்பது நூறு கோடி டொலர்கள் பெறுமதியான கேள்வி. எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படக்கூடும் என்று செய்திகள் வருகின்றன.

எதிர்காலத் தேர்தல் க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ளைச் சந்தித்து மீண்டும் வெற்றி பெறுவதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் தயாராகி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு சிறுதொகைப் பணத்துக்கு குறைந்தபட்சம் ஒரு இலட்சம் மோட்டார் சைக்கிள்களை விநியோகிக்கும் திட்டத்தை சில தினங்களுக்கு முன்னர் ஆரம்பித்தது. ஒரு மோட்டார் சைக்கிளின் வெளிச்சந்தை விலையின் நான்கில் ஒரு பங்கையே இந்த அரசாங்க ஊழியர்கள் செலுத்த வேண்டியிருக்கும். இந்த மோட்டார் சைக்கிள் விநியோகத்திட்டத்தினால் பயன்பெறுபவர்கள் அண்மையில் நிறுவப்பட்ட திவிநெகும திணைக்களத்தின் ஊழியர்களும் கிராம சேவகர்களுமாகவே இருக்கிறார்கள். இத்தகைய ஒரு சலுகை விலையில் இலங்கையின் எந்தவொரு அரசாங்கமுமே அதன் ஊழியர்களுக்கு துவிச்சக்கர வண்டியைக் கூடக் கொடுத்ததில்லை.

மூன்று வாரங்களுக்கு முன்பு சமுர்த்திவங்கி கட்டமைப்பு ஊடாக கடன் வழங்கும் திட்டமொன்றை அரசாங்கம் ஆரம்பித்தது. சமுர்த்தி வங்கியொன்றில் கணக்கு வைத்திருக்கும் எவரும் ஒரு வருடகால சலுகையில் எந்தக் காரணத்தைக் கூறியும் 50 ஆயிரம் ரூபாவை இத்திட்டத்தின் கீழ் கடனாகப் பெறமுடியும். ஒரு வருடத்துக்குப் பிறகு நான்கு சதவீத வட்டியுடன் அக்கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடனைப் பெறுபவர்கள் அதை ஒரு போதுமே திருப்பிச் செலுத்த வேண்டியிருக்காது என்றும் கூட ஒரு வதந்தி. இக்கடன் திட்டம் நாடுபூராகவும்முள்ள சமுர்த்தி வங்கிகளின் அழிவுக்கு வழிவகுக்கும் என்று அதன் ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப்படுகிறார்கள்.

2015 முதல் மூன்று மாதங்களுக்குள் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படும் தேசியத் தேர்தல்களுக்கு முகம்கொடுப்பதற்கு தயாராகும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் ஒன்றே மின்சாரக் கட்டணங்களையும் எரிபொருட்களின் விலைகளையும் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும்.

அடுத்த பட்ஜெட்டில் சாமானிய மக்களுக்கு மேலும் கூடுதல் நிவாரணங்களை அரசாங்கம் அறிவித்தால் அதில் ஆச்சரியம் ஏதுமில்லை. அரசாங்க ஊழியர்களுக்கு கணிசமான சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்க முடியும். ஓய்வூதியக்காரர்களுக்கும் ஏனைய பிரிவினர்களுக்கும் நிவாரணமளிக்கக்கூடிய திட்டங்களும் பட்ஜெட்டில் முன்வைக்கப்படலாம். நாட்டின் பொருளாதாரத்தின் மீது ஏற்படக்கூடிய எதிர்மறையான தாக்கத்தைப் பற்றியெல்லாம் அக்கறைப்படாமல் எதிர்காலத் தேர்தல்களில் வெற்றிபெறுவதற்காக தன்னால் செய்யக்கூடிய சகலதையும் அரசாங்கம் செய்துகொண்டிருக்கின்றது போலத் தோன்றுகிறது.

ஊவா மாகாணசபைத் தேர்தலுக்குப் பிறகு புதிதாக உத்வேகமடைந்திருக்கும் அரசாங்க எதிர்ப்பு சக்திகளை அச்சுறுத்தும் அல்லது அதைரியப்படுத்தும் ஒரு முயற்சியாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் குண்டர்கள் ஐ.தே.க.வினர் மீதும் ஜே.வி.பி.யினர் மீதும் தாக்குதலை நடத்தி எவ்வாறு பயங்கரத்தைக் கட்டவிழ்த்துவிட்டனர் என்பதை நாம் கண்டோம். அரசாங்கத்துக்கு எதிரான அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் அச்சுறுத்துமுகமாக எதிர்காலத் தேர்தல்களுக்கு முன்னரான காலகட்டம் பூராகவும் முன்னென்றுமில்லாத பயங்கர நடவடிக்கைகளை அரசாங்கத்துக்கு சார்பான குண்டர்கள் அவர்களின் ஆசான்களின் ஆசீர்வாதத்துடன் நாடு பூராகவும் கட்டவிழ்த்துவிடுவர் என்பதே எனது நம்பிக்கை. ஏனென்றால், அரசாங்கமும் ஜனாதிபதியும் தேர்தல்களில் தோல்வியடையும் பட்சத்தில் அமைச்சர்களும் எம்.பி.க்களும் அவர்களின் பரிவாரங்கள் மற்றும் அடியாட்களும் வசதிவாய்ப்புகளை இழக்கவேண்டிவருமல்லவா?

இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் 2015 முதல் மூன்று மாத காலத்திற்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் பட்சத்தில், அதில் ரணில் விக்கிரமசிங்கவினால் வெற்றிபெறக்கூடியதாக இருக்குமா?

ஊவா மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் நாடுபூராகவும் மக்கள் மத்தியில் இருக்கும் உணர்வுகளைப் படம் பிடித்துக்காட்டியிருக்கிறதா என்பதில் எனக்குச் சந்தேகமே. பதுளை மாவட்டத்தில் ஐ.தே.க. சிறப்பான செயற்பாட்டை வெளிக்காட்டக்கூடியதாக இருந்த போதிலும், மொனராகலை மாவட்டத்தில் பெரியளவுக்கு செல்வாக்கை வெளிக்காட்ட முடியவில்லை என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இது ஐ.தே.க.வினர் மறந்துவிடமுடியாத ஒரு கசப்பான உண்மையாகும். அத்துடன் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் ஒரு

ஊவா தேர்தலுக்குப்பிறகு உத்வேகம் அடைந்திருக்கும் அரசாங்க எதிர்ப்பு சக்திகளை அச்சுறுத்தும் முயற்சியாக ஆளும் கட்சிக் குண்டர்கள் ஐ.தே.க.வினர் மீதும் ஜே.வி.பி.யினர் மீதும் தாக்குதல் நடத்தினர். அரசாங்கத்திற்கு எதிரான கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எதிராக எதிர்கால தேர்தலுக்கு முன்னரான காலகட்டம் பூராகவும் முன்னென்றும் இல்லாத பயங்கரத்தை நாடுபூராவும் ஆளும் கட்சிக் குண்டர்கள் கட்டவிழ்த்து விடுவர் என்பது எனது நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாண சபையைத் தானும் ஐ.தே.க. கைப்பற்றக்கூடிய தாக இருக்கவில்லை. அடிமட்டத்தில் அக்கட்சி இது வரை தாறுமாறாகிக் கிடக்கிறது. பதுளையில் இறுதி யாக நடைபெற்ற கூட்டத்தைத்தவிர, கடந்த சில வரு டங்களாக நடத்திய கூட்டங்களுக்கு கணிசமானளவு சனக்கூட்டத்தை ஐ.தே.க. கவரக்கூடியதாக இருக்க வில்லை. கொழும்பில் அக்கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்ட இயக்கங்கள் சகலதுமே முற்று முழுதான தோல்வியிலேயே முடிந்தன.

உயர்மட்டத்தில் ஐக்கியத்தை ஏற்படுத்த ஐ.தே.க. இயலுமாக இருந்திருக்கின்றபோதிலும், தேர்தல் ஒன்றில் தன்னந்தனியனாக நின்று வெற்றிபெறுவதற்கு குறைந்தபட்சம் ஒருவருடமாவது அதற்குத் தேவை என்பதே எனது உறுதியான அபிப்பிராயம். 1970 களை ஒரு கணம் திரும்பிப் பார்ப்போமேயானால், சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அர சாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு அன்றைய ஐ.தே.க. தலைவர் ஜே.ஆர். ஜெயவர்தன எத்தனை வருடங் களாக சளைக்காத பிரசார இயக்கங்களை மேற்கொண் டார் என்பது எமது நினைவுக்கு வரும். 1977 பொதுத் தேர்தலுக்கு முன்னரான காலகட்டத்தில் குறைந்த பட்சம் மூன்று வருடங்களாக ஜெயவர்தனவும் அவரது ஐ.தே.க.வும் நாடுபூராகவும் வெற்றிகரமான பெருவாரி யான எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினார்கள். அடிமட்டத்தில் ஐ.தே.க.மிகவும் பலம் பொருந்தியதாக இருந்த காரணத்தினால் மாத்திரமல்ல, சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியில் பல வருடங்களாக நாடுபூராகவும் நிலவிய பஞ்சம், பட்டினி காரணமா கவும் 1977ஆம் ஆண்டு ஜெயவர்த்தனவினால் பெரு வெற்றியைப் பெறக்கூடியதாக இருந்தது. அதற்கு மேலதிகமாக, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டர சாங்கப் பங்காளிக்கட்சிகளாக லங்கா சமசமாஜக் கட்சி யும் ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சியும் பொதுத்தேர்தல் வருவதற்கு முன்னதாக பிரிந்து சென்றுவிட்டன.

வேறுபட்ட சூழ்நிலைகளின் கீழேயே 2001 டிசம்ப ரில் ரணில் விக்கிரமசிங்கவினால் ஒரு அரசாங்கத்தை அமைக்கக்கூடியதாக இருந்தது. விடுதலைப் புலிகளு டன் போர் நடந்துகொண்டிருந்த காலகட்டம் அது. அமைதி, சமாதானத்தைக் கொண்டுவருவதாக தேர்தல் காலத்தில் உறுதியளித்த திருமதி குமாரதுங்கவினாலும் உருப்படியாக எதையும் செய்ய முடியாதிருந்தது. விடு தலைப் புலிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை தாக்கினார்கள். பொருளாதாரம் அலங்கோல நிலை யில் இருந்தது. முடிவில்லாமல் தொடர்ந்து கொண்டி ருந்த போரினால் மக்கள் விரக்தியடைந்திருந்த நிலை யில் நாட்டுக்கு சமாதானத்தைக் கொண்டுவருவதாக ரணில் உறுதியளித்தார். அத்துடன் அவர் தேர்தலுக்கு முன்னதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடனும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடனும் கூட்டணியொன் றையும் அமைத்தார். ஒரு அரசியல் கட்சி என்ற வகை யில் இன்றிருப்பதை விடவும் மிகவும் கூடுதலானள வுக்கு ஒழுங்கமைக்கப்பட்டதாக அன்று ஐ.தே.க விளங்கியது. அனேகமாக ஐ.தே.க. சகல முக்கிய தலை வர்களும் ரணிலுக்குப் பக்கபலமாக நின்றார்கள்.

இன்றைய ஐ.தே.க.வையும் 1977 இன் ஐ.தே.க. வையும் 2001 இன் ஐ.தே.க.வையும் ஒப்பிட்டுப் பார்க் குமாறு நான் வாசகர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அன்று ரணிலுடன் நின்ற ஐ.தே.க. செல்வாக்கு மிக்க முக்கியஸ்தர்கள் எல்லோரும் இன்று மகிந்த ராஜபக்ஷ வின் அரசாங்கத்தில் சேர்ந்துவிட்டார்கள். ராஜபக்ஷ ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன என்று அவர் கள் உறுதியாக நம்பக்கூடிய நிலை உருவாகாத வரை யில் அவர்களில் எவரும் ஜனாதிபதியைக் கைவிடப் போவதில்லை.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் இடம்பெ றுகின்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் மற்றும் நீதித்துறைச் சுதந்திரத்துக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப் புக்கு மத்தியிலும் கூட, அவரின் மக்கள் செல்வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவுக்கு குறைந்துவிடவில்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. குடும்ப ஆட்சி, ஊழல், தவறான ஆட்சி முறை, பத்திரிகைச் சுதந்திரத் துக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து மற்றும் பணவீக்கம் ஆகியவை காரணமாக முன்னர் இருந்ததையும் விட அவரின் செல்வாக்கு ஓரளவுக்கு குறைந்துவிட்டது என்பது உண்மையே. கூரையைப் பிரித்துக்கொண்டு வாழ்க்கைச் செலவு வானளாவ உயர்ந்திருப்பதன் கார ணமாக பெரும்பான்மையான மக்கள் தங்களது அன் றாட வாழ்க்கையைச் சமாளிப்பதில் பெரும் நெருக்கடி களை எதிர்நோக்குகிறார்கள். மாகாண சபைத் தேர்த லில் ஐ.தே.க.வுக்கு வாக்களிக்கப்போவதாகவும் ஆனால் ஜனாதிபதி தேர்தலில் மகிந்தவுக்கே வாக்களிக் கவிருப்பதாகவும் தேர்தலுக்கு முன்னரான நாட்களில் ஊவாவுக்கு சென்றிருந்த எனது நண்பர் ஒருவரிடம் வறிய கிராம மக்கள் பலர் கூறினார்களாம். குண்டுகள் வெடிக்கும் என்ற அச்சமின்றி வாழ்வதற்கு வழிவகுத்த வர் மகிந்த என்பதாலேயே அவருக்கு வாக்களிப்பதில் தாங்கள் அக்கறை காட்டுவதாக அந்த மக்கள் கூறிய தாக நண்பர் என்னிடம் தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக ஜனாதி பதி ராஜபக்ஷவும் அரசாங்கமும் வாழ்க்கைச்செல வைக் குறைப்பதற்கு தங்களாலியன்ற நடவடிக்கை களை எடுப்பார்கள். உதாரணமாக, அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் மீது விதிக்கப்பட்ட இறக்கு மதி வரிகளை இல்லாமற் செய்யும் அறிவிப்பை பட் ஜெட்டில் அரசாங்கம் செய்யும் என்று எதிர்பார்க்கலாம். தொழில்வாய்ப்பு இல்லாமல் இருக்கும் இளைஞர், யுவ திகளின் வாக்குகள் அடுத்த தேர்தல்களில் தீர்க்கமான வையாக இருக்கும் என்பதால், அவர்களுக்கு உதவித் தொகையொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் தீர் மானித்தாலும் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

அதனால், அதிசயமொன்று நிகழ்ந்தால் அன்றி, மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க வினால் அண்மைய எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்த லில் வெற்றிபெற முடியுமென்று எதிர்பார்ப்பதற் கில்லை. எனவே, ஜனாதிபதி ராஜபக்ஷவைத் தோற் கடித்து அதிகாரத்துக்கு வரவிரும்பினால், ஐ.தே.க. செய்யவேண்டியது என்ன?

நாடு எதிர்நோக்குகின்ற முக்கியமான அவசரப்பிரச் சினைகளில் குறைந்தபட்சம் சிலவற்றையாவது ஒரு வருடகாலத்திற்குள் தீர்ப்பதற்கான ஒரு பொதுவேலைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முன்வரக்கூடிய பலம் பொருந்திய சகல அரசியல் கட்சிகளின் முழுமனதான ஆதரவுடன் கூடிய மக்கள் வசீகரமிக்க 'கட்சி சார்பற்ற' வேட்பாளர் ஒருவரினால் தற்போதைய ஜனாதிபதி யைத் தோற்கடிக்க முடியும் என்பது எனது நம்பிக்கை.

ஒரு பொதுவேலைத்திட்டத்தைத் தயாரிக்கும் நோக் குடன் அரசியல் கட்சிகளின் முன்னணியொன்றுக்கு தலைமை தாங்க முன்வருவதே ரணில் விக்கிரமசிங்க வுக்கும் அவரது கட்சிக்கும் இருக்கக்கூடிய உகந்த தெரி

**ஜனாதிபதி ராஜபக்ஷவின் ஆட்சியில் இடம்பெறுகின்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் நீதி சுதந்திரத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து ஆகியவற்றுக்கு மத்தியிலும் கூட அவரின் மக்கள் செல்வாக்கு பெருமளவுக்கு குறைந்துவிட வில்லை என்பதை நாம் ஏற்றுக் கொண்டேயாகவேண்டும்**

வாகும். அந்த முன்னணி அடுத்த ஜனாதிபதித் தேர்த லில் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறக் கூடிய வல்லமை கொண்ட திருமதி குமாரதுங்க போன்ற பொதுவேட்பாளரை அதன் சார்பில் நிறுத்த முன்வர வேண்டும்.

'பொது ஜனாதிபதி வேட்பாளர்' ஒருவரினால் நடை முறைப்படுத்தப்படுவதற்காக முன்வைக்கப்படக்கூடிய யோசனைகளில் பின்வருவனவும் உள்ளடங்க வேண் டும் என்று நான் நம்புகிறேன்.


- பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற சகல அரசி யல் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசாங்கம் ஒன்றை ஒருவருட காலத்துக்கு அமைக்க வேண்டும்.
- அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலை களைக் குறைத்து சாதாரண மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- பாராளுமன்றத்துக்கு சகல அதிகாரங்களையும் வழங்குகின்ற புதியதொரு அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
- ஒருவருட இறுதியில் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும்.
- புதிதாக பாராளுமன்றத் தேர்தலை நடத்தி அர சாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும்.
- அந்த ஒருவருட இறுதியில் ஐ.தே.க.மிகவும் பலம் பொருந்திய அரசியல்கட்சியாக வரக்கூடிய வாய்ப் புகள் இருப்பதால் பொதுத் தேர்தலில் பாராளுமன் றத்தில் பெரும்பான்மையான ஆசனங்களை அக்கட் சியினால் கைப்பற்றக்கூடியதாக இருக்கும். அதனால் புதிய அரசாங்கத்தின் பிரதமராக ரணில் விக்கிரமசிங்க வரக்கூடியது மிகவும் சாத்தியமே.

மேற்கூறப்பட்ட திட்டத்தை அல்லது அதையொத்த திட்டத்தை ரணில் நடைமுறைப்படுத்துவாரா அல்லது ஜனாதிபதி தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளராகப் போட் டியிட்டு 'தற்கொலைக்கு' ஒப்பான செயலில் இறங்கு வாரா? பொறுத்திருந்து பார்ப்போமே. ■

***(பேர்ட்டி ரணவீரகே - இலங்கை ஆசிரியர் சங்கத் தின் முன்னாள் தலைவர்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்





யதீந்திரா

# தமிழர்களின் சாத்வீகம்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, சாத்வீகப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதான செய்திகள் அடிக்கடி தலைகாட்டுகின்றன. இலங்கை தமிழரசுக் கட்சியின் 15ஆவது தேசிய மகாநாட்டின் போது மேலெழுந்த இந்தக் கருத்து, பின்னர் அவ்வப்போது பலராலும் உச்சரிக்கப்பட்டது மேலும் உச்சரிக்கப்படுகிறது. இதற்கான தலைமையை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரான மாவை சேனாதிராஜா வழங்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது. பொதுவாக தமிழர்களின் உரிமை தழுவிய அரசியல் இயக்கத்தை இரண்டாகப் பிரித்து நோக்குவதுண்டு. தமிழர்களின் ஒரு குறிப்பிட்ட கால அரசியல் சாத்விகப் போராட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டதாகவும், பின்னர் அது ஆயுதப் போராட்டத்தினால் நெறிப்படுத்தப்பட்டதாகவும் சொல்வதுண்டு. உண்மையில் இது பெருமளவிற்கு ஒரு ஆய்வுத் தேவை கருதிய பிரிகோடாகும். ஆனால் பலரும் மிகைப்படுத்திக் கூறிய அளவிற்கு தமிழர் அரசியல் இயங்குநிலையில் சாத்வீக வழிமுறை உச்சஅளவில் கையாளப்பட்டிருந்ததா என்னும் கேள்விக்கு மிகவும் நேர்மையாக பதிலளிக்க வேண்டும்.

தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரான சா.ஜே.வே.செல்வநாயகம் ஈழத்து காந்தி என்றும் அறியப்பட்ட ஒருவர். அதாவது காந்திய வழிமுறையின் ஊடாக தமிழ்

**தமிழர்களின் உரிமைப்போராட்டத்தில் சாத்வீக வழிமுறை அதன் உச்ச அளவில் பிரயோகிக்கப்பட்டிருந்ததா என்ற கேள்விக்கு தமிழ் அரசியல் தலைவர்களிடமிருந்து நேர்மையான பதில் வரவேண்டும்**

மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப் போராடிய ஒரு தலைவர் என்னும் புரிதலின் வழியாகவே செல்வநாயகம் அவ்வாறு அறியப்பட்டிருந்தார். அந்த வகையில் தமிழர் அரசியலில் செல்வநாயகத்தின் காலமே சாத்வீகத்திற்கான காலமாகக் கொள்ளப்படுகிறது. இந்தக் காலகட்ட சாத்வீகம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே ஆயுதப் போராட்டம் வெளிக்கிளம்பியதாகவும் தமிழர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையுண்டு. ஆனால் ஒரு கேள்வி குறுக்கிடுகிறது - சாத்வீக வழிமுறை அதன் உச்சஅளவில் பிரயோகிப்பட்டிருந்ததா அல்லது ஒரு கொழும்பின் மீது சில அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான ஒரு உத்தியென்னும் அளவில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்ததா?

செல்வநாயகம் 1949இல் தமிழரசுக் கட்சியை அங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குராா்ப்பணம் செய்துவைத்து உரையாற்றிய போது இவ்வாறு கூறியிருந்தார். 'நாங்கள் ஒரு இலக்கின் மீது அடியெடுத்து வைக்கின்றோம். அந்த இலக்கை எங்களுடைய வாழ்நாளில் எய்துவதற்கு கடவுள் சித்தம் இருக்குமென்று நம்புகிறோம். ஒரு வேளை அது எங்களுடைய வாழ்நாளில் நிறைவேறாது போனால், எங்களது அடுத்த தலைமுறை, நாங்கள் உயர்த்திய பதாகையை முன்கொண்டு சென்று, எங்கள் இலக்கை எய்தும்'. செல்வநாயகம் எதிர்பார்த்தது போன்றே அடுத்த தலைமுறை அவர் உயர்த்திய பதாகையைப்பற்றியது.

ஆனால் அவர்கள் எவருமே, செல்வநாயகம் காண்பித்த வழியில் செல்ல முயற்சிக்கவில்லை. இந்த இடத்தில்தான் செல்வநாயகம் காண்பித்த சாத்வீகம் தொடர்பில் கேள்வி எழுகிறது. செல்வநாயகம் சாத்வீகத்தில் மட்டும் நம்பிக்கையுள்ள ஒரு தலைவர்தான். அதற்கான நடத்தையொழுங்கும் அவரிடம் இருந்தது. ஆனால் அடுத்த தலைமுறையும் சாத்வீகத்தை நோக்கி அணிதிரள்வதற்கு ஏற்றவகையில், சாத்வீகத்தை அதன் உச்சஅளவில் கையா ண்ட ஒரு தலைவராக அவரால் மேலெழ முடியவில்லை.

சாத்வீகத்தின் மீது உறுதிமாறா தலைமுறையொன்றை உருவாக்குவதில் செல்வநாயகம் தோல்வியடைந்தார். ஏனெனில் அதற்கான உறுதியை அவர் காண்பிக்கவில்லை. ஆனால் தமிழர்கள் மத்தியில் சாத்வீகம் உச்சரிக்கப்பட்ட காலத்தில்தான், ஆந்திர தனி மாநில கோரி க்கையை முன் வைத்து, அவரை (Potti Sreeramulu) 29 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிரிழந்தார்.பொட்டி சிறிராமுலுவை, முன்னுதாரணமாகக் கொள்வதற்கு எந்தவொரு தமிழ் மிதவாதத் தலைவரும் துணியவில்லை.

இதற்கு அன்றிருந்த மிதவாதத் தலைவர்களின் வாழ்க்கை முறையும் பிரதான காரணமாக இருக்கலாம். அன்றிருந்த தலைவர்களில் அனேகர் கொழும்பு வாழ்க்கையைக் கொண்டிருந்தவர்கள். எனவே அடிப்படையிலேயே ஒரு போராட்ட வாழ்க்கை முறைக்கு, அவர்கள் தயாராக இருக்கவில்லை. இப்படியொரு பின்னணியில்தான் அவர்கள் சாத்வீகம் என்பதை கொழும்பின் மீது சில அழுத்தங்களை பிரயோகிப்பதற்கான கருவியாக மட்டுப்படுத்திக் கொண்டனர் எனலாம்.

இத்தகைய சூழலில்தான் தமிழர்கள் பிரிந்துசென்று தனியரசு அமைப்பதற்கான பிரகடனம் முன் வைக்கப்பட்டது. இவ்வாறானதொரு நிலைப்பாட்டிற்கு செல்வநாயகத்தால் எவ்வாறு வரமுடிந்தது, என்பது தொடர்பில் பலவாறான அபிப்பிராயங்கள் உண்டு. மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்த செல்வநாயகம் திடமான சிந்தனையுடன்தான் இப்படியொரு முன்மொழிவை செய்தாரா, என்றும் ஒருவர் கேட்க இடமுண்டு. ஏனெனில் 1970 களிலிருந்தே வன்முறை அரசியல் குறித்த எண்ணங்கள் இளைஞர்கள் மத்தியில் குடிகொள்ளத் தொடங்கிவிட்டது. இதனை செல்வநாயகம் நன்கு



ஆந்திரா தனிமாநிலம் கோரிக்கையை முன்வைத்து பொட்டி சிறிராமுலு 29 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிரிழந்தார். அவரை முன்னுதாரணமாகக் கொள்வதற்கு எந்தவொரு இலங்கை தமிழ் மிதவாதத் தலைவரும் துணிச்சல் கொள்ளவில்லை.

அறிந்திருந்தும் கூட, இளைஞர்களை சாத்வீகத்தை நோக்கி திருப்பும் வகையில் பாரிய செயற்பாடுகள் எதனையும் அவர் செய்ய முயற்சிக்கவில்லை. இந்தப் பின்னணியில்தான் செல்வநாயகம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, 1976இல் தனிநாட்டுக்கான பிரகடனத்தைச் செய்கிறது. ஏற்கனவே வன்முறை எண்ணத்தால் உணர்வெழுச்சி பெற்றிருந்த இளைஞர்களுக்கோ, செல்வநாயகத்தின் முடிவு பழம் நழுவி பாலில் விழுந்த மகிழ்சியைக் கொடுத்தது எனலாம். எனவே சாத்வீக போராட்டத்திற்கான ஒரு வலுவான அடித்தளமற்ற சூழலில்தான், இளைஞர்கள் செல்வநாயகத்தின் அல்லது மிதவாதிகளின் சுலோகத்தை இரத்தம் சிந்தி அடையமுடியுமென்று நம்பினர். உண்மையில் இப்படியொரு பிரகடனத்தை செய்தவர்கள் அதனை அடிப்படையாகக் கொண்டு, ஒரு பெரும் சாத்வீகப் போராட்டத்தைச் செய்திருக்க வேண்டும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால், இளைஞர்கள் முன்னால் வன்முறை மட்டுமே ஒரேயொரு தெரிவாக இருந்திருக்காது. அதில் ஒரு சிலர் இறக்க நேர்ந்திருந்தாலும் அதுவும் சாத்வீகத்தின் மீதான மனவுறுதியை மக்கள் மத்தியில் விதைத்திருக்கும்.

இந்த இடத்தில் அகிம்சை குறித்து சில விடயங்களை தொட்டுச்செல்வது பொருத்தமானதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிம்சையின் நோக்கம் எதிராளிக்கு அச்சுறுத்தலைக் கொடுப்பதல்ல மாறாக எதிராளியை நிலைகுலையச் செய் வது. அகிம்சையின் நோக்கம் எதிராளியை வெல்வதல்ல மாறாக அவர்களது மனதை வெல்வதாகும். அகிம்சை ஒருபோதுமே எதிராளிக்கு அச்சுறுத்தலை வழங்காது ஆனால் அவர்களது மனச்சாட்சியை தொடர்ச்சியாக அச்சுறுத்திக் கொண்டேயிருக்கும். இறுதியில் எதிராளிகளின் மனச்சாட்சியே அவர்களை தோற்கடிக்கும். இந்த இடத்தில்தான் காந்தீயத்தின் வெற்றியை எண்ணிப்பார்க்க வேண்டும். காந்தியால் எவரையுமே அச்சுறுத்த முடியாது. ஏனெனில், காந்தி போன்ற தலைவர்களை எதிர்கொள்ள நேரிடுகின்ற எவருக்கும், தன்னை தற்காத்துக்கொள்ள வேண்டுமென்னும் உணர்வும் ஏற்படாது.

ஆனால் வன்முறையை ஒரு கருவியாகக் கையாளும் போது, மற்றைய தரப்பில் உள்ளவர்களிடம் ஒரு தற்காக்கும் எச்சரிக்கையுணர்வு எப்போதுமே இருந்து கொண்டேயிருக்கும். தற்காக்கும் எச்சரிக்கையுணர்வு இருக்கும் போது, ஒரு மனிதனின் மனச்சாட்சிக்கு வேலையில்லாமல் போய்விடும். இதுதான் வன்முறையிலுள்ள பலவீனம். காந்தியினது வெற்றியின் அடிப்படையும் இதுதான். பிரித்தானிய படைகளை வன்முறையின் மூலம் எதிர்கொள்வதிலுள்ள பொருத்தப்பாடின்மைகளையும், அதனால் ஏற்படப்போகும் பாதகங்களையும் துல்லியமாக மதிப்பிட்டுத்தான், காந்தி சாத்வீகம் என்னும் ஆயுதத்தை கையிலெடுத்தார். அதனை ஒரு இலக்கிற்காக வெற்றிகரமாக பயன்படுத்த முடியுமென்பதை நிரூபித்தும் காட்டினார். காந்தி ஒரு விடயத்தில் தெளிவாக இருந்திருக்க வேண்டும் அதாவது நாங்கள் பலசாலிகளை எதிர்க்க முற்படும் பலவீனர்கள் ஆவோம், எனவே எங்களிடம் அதிக பொறுமையும் நிதானமும் இருக்க வேண்டியது அவசியம்.

ஆனால் இதனை அப்படியே எங்களுடைய அரசியல் சூழலுக்கு பொருத்தி நோக்கினால், நிலைமை தலைகீழாக இருப்பதைக்காணலாம். நாங்கள் பலவீனர்கள் என்னும் பார்வை எங்களிடம் ஒரு போதுமே இருக்கவில்லை.

இப்போதும் இருக்கிறதா என்பது சந்தேகமே! மாறாக எங்களால் எவரையும் எதிர்க்க முடியுமென்னும் இறுமாப்பே மேலெழுந்தது. இதுதான் தமிழர்களின் இன்றைய நிலைமைக்கு காரணம். தமிழர்கள் என்னதான் அபிப்பிராயங்களை வெளியிட்டாலும், இந்த நாட்டில் 75 வீதமான மக்கள் சிங்களவர்களாவர் என்பதை மறக்கலாகாது. எனவே ஒரு கணிசமான சிங்கள மக்களின் மனச்சாட்சியை தட்டியெழுப்பாத எந்தவொரு தமிழ் செயற்பாடும் வெற்றிபெறப் போவதில்லை. இந்த யதார்த்தம் ஆரம்பத்திலிருந்தே தமிழர் தலைமைகளால் கண்டுகொள்ளப்படவில்லை. தமிழ் இடதுசாரிகளிடம் இப்படியொரு ஆரோக்கியமான பார்வை இருந்தது உண்மை. ஆனால் அவர்களும் வாய்ச்சொல் வீரர்களாகவே இருந்தனர்.

இப்படியொரு வரலாற்று அனுபவம் எங்களிடம் இருக்கின்ற சூழலில்தான் தற்போது மீண்டும், ஒரு சாத்வீகப் போராட்டம் பற்றி பேசப்படுகிறது. இது பேசப்படுமளவிற்கு அவ்வளவு எளிதான ஒன்றல்ல. ஏனெனில் எதையும் இழப்பதற்குத் தயராக இருக்கின்ற ஒரு தலைமையிடம் இருந்துதான், சாத்வீகத்தை உச்சளவில் கையாளுவதற்கான மனவுறுதி பிறக்கும். இன்றைய சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எடுத்து நோக்கினால் அதற்கான தார்மீக ஒழுங்கோ, அல்லது அர்ப்பணிப்போ அதனிடம் இருப்பதாகக் கொள்ள முடியாது. உண்மையிலேயே கூட்டமைப்பு ஒரு சாத்வீகப் போராட்டத்தை செய்ய எண்ணுவது தவறல்ல. ஆனால், அது அப்பாவி மக்களை பணயம்வைத்து ஆடும் ஒரு பழைய ஆட்டமாக இருக்கக் கூடாது. முதலில் தலைவர்கள் என்போர் தங்களின் மன உறுதியை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

அதற்காக தங்களின் வசதிகளைத் துறந்து காட்ட வேண்டும். உண்மையில் இன்று கூட்டமைப்பிடம் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை இணைத்தால், ஒரு பெரும் அணி கிடைக்கும். இந்த அணியினர் முதலில் தங்களின் சாத்வீகத்தின் மீதான பற்றுறுதியை நிரூபித்துக் காட்டலாம். இதில் ஒரு சிலர் பொட்டி சிறிராமுலு போன்ற அகிம்சா மூர்த்திகளாகலாம். மக்களுக் காக எல்லாவற்றையும், இறுதியில் தன்னையே இழப்பதற்கு தயாராக இருக்கின்ற ஒரு மனிதன்தான் சாத்வீகத்தைக் கையாளுவதற்கு தகுதியுடையவனாக இருக்க முடியும். அப்படியொரு தகுதிப்பாட்டை வளர்த்துக் கொள்ளாமல், சாத்வீகம் பற்றி உரத்துப் பேசுவதில் என்ன பயன்? ■

---

*(47ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

காஷ்மீர் பிரச்சினையை ஐ.நா.வில் கிளப்பிய நவாஸ் ஷெரீப்பின் செயல், அண்மைய எதிர்காலத்தில் இந்திய-பாகிஸ்தான் பிரதமர்களுக்கிடையிலான எந்த வொரு சந்திப்பும் இடம்பெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை தெளிவாக உணர்த்தியது. ஐ.நா.வில் இருவரும் கைகுலுக்குவதற்குக் கூட வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

சீன ஜனாதிபதிக்கும் மோடிக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் அசௌரியமான சூழ்நிலைக்குள்ளாகியமை குறித்து நவாஸ்ஷெரீப் இப்போது திருப்தியடைவார் என்பதிற் சந்தேகமில்லை. அது அவருக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்துவிட்டது. மோடியும் ஜின் பிங்கும் நெருக்கமான உறவை வளர்த்துக்கொண்டிருந்தால், சகல வகையான ஆதரவுக்கும் சீனா மீதே பிரதானமாகத் தங்கியிருக்கும் பாகிஸ்தானுக்கு அது கெடுதியாகிப் போயிருக்கக்கூடும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெங்களூர் வழக்கால் நிலைகுலைந்து நிற்கும் தமிழக அரசியல்



## ஜெயலலிதாவைத் தண்டிக்க கருணாநிதியைத் துணைக்கு அழைத்த நீதிபதி?



சென்னை மெயில்

முத்தையா காசிநாதன்



செப்டெம்பர் 27- தமிழக அரசியல் வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய அரசியல் வரலாற்றிலேயே மிக முக்கியமான நாள். 18 வருடங்களாக நடைபெற்ற சொத்துக் குவிப்பு வழக்கில் தமிழக முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவிற்கு நான்கு வருடங்கள் சிறைத் தண்டனையும், நூறுகோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. லஞ்ச ஊழல் வழக்கில் இப்படியொரு வித்தியாசமான தீர்ப்பை எழுதியிருப்பவர் வேறு யாருமல்ல, ஜோன் மைக்கேல் குன்ஹா. இந்திய உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி கர்நாடக மாநிலத்திற்கு மாற்றப்பட்ட சொத்துக் குவிப்பு வழக்கை விசாரித்த கடைசி நீதிபதி இவர்தான். ஏகப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள், ஆயிரக்கணக்கான அண்ணா தி.மு.க.வினர் வெளியில் காத்திருக்க, எந்தச் சலனமும் இன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திர்ப்பைக்கேட்ட மறுகணம் ஜெயலலிதா







கண்ணீர் மல்க புதிதாக பதவியேற்கும் தமிழக அமைச்சர்கள்





அமைதியாக தன் இருக்கையில் வந்து அமர்ந்த நீதிபதி இப்படியொரு அரசியல் வரலாற்றுத்துவம் மிக்க தீர்ப்பினை வழங்கி, இந்திய அரசியல்வாதிகளை அதிர்ச்சியில் உறைய வைத்துவிட்டார்.

### சுவாமி தொடுத்த முதல் அஸ்திரம்

ஊழல் வழக்கிற்கு முதலில் மணி அடித்தவர் டாக்டர் சுப்ரமணியன் சுவாமி. இவர்தான் 1996 ஜூன் மாதம் 14 ஆம் திகதி ஜெயலலிதாவிற்கு எதிராக ஊழல் புகார் பதிவு செய்து விசாரிக்க வேண்டும் என்று சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தை நாடினார். இதனடிப்படையில் விசாரணை நடத்துமாறு ஜூன் 21-ஆம் திகதியே உத்தரவு பிறப்பித்தது அந்த நீதிமன்றம். பிறகு ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவால் இந்த விசாரணை சென்னை உயர்நீதிமன்றத்தால் மூன்று மாதங்கள் தடையாகி நின்றது. ஆனால் முதல் இவர்கள் மீது ஊழல் விசாரணை நடத்த லாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து ஏற்கனவே இருந்த தடையை நீக்கியது; 1996 செப்டெம்பர் நான்காம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகதிதான். அன்றிலிருந்து இந்த ஊழல் வழக்கில் முக்கிய நிகழ்வுகள், அதுவும் ஜெயலலிதாவிற்கும் மற்றவர்களுக்கும் பாதகமான முடிவுகள் அனைத்துமே செப்டெம்பர் மாதத்தில் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன.

### செப்டெம்பரில் ஆரம்பித்த முதல் தகவல் அறிக்கை (FIR)

லஞ்ச ஊழல் தடுப்புத்துறை இயக்குநராக இருந்த வி.சி.பெருமாள் என்ற பொலிஸ் அதிகாரி உத்தரவின் பேரில் செப்டெம்பர் 18-ஆம் திகதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இதேபோல் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பிறகு 2000ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதிதான் இன்னொரு முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. லண்டன் உள்ளிட்ட வெளிநாடுகளில் குவித்து வைத்து ள்ள சொத்துக் குறித்து விசாரிப்பதற்காகப் போடப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் ஜெயலலிதாவும், டி.டி.வி. தினகரனும் குற்றம் சாட்டப்பட்டவர்களாக காண்பிக்கப்பட்டனர். இரு ஊழல் வழக்குகளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் உருவானது.



### சொத்துக்குவிப்பு வழக்கின் முக்கிய அம்சம்

ஜெயலலிதா, சசிகலா, வி.என்.சுதாகரன், இளவரசி ஆகிய நான்கு பேருக்கும் எதிராக நடைபெற்ற சொத்துக் குவிப்பு வழக்கு சென்னை நீதிமன்றத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் துரிதமாக நடைபெற்றது. இந்த வழக்கின் சாராம்சம் இதுதான். ஜெயலலிதா 1991இல் முதலமைச்சரானார். 1987 வரை அவரது சொத்து மதிப்பு 7.5 லட்சம் ரூபாய். வங்கிக் கணக்கில் ஒரு லட்சம் ரூபாயும், நகைகளும் இருந்தன என்று கூறப்பட்டுள் ளது. பிறகு 1991இல் முதல்வரான போது ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 2,01,83,957 ரூபாய். 1996 இறுதியில், அதாவது முதலமைச்சர் பதவியிலிருந்து கீழிறங்கும் போது, அவரிடமிருந்த சொத்துக்கள் 66,65,20,395 ரூபாய் என்று லஞ்ச ஊழல் ஒழிப்புத்துறை கணக்குப் போட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அதாவது 2.1 கோடி ரூபாய் 66.65 கோடியாக உயர்ந்து விட்டது. மூன்று நிறுவனங்கள் 34 நிறுவனங்களாக பெருகிவிட்டன போன்றவைதான் சொத்துக் குவிப்பு வழக்கின் முக்கிய அம்சங்கள்.

### நீதிமன்றத்திற்கு போகாததால் வந்த வில்லங்கம்

24.8.வரையான காலத்திற்குள் 258 சாட்சிகள் இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டு விட்டார்கள். அதன் பிறகு 2001இல் மீண்டும் முதலமைச்சரானார் ஜெயலலிதா. உடன் வழ க்கை விசாரித்த அதிகாரி, நடத்திய அரசு வழக்கறிஞர்கள் எல்லாம் ராஜினாமா செய்தார்கள். ஏற்கனவே விசாரிக்கப்பட்ட சாட்சிகள் 76 பேர் மீண்டும் விசாரிக்க அழைக்கப்பட்டார்கள். அதில் 64 பேர் பிறழ் சாட்சிகளாக மாறினார்கள். அதை அரசு வழக்கறிஞர் எதிர்க்கவில்லை. பிறழ் சாட்சி சொன்னதற்காக வழக்குப் போடவும் முன்வரவில்லை. இவையெல்லாம் ஜெயலலிதாவிற்கு சிக்கலை ஏற்படுத்தியது. நேரில் ஆஜராகி நீதிபதியின் கேள்விகளுக்கு குற்றம் சாட்டப்பட்டவர் பதில் அளிக்க வேண்டும் என்பது இந்திய குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம் 1973இல் உள்ள 313 பிரிவின் படி கொடுக்கப்பட்டிருக்கும் வாய்ப்பு. தண்டனை கொடுக்கும் முன்பு நீதிபதி குற்றம் சாட்டப்பட்டவருடன் நேரடியாகப் பேசி, ஏதாவது விளக்கங்கள் சொல்ல முன்வந்தால் அவற்றைப் பெறலாம். சென்னையி லேயே முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா இதற்குக் கூட சென்னை நீதிமன்றத்தின் முன்பு ஆஜராகவில்லை. விதிவிலக்கு கொடுங்கள். கேள்விகளை தபாலில் அனுப்புங்கள். பதில் சொல்கிறேன் என்றார். அந்



தக் கோரிக்கையை நீதிமன்றமும் ஏற்றது. பதிலைத் தபாலில் அனுப்பி வைத்தார் ஜெயலலிதா. அவருடைய அரசியல் வாழ்விற்கு உலை வைத்த இந்தத் தீர்ப்பிற்கு அப்படி பதில் கொடுத்த 2003 பெப்ரவரி 25ஆம் திகதிதான் அச்சாரமாக அமைந்து விட்டது.

### உச்சநீதிமன்றத்தை நாடிய அன்பழகன்

'நீதிபரிபாலன முறை கெட்டுவிடும் போலிருக்கிறது. அதனால் வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்றுங்கள்' என்று தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழகன் முதலில் சென்னை உயர்நீதிமன்றத்திற்குப் போனார். அங்கு தீர்ப்பு வழங்குவது தாமதமா கவே, நேராக உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். இப்படித்தான் இந்திய உச்சநீதிமன்றம் 2003 நவம்பர் மாதம் 18-ஆம் திகதி ஜெயலலிதாவின் சொத்துக்குவிப்பு வழக்கு விசாரணையை கர்நாடக மாநிலத்திற்கு மாற்றி உத்தரவு பிறப்பித்தது. ஆனால் இந்த வழக்கை கர்நாடக மாநிலத்திற்கு தமிழக அரசு மாற்றியது பத்து மாதம் கழித்து இதே மாதிரி ஒரு செப்டெம்பர் மாதத்தில்தான். அதாவது 10.9.2004 அன்று வழக்கு அம்மாநிலத்திற்குப் போனது.

### கர்நாடக அமைச்சரவையின் தீர்மானம்

கர்நாடக மாநிலத்தில் சிறப்பு நீதி மன்றம் அமைக்கப்பட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டது. சிறப்பு அரசு வழக்கறிஞராக பி.வி. ஆச்சார்யா நியமிக்கப்பட்டார். அவருக்கு உதவி செய்ய சந்தேஷ் ஜே. சவுத்தா என்ற ஜூனியர் அட்வகேட் நியமிக்கப்பட்டார். கர்நாடக அமைச்சரவை கூடி இந்த வழக்கின் தஸ்தாவேஜு களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு வழங்க 20 உதவி பேராசிரியர்களை யும், விரிவுரையாளர்களையும் நிய மிக்குமாறு கர்நாடக கல்வித் துறை அதிகாரியைக் கேட்டுக் கொண்டது. ஜெயலலிதா வழக்கிற்காக கர்நாடக அமைச்சரவை கூடி இப்படியொரு தீர்மானத்தைப் போட்டதும் அதே செப்டெம்பர் மாதம். அதாவது 30.9.2004 அன்றுதான் அது நிகழ்ந்தது.

### லண்டனும், சென்னையும் சேர்ந்ததால் வந்த தடை

லண்டன் சொத்துக்குவிப்பு வழக்கையும், சொத்துக்குவிப்பு வழக்கையும் ஒன்றாக சேர்த்து நடத்த வேண்டும் என்று ஜெயலலிதா தரப்பு கோரிக்கை வைக்க, அதை பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஏற்றுக்கொண்டார். வழக்கு விசாரணையை அம்மாநிலத்தில் தொடங்கிய முதல் நீதிபதி இவர்தான். அவர் பெயர் பச்சப்புரே. ஆனால் இதை தி.மு.க. வின் சார்பில் அன்பழகன் எதிர்த்தார். உச்சநீதிமன்றம் போய் தடையுத்தரவு பெற்றார். இதனால் ஐந்து வருடம் கர்நாடக மாநிலத்தில் இந்த வழக்கு விசாரணை நின்று போனது. உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி மீண்டும் 2010 ஜனவரி மாதம் வழக்கு விசாரணை தொடங்கியது. இந்தமுறை ஆங்கிலமும், தமிழும் தெரிந்த மொழிபெயர்ப்பாளர் ஒருவரையும் நியமிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. ஏறக்குறைய வழக்கு விசாரணை முடியும் தறுவாய் க்கு வந்த நிலையில், மொழி பெயர்ப்பில் சில குறைகள் இருப்பதாக நீதி மன்றத்தில் புகார் செய்யப்பட்டது. அதையும் நிவர்த்தி செய்து கொடுத்த நீதிமன்றம், மீண்டும் 313ஆவது பிரிவின் கீழ் நேரடியாக நீதிபதியின் கேள்விகளுக்கு பதில் சொல்ல அனைத்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் அழைப்பானை பிறப்பிக்கப்பட்டது.






### 99 சாட்சிகளை தாக்கல் செய்த ஜெ தரப்பு

இந்த நேரம் மூன்றாவது முறையாக முதல்வராகியிருந்தார் ஜெயலலிதா. முதலில் பாதுகாப்புக் காரணங்களைக் கூறிய ஜெயலலிதா, பிறகு உச்சநீதிமன்ற உத்தரவின் படி பெங்களூர் நீதிமன்றத்தில் ஆஜரானார். 1337 கேள்விகளுக்கு பதிலளித்தார். 29.7.2013 அன்று தங்கள் தரப்புச் சாட்சியங்களை (Defence witnesses) முடித்துக் கொண்டதாக ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் நீதிபதியிடம் தெரிவித்தார்கள். தங்கள் தரப்புக்காகக் கொடுத்த 128 சாட்சிகளில் அதுவரை 99 சாட்சிகளை மட்டும் சாட்சி சொல்ல வைத்திருந்தார்கள். இந்தக் காலகட்டத்தில் இருந்த நீதிபதி பாலகிருஷ்ணா ஓய்வு பெற்றார். அதுவும் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி. அரசு வழக்கறிஞர் பவானி சிங் நீக்கப்பட்டு, பிறகு உச்சநீதிமன்ற உத்தரவால் மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டதும் செப்டெம்பர் மாதம்தான்.

### வந்தார் கடைசி நீதிபதி மைக்கேல் குன்ஹா

இந்த நிலையில்தான் இப்போது தீர்ப்பளித்த நீதிபதி ஜோன் மைக்கேல் குன்ஹா பதவியேற்றார். நேர் மையான நீதிபதி. உயர்நீதிமன்றில் லஞ்சத்தை தடுக்கும் விஜிலென்ஸ் பதவியில் இருந்தவர். யாருக்கும் எதற்கும் விலை போகாதவர் என்ற சிறப்பு இவருக்கு உண்டு. மார்ச் மாதம் ஏழாம் திகதி வழக்கு விசாரணையைத் தொடங்கினார். ஜெயலலிதாவின் வழக்கறிஞர் தன் இறுதி வாத த்தை 80 மணி நேரத்திற்கும் மேல் சிறப்பு நீதிமன்ற நீதிபதி மைக்கேல் குன்ஹா முன்பு எடுத்து வைத்தார்.

அதேபோல் அரசு தரப்பு வழக்கறிஞர் பவானி சிங் சாட்சிகளின் வாக்குமூலத்தை மட்டும் படித்துக்காட்டி தன் வாதத்தை நிறைவு செய்து கொண்டார். ஜெயலலிதா மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் 151 தீர்ப்புகளை மேற்கோள் காட்டி வாதிட்டனர். ஆனால் அரசு வழக்கறிஞர் பவானி சிங்கோ பத்து தீர்ப்புகளைக் கூட மேற்கோள் காட்டி வாதிடவில்லை. இது மாதிரி சூழ்நிலையில் தான், வழக்கின் தீர்ப்பு செப்டெம்பர் 20-ஆம் திகதிக்கு முதலில் நிர்ணயிக்கப்பட்டு, பிறகு பாதுகாப்பு காரணத்திற்காக 27 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டது. அன்றைய தினம் தீர்ப்பை வழங் கினார் ஜோன் மைக்கேல் குன்ஹா.

### ஜெயலலிதாவை தண்டிக்க கருணாநிதி துணை

இந்தத் தீர்ப்பு 1136 பக்கங்களைக் கொண்டது. தீர்ப்பின் முதல் 51 பக்கங்களில் இந்த வழக்கின் தன்மை பற்றி விரிவாக விளக்கியிருக்கிறார் நீதிபதி. வழக்கை நிரூபிக்கும் முன்பு வழக்குத் தொடரப்பட்டதில் சட்டவிரோதங்கள் இருக்கிறதா என்பதை ஏழு கேள்விகளை எழுப்பி தீர விவாதித்துள்ளார். அதில் முதல் கேள்வி 'வழக்குத் தொடர ஆளுநர் அனுமதி வழங்கியது சரியா, தவறா' என்பது. இந்தக் கேள்விக்கு பதில் தேட நீதிபதி குன்ஹா எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தீர்ப்பின் சிறப்பம்சங்கள்

- இந்தியாவில் பதவியிலிருக்கும் போது ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட முதல் முதலமைச்சர் ஜெயலலிதா.
- நூறு கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்ட முதல் ஊழல் வழக்கு.
- ஜெயலலிதாவும் அவருடன் உள்ள குற்றவாளிகளும் 32 நிறுவனங்களைத் துவக்கியது நிரூபிக்கப்பட்டுள்ளது.
- ஜெயலலிதாவிற்கு வழங்கப்பட்ட சம்பளம் 27 ரூபாய்தான் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.
- ஜெயலலிதா முதல்வராவதற்கு முன்பு 1991 இல் உள்ள சொத்துக்கள் 52 ஆக காட்டப்பட்டுள்ளன. அதுவே 1996இல் 306 ஆகவும் பட்டியலிடப்பட்டுள்ளது.
- ஹைதராபாத் திராட்சை தோட்டத்தில் இரு வகை திராட்சைச் செடிகள் இருந்ததாகவும் முதல் வகையில் 580 செடிகளும், இரண்டாவது வகையில் 1266 செடிகளும், 96 கொய்யா மரங்களும் இருந்ததாக கணக்கில் எடுக்கப்பட்டு அதிலிருந்து வரும் வருமானத்தை நீதிபதி தீர்மானித்துள்ளார்.
- திராட்சைத் தோட்டத்தின் மூலம் ஜெயலலிதாவிற்கு கிடைத்த விவசாய வருமானத்தை 5.78 லட்சத்தில் இருந்து பத்து லட்சமாக 1991-96 -க்கு நீதிபதி உயர்த்தியுள்ளார்.
- கட்சிக்காரர்கள் கொடுத்த நன்கொடை, வெளிநாட்டிலிருந்து வந்த நன்கொடை எல்லாம் தெரிந்த வழியில் வந்த வருமானம் அல்ல (Known sources of income) என்று முடிவு செய்திருக்கிறார்.
- ஜெயலலிதா தனது 44ஆவது பிறந்த நாளில் மட்டும் இப்படி நன்கொடை வாங்கியிருக்கிறார். மற்ற பிறந்த நாட்களில் இல்லையே என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.
- நமது எம்.ஜி.ஆர் பத்திரிகை டெபாஸிட் திட்டம் மூலம் வந்த வருமானம் என்று காட்டிய 14 கோடி ரூபாவை நீதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை. இதெல்லாம் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த பிறகு உருவாக்கப்பட்ட கதை என்று கூறியிருக்கிறார்.
- இந்த டெபாஸிட் திட்டம் பற்றிய மூலப் பதிவுகள் டாட்டா சுமோ காரில் வைத்திருந்த போது தொலைந்து போய் விட்டது என்று வருமான வரித்துறை அதிகாரிகளிடம் சொல்லிவிட்டு, அதே மூலப்பதிவுகளை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார்கள். இது நம்பும்படியாக இல்லை என்று கூறியிருக்கிறார்.
- நமது எம்.ஜி.ஆர் பத்திரிகைதானே தவிர அது ஒரு பேங்கிங் கம்பெனி அல்ல என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்.
- வழக்குப் பதிவு செய்யப்பட்ட பிறகு வருமான வரித்துறைக்குத் தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அளித்த 60.45 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஜெயலலிதாவின் விவசாய வருமானத்தை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.
- வி.என். சுதாகரன் திருமணச் செலவுகளை காசோலை மூலம் ஜெயலலிதா செலுத்தியுள்ளதைச் சுட்டிக்காட்டி, சுதாகரன் திருமணச் செலவுகளை ஜெயலலிதாவே செய்ததாக நீதிமன் றம் முடிவு செய்துள்ளது. ஆனால் வழக்கில் ஆறுகோடி ரூபாயாக சொல்லப்பட்ட திருமணச் செலவை மூன்று கோடி ரூபாயாக தீர்ப்பில் குறைத்துள்ளது நீதிமன்றம்.
- கட்டிடங்களை புனரமைக்கச் செலவு செய்ததாக வழக்கில் சொன்ன தொகையிலிருந்து 20 சதவீதத்தை குறைத்துள்ளது நீதிமன்றம்.
- கைப்பற்றப்பட்ட 389 ஜோடி செருப்புகளின் மதிப்பை கணக்கில் சேர்த்துக் கொள்ளத் தேவையில்லை என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.
- ஜெயலலிதாவிடம் இருந்து கைப்பற்றப்பட்ட 416 கிலோ வெள்ளிகள் சட்டவிரோதமாக சம்பாதித்தது என்று கூறியிருக்கிறார் நீதிபதி.
- முதல்வராகும் போது 1991இல் 7040 கிராம் தங்க நகைகள் ஜெயலலிதாவிடம் இருந்ததாகவும், அது 1996இல் 27,588 கிராமாக உயர்ந்து விட்டது என்றும் சுட்டிக்காட்டி சொத்துக் குவிப்பாக கருதியிருக்கிறது நீதிமன்றம்.
- வழக்கில் காட்டப்பட்ட 9241 சேலைகளின் மதிப்பை கணக்கில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று நீதிமன்றம் முடிவு செய்துள் ளது.
- ஆனால், 7 விலை மதிக்கக்கூடிய கைக்கடிகாரங்களையும், 91 மற்ற கைக்கடிகாரங்களையும் மதிப்பிட்டு அதை ஏற்றுக் கொண்டுள்ளது.
- 34 நிறுவனங்களை வாங்கவும் பப்ளிக் சர்வென்ட் ஆன ஜெயலலிதாவிடமிருந்துதான் நிதி சென்றது என்று முடிவு செய்துள்ளது.
- இந்தக் கம்பெனிகளின் கட்டுப்பாட்டில் மட்டும் 3000 ஏக்கர் நிலங்கள் இருப்பதாக கணக்கிட்டுள்ளது. அதில் கொடநாடு எஸ்டேட், பையனூர் பங்களா எல்லாம் அடக்கம்.
- சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோருக்கு தனிப்பட்ட வருமானம் ஏதுமில்லை. ஜெயலலிதாவின் சொத்துக்களைப் பார்த்துக் கொள்ளவே போயஸ் கார்டனில் தங்கியிருந்தார்கள் என்று முடிவு செய்திருக்கிறது நீதிமன்றம்.
- சசிகலாவின் கணவர் நடராஜன் மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்த போது ஸ்கூட்டர் வாங்குவதற்கே மூவாயிரம் ரூபாய் லோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டவர் என்பன போன்றவற்றை இதற்கு ஆதாரமாக எடுத்துக் கொண்டுள்ளது.

- சொத்துக் குவிப்பதற்காக இல்லையென்றால் என்ன காரணத்திற்காக சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் தன் போயஸ் கார்டனில் ஏன் வசித்தார்கள் என்பதை ஜெயலலிதா நீதி மன்றத்திற்கு விளக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளது.
- இந்த 34 நிறுவனங்களில் இருந்து நான்கு பேரின் வங்கிக் கணக்குகளு க்கு பணம் எப்படி மாற்றம் செய்யப்பட்டது, ஒவ்வொரு கணக்கிலும் பணம் செலுத்தப்பட்டது, திடீரென்று ரொக்கமாக கணக்குகளில் டெபாஸிட் செய்தது போன்றவற்றை எல்லாம் தன் தீர்ப்பில் 34 பக்கங்களில் விளக்கியிருக்கிறார் நீதிபதி.
- இந்த நால்வரும் கம்பெனிகளைப் பதிவு செய்த பத்திரங்களில் 90 சதவீதம் கம்பெனிகளின் முகவரி கூட அந்தப் பத்திரங்களில் இல்லை.
- ஜெயலலிதா வங்கிக் கணக்கிலிருந்து சசிகலாவிற்கும், நமது எம்.ஜி.ஆர், ஜெயா பப்ளிகேஷன்ஸ் போன்ற வங்கிக் கணக்கிலிருந்து ஜெயலலிதா மற்றும் சசிகலா ஆகியோருக்கும் மாற்றம் செய்யப்பட்ட விவரங்களை பட்டியலிட்டிருக்கிறார் நீதிபதி.
- தனது வருமானத்தில் இருந்து வங்கியில் பணம் போட்டேன் என்று சசிகலா சொல்ல முடியவில்லை என்றும் உறுதி செய்திருக்கிறார் நீதிபதி.
- நமது எம்.ஜி.ஆர் மற்றும் ஜெயா பப்ளிகேஷன்ஸ் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளவற்றை தனியாகப் பட்டியலிட்டுள்ளார்.
- வாக்காளர் பட்டியலில் போயஸ் கார்டன் முகவரியில் சசிகலா பெயர் இருக்கிறது. முதலமைச்சராக இருக்கிறவருக்கு சசிகலா உள்ளிட்ட மற்ற குற்றவாளிகள் நடவடிக்கைகள் தெரியாது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறியிருக்கிறார் நீதிபதி.
- இறுதியில் 1996இல் ஜெயலலிதாவின் சொத்து மதிப்பு 55,02,48, 215 ரூபாய். அவர் செய்த செலவு 8, 49,06,833 ரூபாய். ஆக மொத்த மதிப்பு 63, 51, 55, 048 ரூபாய் என்று கணக்கிட்டுள்ளார் நீதிபதி.
- இந்தச் சொத்து மதிப்பில் ஜெயலலிதா கணக்குக் காட்டியது 9,91,05,094 ரூபாய் என்றும், நீதிமன்றத்தின் திருப்தியடையும் வகையில் கணக்குக் காட்ட முடியாத சொத்து மதிப்பு 53,60,49,954 ரூபாய் என்றும் முடிவு செய்து வருமானத்திற்கு மீறிய சொத்துக் குவித்த வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு தண்டனை வழங்கியுள்ளார் நீதிபதி குன்ஹா.
- நூற்றுமுப்பது கோடி அபராதத்தை வசூலிக்க வங்கிக் கணக்கிலிருந்து எடுக்கலாம். அதிலும் போதவில்லை என்றால் நகைகளை பாரத வங்கி அல்லது ரிசர்வ் வங்கி அல்லது பொது ஏலம் மூலம் விற்று அபராதத்தை எடுத்துக் கொள்ளலாம். பட்டியலிட்டுள்ள சொத்துகளை அரசு உடனே பறிமுதல் செய்யலாம். அதற்கு விளக்கம் கேட்டு குற்றவாளிகளுக்கு நோட்டீஸ் அனுப்பத் தேவையில்லை என்றும் அறுதியிட்டுச் சொல்லியுள்ளார்.



கொண்டுள்ள தீர்ப்பு தி.மு.க. தலைவர் கருணாநிதி 1967 முதல் 1975 வரை முதல்வராக இருந்தபோது தொடர்ந்த வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு.

அதாவது முதலமைச்சர் ஒரு பொது நல ஊழியர் (Public Servant) என்பதுதான் அந்த வழக்கின் (M.Karunanidhi Vs Union of India, AIR 1979 SC 898) சாரம்சம். இதைச் சுட்டிக்காட்டி ஜெயலலிதாவும் பப்ளிக் சர்வென்ட், அவர் மீது வழக்குத் தொடர கொடுக்கப்பட்ட அனுமதி சரியே என்று உறுதி செய்திருக்கிறார். ஜெயலலிதா மீதான தீர்ப்பிற்கு முதல் ஆதாரமாக குன்ஹா மேற்கோள் காட்டியது கருணாநிதி வழக்கில் வந்த தீர்ப்பு. அவரது 1136 பக்க தீர்ப்பில் முதலில் மேற்கோள் காட்டப்பட்டுள்ள உச்சநீதிமன்ற தீர்ப்பும் இதுதான் என்பது வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு சற்று ராசியில்லாத பொருத்தமாகவே அமைந்து விட்டது.

### தீர்ப்பிற்கு எடுத்துக் கொண்ட அந்த நான்கு கேள்விகள்

பிறகு வழக்கு பதிவு செய்யப்பட்டது, மேற்கொள்ளப்பட்ட விசாரணை, விசாரணை அதிகாரியை நியமித்ததில் எழுப்பிய கேள்வி, குற்றப்பத்திரிகை தொடர்பான புகார், லண்டன் சொத்துக் குவிப்பு வழக்கு, சொத்துக் குவிப்பு வழக்கு போன்றவற்றை இணைத்தது எல்லாவற்றையும் விவாதித்துவிட்டு இறுதியாக 'இந்த வழக்கு அரசியல் பழிவாங்கல்' காரணமாக போடப்பட்டதா என்பது பற்றியும் அலசியிருக்கிறார். ஜெயலலிதா தரப்பில் வைக்கப்பட்ட இந்தக் குற்றச்சாட்டை 2003 வாக்கிலேயே உச்சநீதிமன்றம் நிராகரித்து விட்டதைச் சுட்டிக் காட்டியுள்ள நீதிபதி குன்ஹா, 'சுப்ரமணியன்சுவாமி கொடுத்த புகார் விசாரிக்கப்பட்டு, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு விசாரணை க்கு வந்திருக்கிறது.

ஆகவே அரசியல் பழிவாங்கல் மற்றும் உள்நோக்கத்தோடு வழக்கு தொடரப்பட்டுள் ளது என்ற குற்றச்சாட்டை நிராகரிக்கிறேன்' என்று தீர்மானமாகக் கூறியிருக்கிறார். இதை முடித்துக் கொண்டு தனது தீர்ப்பின் அடுத்த கட்டமாக நான்கு கேள்விகளுக்கு பதில் தேட தன் பயணத்தை தொடர்ந்துள்ளார் நீதிபதி. குற்றம் சாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்பட்டவர்கள் 66.65 கோடி வருமானத்திற்கு மீறி சொத்துச்சேர்த்து லஞ்ச ஊழல் சட்டப்படி குற்றம் புரிந்துள்ளார்களா என்பது முதல் கேள்வி. ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் கூட்டுச் சதி செய்து ஊழல் செய்துள்ளார்களா என்பது இரண்டாவது கேள்வி. சசிகலா, சுதாகரன், இள வரசி ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து சொத்து குவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஜெயலலிதாவைத் தூண்டினார்களா என்பது மூன்றாவது கேள்வி.

இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் ஆம் என்றால் என்ன தண்டனை என்பது நான்காவது கேள்வி. தன் தீர்ப்பில் இந்த மூன்று கேள்விகளையும் அரசு தரப்பு சாட்சியங்கள், ஆவணங்கள், குற்றம் சாட்டப்பட்டவர் சொன்ன பதில்கள், வைத்த வாதங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு அலசி, சல்லடை போட்டு பல்வேறு உச்சநீதி மன்ற மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புக்களை மேற்கோள் காட்டி இறுதியில் தனது தீர்ப்பை வழங்கியிருக்கிறார் குன்ஹா. அந்தத் தீர்ப்புத்தான் இப்போது ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியிருக்கிறது.

### தீர்ப்புக்கு முன்பு நீதிமன்றத்தில்...

தீர்ப்பு தினத்தில் சென்னையிலிருந்து விமானம் மூலம் பெங்களூர் வந்தார் ஜெயலலிதா. அவருடன் சசிகலா, இளவரசி ஆகியோரும் நீதி மன்றம் வந்தனர். 11 மணிக்குப் பிறகு தன் இருக்கைக்கு வந்த குன்ஹா, உங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபணம் ஆகியிருக்கிறது என்று அறிவிக்கிறேன் என்றதும் ஜெயலலிதா உள்ளிட்ட அனைவருமே அதிர்ச்சியடைந்து போய்விட்டார்கள். சசிகலா கண் கலங்கினார் என்றே நீதிமன்ற வட்டாரம் கூறுகிறது. எனக்கு மதியம் ஒரு மணி வரை கால அவகாசம் வேண்டும் என்றார் ஜெயலலிதா. அதன்படி கால அவகாசம் அளிக்கப்பட்டது. மதியம் விசாரணைக்கு வந்த போது ஜெயலலிதா தரப்பில் தங்களுக்கு குறைந்தபட்ச தண்டனை கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு எனக்கு 48 வயதான போது இந்த வழக்குத் தொடரப்பட்டது. இப்போது 66 வயதாகிறது. 18 வருடம் நடைபெற்ற வழக்கால் எனக்கு சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், சுவாசக் கோளாறு, உடல் நலக்குறைவு எல்லாம் வந்து விட்டது. எனக்கு இந்த வழக்கால் ஏற்பட்ட துயரங்கள் வாழ்நாள் முழுவதும் ஈடுகொடுக்க முடி யாது என்ற காரணத்தைச் சொன்னார். இதே மாதிரி காரணங்களை மற்றவர்களும் எடுத்து வைத்தார்கள். ஆனால் நீதிபதி எதற்கும் மசியவில்லை. ஜெயலலிதாவிற்கு நான்கு வருட சிறைத் தண்டனை. நூறு கோடி ரூபாய் அபராதம். சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு தலா நான்கு வருட சிறைத் தண்டனை. தலா பத்துக் கோடி ரூபாய் அபராதம் என்று விதித்து தீர்ப்பை எழுதி விட்டார்.

### தீர்ப்பிற்கு பின் தமிழகத்தில்


தீர்ப்பு வழங்கப்பட்டதும் தமிழகம் கொந்தளித்தது. குறிப்பாக அ.தி.மு.க. வினர் ஆங்காங்கே வன்முறையில் ஈடுபட்டனர். தி.மு.க. தலைவர் கருணாநிதியின் கோபாலபுரம் வீட்டுக்கு முன்பாக கூடியிருந்த தி.மு.க. தொண்டர்களுக்கும், அ.தி.மு.க.வினருக்கும் அடிதடி உருவானது. அதனால் அளிக்கப்பட்ட புகாரில் கருணாநிதி, ஸ்டாலின் ஆகியோர் மீது எப்.ஐ.ஆர் போடப்பட்டுள்ளது. ராமதாஸ், வைகோ, விஜயகாந்த் போன்றோர் தீர்ப்பை வரவேற்றார்கள். காங்கிரஸ், பா.ஜ.க. போன்ற கட்சிகளும் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்க வேண்டும் என்றன. ஆனால் அ.தி.மு.க. ஆதரவுக் கட்சிகளும், அ.தி.மு.க.வினரும், எங்கள் அம்மா காவிரியில் கர்நாடகத்துடன் போராடி தமிழகத்திற்கு நீதி யைப் பெற்றார். அதனால் கர்நாடக மாநிலம் வஞ்சித்து விட்டது. கருணாநிதியும், கர்நாடகமும் சேர்ந்து அம்மாவை சிறையில் போட்டுவிட்டார்கள் என்று பிரசாரம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் வியாபாரிகள், ஹோட்டல்கள், திரையுலகினர், மாணவ, மாணவிகள் என்று ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்



டில்லி பாராளுமன்ற வளாகத்தில் உண்ணா விரதமிருக்கும் அண்ணா தி.மு.க. எம்.பி.க்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சசிகலா


சுதாகரன்


இளவரசி

கள். தீர்ப்பால் ஜெயலலிதாவின் முதல்வர் பதவியும், சட்டமன்ற உறுப்பினர் பதவியும் பறிபோனது. புதிய முதல்வராக ஓ. பன்னீர்செல்வம் மீண்டும் பதவியேற் றுள்ளார். முதல்வர் பதவியில் இருக்கும் போதே சிறைத் தண்டனை பெற்றதால், ஜெயலலிதா பரிந்துரையில் பதவி யேற்ற அமைச்சர்கள் பதவியும் போய் விடும். அதனால் புதிய முதலமைச்சரான ஓ. பன்னீர்செல்வம் முன்னிலை யில் மற்ற அமைச்சர்களும் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்கள்.

### சிறையில் ஜெயலலிதாவும் நீதிமன்றில் பிணையும்

ஜெயலலிதா முன்பிருக்கும் முதல் சவால் பெங்களூரில் உள்ள பரப்பன அக்ரஹாரம் சிறையிலிருந்து பிணையில் வெளிவர வேண்டும். அதற்காக உடனே கர்நாடக உயர்நீ திமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். பிரபல வழக்கறிஞர் ராம் ஜெத்மலானி ஆஜராகியும் பிணை கிடைக்கவில்லை. அரெஸ்ட் பெயில் விரைவில் கிடைத்து விடும். ஆனால் கன்விக்ஷன் பெயில் கிடைப்பதில் காலதாமதம் ஏற்படும் என்பது ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட பீஹார் முன் னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ், ஹரியானா முன் னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சவுதாலா ஆகியோர் பிணை விவகாரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது. லாலு பிரசாத் யாதவ் 75 நாட்களுக்குப் பிறகும், சவுதாலா ஆறு மாதத் திற்கு பிறகும்தான் பிணையில் வெளிவர முடிந்தது. இந்த நிலையில் செப்டெம்பர் 29ஆம் திகதி பிணை மனு தாக் கல் செய்யப்பட்டு, 30ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. நீதிபதி ரத்னகலா விசாரணையை அக்டோபர் 6ஆம் திக திக்கு தள்ளி வைத்தார். மீண்டும் ராம்ஜெத்மலானி கோரிக்கை வைக்க, அக்டோபர் 1ஆம் திகதி மீண்டும் பிணை மனு விசாரணைக்கு வந்தது. இப்போதும் ஆறாம் திகதிக்குப் பதிலாக அக்டோபர் 7ஆம் திகதிக்கு பிணை மனு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

### 2021 வரை தேர்தலில் நிற்க முடியாதா?

சிறையில் இருக்கும் ஜெயலலிதாவைப் பார்க்க அ.தி.மு.க.வினர் படையெடுக்கிறார்கள். ஆனால், பெண் கள் சிறையில் இருக்கும் ஜெயலலிதா இவர்களைப் பார்க்க வேண்டுமென்றால் அரை கிலோ மீற்றர் தூரம் நடந்து ஜெயில் சூப்பிரண்டன்ட் அறைக்கு வர வேண்டும். இத னால் பார்வையாளர்களைப் பார்ப்பதைத் தவிர்த்து வருகி றார். புதிதாக தேர்வு செய்யப்பட்ட முதலமைச்சர் ஓ.பன் னீர்செல்வமே பார்க்க முடியாமல் திரும்பினார். ஜெயலலிதாவின் அரசு செய லாளர்களாக இருந்தவர் களும் பார்க்க முடியவில்லை. ஏன் கர்நாடக மாநிலத்தில் இருக்கும் முன்னாள் பிரதமர் தேவகவுடா சந்திக்க முயன் றும் முடியவில்லை. ஜெயலலிதா பிணையில் வெளிவந் தால்தான் அ.தி.மு.க.வின ருக்கு புத்துயிர் பிறக்கும். ஆனால் தீர்ப்பில் உள்ள குற்றம் நிரூபிக்கப்பட்டது (Conviction) என்பதற்கே தடை பெற்றால்தான் ஜெயலலிதா வின் அரசியல் எதிர்காலம் தப்பிக்கும். ஏனென்றால் நான்கு வருட சிறைத்தண்டனை, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்படி ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டால் ஆறு வரு டம் தகுதி இழப்பு எல்லாம் சேர்ந்து பத்து வருடங்கள் தேர் தலில் போட்டியிட முடியாது. 2016 சட்டமன்றத் தேர்தல், 2019 நாடாளுமன்றத் தேர்தல், 2021 சட்டமன்றத் தேர்தல் வரை தேர்தலில் போட்டியிட முடியாத அளவிற்கு இந்த தகுதியிழப்பு ஜெயலலிதாவின் அரசியல் வாழ்வினை அச் சுறுத்தும் என்பதுதான் இப்போதுள்ள நிலைமை.


### தி.மு.க. தலைவர் கருணாநிதியின் திடீர் அமைதி

இவ்வளவு பரபரப்பிலும் இத்தீர்ப்பு பற்றி தி.மு.க. தலை வர் கருணாநிதி இதுவரை கருத்துச் சொல்லவில்லை. அது அ.தி.மு.க.வினருக்கு எரிச்சலூட்டும் விதத்தில் அமைந்து விடும் என்பதற்காக அமைதி காக்கிறாரா அல்லது இந்த வழக்கில் விதிக்கப்பட்ட நூறு கோடி அபராதத்தைப்

*(59ஆம் பக்கம் பார்க்க...)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கசந்துபோன சீன ஜனாதிபதியின் இந்திய விஜயம்

சீன ஜனாதிபதி சி ஜின் பிங் தெற்காசியாவுக்கான தனது ஒருவாரகால விஜயத்தை ஆரம்பித்த போது அது கசப்பானதாக மாறும் என்று நினைத்திருக்கமாட்டார். பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த தினமான செப்டெம்பர் 17ஆம் திகதி இந்தியாவில் வந்திறங்குவதற்கு முன்னதாக ஜின் பிங் மாலை தீவுக்கும் இலங்கைக்கும் வெற்றிகரமான விஜயங்களை மேற்கொண்டிருந்தார்.

ஜின்பிங்கைப் போன்றே மோடியும் அந்த விஜயம் மிகவும் உற்சாகமானதாகவும் நம்பிக்கையூட்டுவதாகவும் அமையும் என்றே எதிர்பார்த்தார். சீன ஜனாதிபதியின் விஜயம் விசேடமான ஒன்றாக அமையவேண்டுமென்ற நோக்கிலேயே மோடி மிகுந்த அக்கறையுடன் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இராஜதந்திர நடைமுறைகளைப் புறந்தள்ளிவிட்டு, ஜின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முக்கியமான தலைவர்களின் விஜயங்களுக்கு முன்னதாக சர்ச்சைகளை தோற்றுவிக்கும் சீனர்களின் 'நாடகம்' 2006ஆம் ஆண்டிலேயே தொடங்கி விட்டது. நேருக்கு நேர் வெளிப்படையாகப் பேசுகின்ற சுபாவம் கொண்ட மோடி அஹமதாபாத்தில் சீன தலைவருடன் முதல் சந்திப்பிலேயே எல்லை ஊடுருவல் பற்றி பிரச்சினை கிளப்பத் தவறவில்லை**

# டில்லி டயறி



எம்.பி.வித்தியாதரன்

பிங்கை இந்தியப்பிரதமர் தனது சொந்த மாநிலமான குஜராத்தில் வைத்து வரவேற்றார். சுமார் 15 வருடங்களாக குஜராத்தின் முதலமைச்சராக பதவி வகித்த மோடி அந்தக் காலகட்டத்திலேயே சீனத்தலைமைத்துவத்துடன் தனது உறவுகளை வளர்த்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளுக்காக டில்லி வருவதற்கு முன்னதாக ஜின் பிங்கும் மோடியும் அஹமதாபாத்தில் மனந்திறந்து கலந்துரையாடினார்கள். சில தினங்களுக்கு முன்னர் மோடி ஜப்பானுக்கு விஜயம் செய்தபோது அந்நாட்டு பிரதமர் ஷின்சோ அபே செய்ததைப் போன்று இது இருந்தது.

பாகிஸ்தானில் மூண்டிருக்கும் அரசியல் கொந்தளிப்பு காரணமாக அந்நாட்டுக்கான விஜயத்தை சீன ஜனாதிபதி ரத்துச் செய்திருந்த நிலையில், புதுடில்லிக்கான அவரது விஜயம் கூடுதல் முக்கியத்துவமுடையதாகியது. முன்னதாக பிரேசில் நாட்டில் நடைபெற்ற 'பிரிக்ஸ்' உச்சிமகாநாட்டில் ஜின் பிங்குடன் சுமுகமான சந்திப்பை நடத்தியிருந்த பின்புலத்தில், இந்திய வருகையின் போது அவர் மோடியை தங்கள் பக்கம் கவர்ந்திழுக்கும் முயற்சியாக சுமார் பத்தாயிரம் கோடி டொலர்கள் பெறுமதியான நேரடி வெளிநாட்டு முதலீட்டை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்த இலக்கு அவரது விஜயத்துக்கு முன்னதாகவே சீன அதிகாரியொருவரினால் அறிவிக்கப்பட்டி



ஷுமார் எல்லையில் சீன துருப்புக்களும் சிவிலியன்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தது. மோடியின் விஜயத்தின் போது ஜப்பான் 300 கோடி டொலர்கள் நேரடி வெளிநாட்டு முதலீட்டுத் திட்டம் தொடர்பிலான உறுதி மொழியை வழங்கியது குறிப்பிடத் தக்கது.

ஆனால், இரு முக்கியமான தலைவர்களும் சுமுகமான பேச்சுகளை நடத்தி பரிசுப்பொருட்களைப் பரிமாறிக் கொண்டபோதிலும் கூட, அவர்களுக்கிடையிலான நட்புரிமை நீண்ட நாட்கள் நிலைக்க முடியாமற் போய் விட்டது. நேரு ஜாக்கெட் ஒன்றை சீன ஜனாதிபதிக்கு மோடி அன்பளிப்புச் செய்தார். அவரும் அதை உடனேயே அணிந்து கமராவின் முன்னால் பெருமையுடன் நின்றார்.

ஆனால், மிகவும் வண்ணமயமான வரவேற்பு வைபவத்துக்குப் பிறகு சூழ்நிலையை காஷ்மீரின் லடாக் பிராந்தியத்தில் ஷுமார் எல்லையில் சீனத்துருப்புகள் மேற்கொண்ட ஊடுருவல் பழுதாக்கிவிட்டது.

நேருக்குநேர் வெளிப்படையாகப் பேசுகின்ற சுபாவம் கொண்ட தலைவரான மோடி அஹமதாபாத்தில் சீனத் தலைவருடன் நடத்திய முதல் சந்திப்பிலேயே அந்த எல்லை ஊடுருவல் பற்றிப் பிரச்சினை கிளப்பத்தவறவில்லை. இந்தியப் பிராந்தியத்திற்குள் சீனத்துருப்புகள் எவ்வாறு கூடாரம் அமைத்தன என்பதுபற்றியும் திரும்பிச் செல்வதற்கு அத்துருப்புகள் மறுத்ததைப் பற்றியும் ஊடகங்களில் செய்திகள் பெருவாரியாக வெளிவந்திருந்த நிலையில் மோடிக்கு வேறு வழியிருக்கவில்லை.

சில சீன நகரங்களின் பாணியில் குஜராத்தின் நகரங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக அந்த மாநிலத்துடன் சீனா நான்கு உடன்படிக்கைகளைச் செய்து கொண்டது. குஜராத் பாணி ஊஞ்சலில் ஜின்பிங்கும் அவரது வசீகரமான மனைவியும் அமர்ந்திருந்து மகிழ்ந்ததை மோடி அவதானித்துக்கொண்டிருந்த வண்ணப் படங்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன.

ஆனால், குதூகலம் அத்துடன் முடிந்துவிட்டது. புதுடில்லியில் ஜின்பிங்குடன் தனியாக நடத்திய 90 நிமிட பேச்சுவார்த்தையின் போதும் எல்லை ஊடுருவல் குறித்து மோடி திரும்பவும் பிரச்சினை கிளப்பினார். உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தனது அரசாங்கத்தைக் கேட்டிருப்பதாக மோடியிடம் ஜின் பிங் கூறினார். உண்மைதான். சீனத் துருப்புகள் திரும்பிச் சென்று, தங்கள் ஜனாதிபதி டில்லியை விட்டுக் கிளம்பும் வரை, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ட்ரக்குகளில் ஏறியிருந்தனர். மீண்டும் கூடுதல் எண்ணிக்கையில் இராணுவ தளபாடங்கள் சகிதம் அத்துருப்புகள் இந்திய எல்லைக்குள் வந்தன.

**தவறான நேரத்தில் அநாவசியமான முறையில் மேற் கொள்ளப்பட்ட எல்லை ஊடுருவல் ஜின்பிங்-மோடி உச்சி மகாநாட்டைப் பாதித்து விட்டது. இந்தச் சர்ச்சை தோற்றுவிக்கப்படாதிருந்தால், 1962 போருக்குப்பிறகு ஆசியாவின் இரு பெரிய அயல்நாடுகளுக்கும் இடையே முன்னர் ஒரு போதும் நிகழ்ந்திராத வகையிலான-நினைவை விட்டகலாத உச்சி மகாநாடாக அது அமைந்திருக்கும்**

தவறான நேரத்தில் அனாவசியமான முறையில் மேற்கொள்ளப்பட்ட எல்லை ஊடுருவல் ஜின்பிங்-மோடி உச்சிமகாநாட்டை பாதித்துவிட்டது. அந்தச் சர்ச்சை தோற்றுவிக்கப்படாதிருந்தால், 1962 போருக்குப் பிறகு ஆசியாவின் இரு பெரிய அயல் நாடுகளுக்கும் இடையே முன்னர் ஒரு போதும் நிகழ்ந்திராத வகையிலான நினைவை விட்டகலாத உச்சிமகாநாடாக அது இருந்திருக்கும்.

சீனத் துருப்புகளின் இந்தச் செயல் பொறுத்துக்கொள்ள முடியாதது என்றும் அதனால் சீன- இந்திய உறவுகள் பாதிப்படையும் என்றும் மோடி சீனஜனாதிபதிக்கு தெளிவுபடக்கூறி விட்டார். பல்வலி ஒருபெரிய நோயல்ல என்றபோதிலும், பல்வலியின் போது முழு உடம்புமே பாதிக்கப்படுகிறதே என்று ஜின்பிங்கிற்கு மோடி கூறினாராம். இத்தகைய எல்லை ஊடுருவல்கள் தேசங்களுக்கிடையிலான நம்பிக்கையைப் பாழ்படுத்தி விடுகிறது.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு செய்தியாளர் மகாநாட்டை நடத்திய ஜின்பிங்கும் மோடியும் தயாரித்து வைத்திருந்த அறிக்கைகளையே வாசித்தனர். தெளிவாக வரையப்படாத எல்லைக் கோடு காரணமாகவே எல்லைப் பிரச்சினை ஏற்படுகிறது என்றும் சாத்தியமானளவு விரைவாக இருதரப்பினரும் இப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதில் உறுதிகொண்டுள்ளனர் என்றும் சீன ஜனாதிபதி தெரிவித்தார். ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க இரு தலைவர்களும் மறுத்துவிட்டனர். எல்லை ஊடுருவல் சம்பவம் காரணமாக தங்களுக்குக்கிடையே ஏற்பட்ட அசௌகரிய உணர்வை பகிரங்கத்தில் வெளிக்காட்டிக்கொள்ள இருவரும் விரும்பவில்லை என்பதை இது உணர்த்தியது. முதல் நாள் அஹமதாபாத்தில் அவதானிக்கக்கூடியதாக இருந்ததைவிட இருவரதும் உடல் மொழியும் கூட இங்கு வித்தியாசமானதாகவே இருந்தது.

துருப்புகளை வாபஸ்பெறுமாறு ஜின் பிங் உத்தரவிடாததால் இந்தியப் பிரதமர் அமைதி குலைந்துபோனார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. அத்தகைய உத்தரவொன்றை சீன ஜனாதிபதியினால் செய்திருக்க முடியுமென்று மோடி நம்பினார்.

சீனத் துருப்புகள் 15 நாட்கள் இந்திய எல்லைக்குள் தங்கி நின்றது மாத்திரமல்ல, தங்களின் எண்ணிக்கையை சுமார் 1000 இலிருந்து 1500 ஆக அதிகரித்ததுடன் கூடுதலான ட்ரக்குகள், ஹெலிகொப்டர்களையும் கொண்டிருந்தனர்.

இந்தியாவும் கூட அதன் துருப்புகளின் எண்ணிக்கையை எல்லையோரம் அதிகரித்து உஷார்படுத்தியிருந்தது. இருதரப்பு தளபதிகளுக்குமிடையில் சில சந்திப்புகளும் இடம்பெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தன. ஆனால், பெய்ஜிங்கில் இருந்து உத்தரவு வரும்வரை எதுவும் நடக்கவில்லை. பெய்ஜிங்கிற்குத் திரும்பிச் சென்ற இந்தியத்தூதுவர் சீனத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய அதேவேளை, ஜின் பிங்கின் இந்திய விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக பெய்ஜிங்கிற்குச் சென்றிருந்த வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜும் கூட, தனது தொடர்புகளின் ஊடாக இந்தப் பிரச்சினையைக் கிளப்பியிருந்தார்.

15நாள் முறுகல் நிலைக்குப் பிறகு வாபஸ்பெற ஆரம்பித்த சீனத்துருப்புகள் இந்தியா கேட்டுக்கொண்டதன் பிரகாரம் விரைவில் பழைய நிலையைப் பேணும் என்று கூறப்படுகிறது.

ஐக்கியநாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு பிரதமர் மோடி நியூயோர்க் சென்றிருந்த வேளையில் சுஷ்மா சுவராஜ் செப்டெம்பர் 26 ஆம் திகதி சீன வெளியுறவு அமைச்சர் வாங்ஜியைச் சந்தித்தார். செப்டெம்பர் 26க்கும் 30க்கும் இடைப்பட்ட நாட்களில் சீனத்துருப்புகள் வாபஸ் பெறப்படும் என்று சீனத் தரப்பு உறுதியளித்ததாகக் கூறப்படுகிறது.

எது எவ்வாறிருந்தாலும், இப்போது எழுகின்ற முக்கியமான கேள்வி ஏன் இந்த எல்லை ஊடுருவலை சீனத் துருப்புகள் செய்தன? அது திட்டமிட்ட ஊடுருவலா அல்லது தவறுதலாக இடம் பெற்று விட்ட ஒன்றா? இதன் பின்னணியில் இருந்தவர்கள் யார்? ஜனாதிபதி ஜின் பிங்கிற்கு முன்கூட்டியே ஊடுருவல் பற்றித் தெரியுமா? ஜின் பிங்- மோடி உச்சி மகாநாட்டைக் குழப்புவதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டதா? அவ்வாறானால், மக்கள் விடுதலை இராணுவம் மற்றும் அரசாங்கம் மீது ஜின் பிங்கிற்கு முற்றுமுழுதான கட்டுப்பாடு இல்லையா?

எவரிடமும் தெளிவான பதில் இல்லை. இராஜதந்திரிகளும் கேந்திரமுக்கியத்துவ விவகார நிபுணர்களும் குழம்பிப் போயிருக்கிறார்கள். சீன ஜனாதிபதியுடனான முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பை நடத்துவதற்காக இந்தியப்பிரதமர் ஆவலுடன் இருந்த வேளையில் சீனர்கள் ஏன் இவ்வாறு செய்தார்கள் என்பதை எவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆனால், சீனா இவ்வாறு நடந்து கொண்டிருப்பது இதுதான் முதற்தடவையல்ல. அனேகமாக, உயர்மட்டச் சந்திப்புகள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்கள் சகலவற்றின் போதும், சில சர்ச்சைகளை உருவாக்க சீனர்கள் முயற்சித்திருக்கிறார்கள்.

கடந்த வருடம் மே மாதத்தில், சீனாவின் புதிய பிரதமர் லீ கெக்கியாங் புதுடில்லிக்கு மேற்கொள்ளவிருந்த முதல் விஜயத்திற்கு முன்னதாக, சீனத்துருப்புகள் இத்தகைய எல்லை ஊடுருவல் ஒன்றைச் செய்தன. லடாக் பிராந்தியத்தில் டெப்சாங் சமதரையில் சீனத்துருப்புகள் கூடாரமொன்றை அமைத்ததையடுத்து முறுகல் நிலை ஏற்பட்டது. அதனால் அந்த விஜயம் அனேமாகத் தடம் புரண்டது.

உண்மையில், முக்கியமான தலைவர்களின் விஜயங்களுக்கு முன்னதாக சர்ச்சைகளைத் தோற்றுவிக்கும் இந்த நாடகம் 2006ஆம் ஆண்டில் தொடங்கியது எனலாம். அப்போதைய சீன ஜனாதிபதி ஹூஜின்ராவோவின் விஜயத்துக்கு முன்னதாக இந்தியாவுக்கான சீனத்தூதுவர் சுன் யூஸி அருணாச்சல பிரதேசம் சீனாவின் ஒரு பகுதி என்ற பெய்ஜிங்கின் உரிமைக் கோரிக்கையை பகிரங்கமாக வலியுறுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. இது ஆவேசமான பிரதிபலிப்புகளைத் தொடர்ச்சியாகத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது. ஜின்ராவோவின் விஜயம் சீர்குலைந்துபோனது. பிறகு 2010ஆம் ஆண்டில் அப்போதைய சீனப் பிரதமர் வென் ஜியாபாவோவின் விஜயத்துக்கு முன்னதாக சீனா ஜம்மு- காஷ்மீர் வாசிகளுக்கு அவர்களது கடவுச்சீட்டுகளின் பக்கங்களில் விசா முத்திரையைக் குத்தாமல், பிரத்தியேகமான தாளில் அதைக்குத்தி கடவுச் சீட்டுடன் இணைத்து வழங்கும் நடைமுறையைப் பின்பற்றியது. ஜம்மு-காஷ்மீர் பிராந்தியம் சர்ச்சைக்குரியது என்று உணர்த்தும் நோக்குடனேயே அவ்வாறு செய்யப்பட்டது.



ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தொடரில் உரையாற்றும் பிரதமர் மோடி

இவ்வாறாக சீனாவின் முன்னைய நடவடிக்கைகள் அமைந்திருந்த போதிலும், இத்தடவை, எல்லை ஊடுருவல் பெரும்பாலான நிபுணர்களையும் வெளியுறவு அமைச்சில் உள்ள அதிகாரிகளையும் அதிர்ச்சியடைய வைத்துவிட்டது. அதற்குக் காரணம், ஏற்கனவே சந்தித்திருந்த மோடியும் ஜின்பிங்கும் இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்துவதுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார ஒத்துழைப்பையும் அதிகரிப்பார்கள் என்று எதிர்பார்க் கப்பட்டதேயாகும். சீனப் பொருளா தாரம் மிகவும் துரிதமாக வியாபகம டைந்து வளமான சந்தை வாய்ப்பு களைப் பெறுவதில் ஆர்வம் காட்டிக் கொண்டிருப்பதால் ஜின்பிங் இத்த டவை உறவுகளை மேம்படுத்துவதில் கூடுதலான அளவுக்கு அக்கறை காட் டுவார் என்றும் நம்பப்பட்டது. அத்து டன் ஜப்பான், தென்கொரியா, வியட் நாம், பிலிப்பைன்ஸ் மற்றும் ஏனைய நாடுகளிடமிருந்து சீனா பிரச்சினை களை எதிர்நோக்குகிறது. இந்தப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவ தற்கு முன்னெடுக்கப்படக்கூடிய எந் தவொரு முயற்சியிலும் இந்த நாடு கள் இந்தியாவின் உதவியை நாடு கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

சீன ஜனாதிபதியினால் வெளிக் காட்டப்படுகின்ற நட்புரிமைக்கு மோடி எவ்வாறு பிரதிபலிப்பைக் காண்பிக்கப் போகிறார் என்பதை அறிவதில் ஜப்பான் மற்றும் அவுஸ்தி ரேலியா போன்ற நாடுகள் கூட ஆர் வம் காட்டிக்கொண்டிருந்தன. யுரே னியம் இறக்குமதிக்காக அவுஸ்திரே லிய பிரதமருடன் மோடியின் அர சாங்கம் அண்மையில் உடன்படிக்கை யொன்றைச் செய்திருந்தது. அத்து டன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைச் சந்திப்பதற்கான ஏற்பா டுகளை மோடி செய்துகொண்டிருந்த வேளையிலேயே சீன ஜனாதிபதி யின் இந்திய விஜயமும் இடம்பெற் றது.

இத்தகைய பின்புலத்தில், சீனா வுக்கு எதிரான அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா, அவுஸ்திரேலிய கூட் டணியிலிருந்து இந்தியாவைத் தன் பக்கம் கவர்ந்திழுப்பதில் ஜின்பிங் முக்கியமான பங்கை வகிப்பார் என் றும் நிபுணர்கள் எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

ஆனால், சீனாவில் வலிமை பொருந்திய அதிகாரமையத்தின் கட் டளையின் பிரகாரம் ஜின்பிங்கிற்கு வேறுதிட்டங்கள் இருந்திருக்கக் கூடும். அந்த அதிகாரமையம் 2006 ஆம் ஆண்டில் இருந்தே இவ்வாறாக செயற்பட்டுவருவதால், ஜின்பிங்கும் அத்தகைய திட்டமொன்றுக்கு அடி பணிய நேர்ந்துவிட்டது என்றே தோன்றுகிறது. எது எவ்வாறிருந்தா லும், கடந்த மூன்று தசாப்தங்களில் பாராளுமன்றத்தில் முற்றுமுழுதான அறுதிப் பெரும்பான்மையைப் பெற் றிருக்கக்கூடிய அரசாங்கம் ஒன்றுக்கு தலைமை தாங்குகின்ற இந்தியப் பிரதமராக விளங்கும் மோடியிடமி ருந்து சீன ஜனாதிபதி உரம் வாய்ந்த செய்தியொன்றைப் பெற்றிருக்கிறார் என்பதிற் சந்தேகமில்லை.

இப்போது சீனத் துருப்புகள் திரும் பிச்சென்றுவிட்டன. ஆனால், இருத ரப்புக்கும் இடையிலான நம்பிக்கை பாதிக்கப்பட்டுவிட்டது. மோடியும் கூட, இனிமேல் ஜின்பிங்கின் வார்த் தைகளை கேள்விக்குட்படுத்தாமல் நம்பப்போவதில்லை. மிகவும் கூடுத லான அளவுக்கு மோடி ஜாக்கிரதை யுடனேயே செயற்படுவார்.

உண்மையிலேயே தனது பெருவி ருப்புக்குரிய யோசனையான 'கடல் வாணிபவழி' (Maritime Silk Road)யை தெற்காசிய நாடுகளைக் கொண்டு ஏற்கச் செய்வதற்கான நோக்குடனேயே ஜின்பிங் இந்தப் பிராந்தியத்துக்கான விஜயத்தை ஆரம்பித்தார். மாலைதீவிடமிருந்தும் இலங்கையிடமிருந்தும் அத்திட்டத் துக்கு முழுமையான ஆதரவு கிடைத் தது. ஆனால், இந்தியாவில் எல்லை ஊடுருவல் தொடர்பான சர்ச்சையி னால் கடல்வாணிப வழி விவகாரம் தலைகீழாகிப் போனது. ஒரு சில புரிந்துணர்வு உடன்படிக்கைகளைத் தவிர, பெரிதாக வேறு எதுவும் இடம் பெறவில்லை. முன்னர் அறிவிக்கப் பட்ட 10 ஆயிரம் கோடி டொலர்கள் நேரடி வெளிநாட்டு முதலீட்டுத் திட்டம் சுமார் 2000 கோடி டொலர் களாகக் குறைந்துவிட்டது. ஏன் இவ் வாறு நடந்தது என்று ஒவ்வொரு வரும் ஊகித்துக்கொள்ள வேண்டி யதுதான். எனவே இந்தியாவுடனான உறவுகளைப் பொறுத்தவரை சீன ஜனாதிபதியினால் ஜப்பானியப் பிரத மரைத் தோற்கடிக்க முடியாமற் போய்விட்டது என்றுதான் கூற வேண்டியிருக்கிறது.

ஜின்பிங் உடனடியாகச் சில திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாத பட்சத்தில், தற்போதைய போக்கில் பெருமளவுக்கு மேம்படுவது சாத்திய மில்லை என்றே தோன்றுகிறது. ஆசி யாவினது தலைவிதியை மாத்திர மல்ல, உலகினதும் தலைவிதியை மாற்றவல்ல இருபெரும் அயல் நாடு களுக்கிடையேயான உறவுகள் சுமுகமானவையாகவும் பலம் பொரு ந்தியவையாகவும் மாறுவதற்கு எல் லைத் தகராறுக்கு நிலைபேறான தீர் வொன்றைக் காணவேண்டியிருக்கி றது என்பதை தானும் ஏற்றுக்கொள் வதாக ஜின்பிங்கிடம் மோடி கூறியி ருக்கிறார். இதைச் செய்வதற்கான அதிகாரத்தையும் ஆற்றலையும் இப் போது மோடி கொண்டிருக்கிறார். ஆனால், அவருக்கு உதவிக் கரத்தை நீட்டி எல்லைப்பிரச்சினையை முடி வுக்குக் கொண்டுவர ஜின்பிங்கினால் இயலுமா?

அவ்வாறு நடைபெறாத பட்சத்தில், உபகண்டம் இந்தியாவுக்கும் சீனா வுக்கும் இடையே பதற்றமும் பிளவு களும் கொண்டதாகவே தொடர்ந்தும் இருக்கும். இலங்கை, மாலைதீவு, நேபாளம் போன்ற ஏனைய அயல் நாடுகள் இந்தப் பிரச்சினைக்கு இடை யில் இழுபட்டுக்கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

எவ்வாறெனினும், நல்லநோக்கத்து டன் திட்டமிடப்பட்ட சீன ஜனாதிபதி யின் இந்திய விஜயம் அநாவசிய மாக கசப்பானதாகப் போய்விட்டது. சற்றுக் கூடுதலான தயாரிப்புடனும் மனவுறுதியுடனும் செயற்படிருந் தால், ஆசியாவின் தலைவிதியை ஜின்பிங்கினால் மாற்றியிருக்க முடி யும். அத்தகையதொரு உன்னதமான தருணம் வருவதற்கு நாம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு காத்திருக்க வேண்டுமோ? ஜின்பிங்கின் அழைப்பை ஏற்று அடுத்தவருடம் மோடி சீனாவுக்கு விஜயம் செய்யும் வரையாக அது இருக்கக்கூடுமோ?

## மீண்டும் ஐ.நா.வில் காஷ்மீர் நெருக்கடி

இந்திய - பாகிஸ்தான் உறவுகளில் மீண்டும் ஒரு தடவை முட்டுக் கட்டை நிலை ஏற்பட்டிருக்கிறது. இரு நாடுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளினதும் வெளியுறவுச் செயலாளர்க ளுக்கிடையிலான பேச்சுவார்த்தை கள் நடைபெறவிருந்ததற்கு ஒரு வாரம் முன்னதாக புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் காஷ்மீரின் ஹுரியத் தலைவர்களைச் சந்திப்பதற்கு தீர்மானித்ததே இதற் குக் காரணமாகும். மோடியின் பதவி யேற்பு வைபவத்தில் கலந்துகொள்வ தற்காக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கடந்த மேமாத பிற்பகுதியில் டில்லிக்கு வருகைதந்த வேளையி லேயே பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது. ஆனால், பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க முடியா மற் போய்விட்டது. இந்தியா அதை ரத்துச் செய்துவிட்டது.

பேச்சுவார்த்தைகள் சீர்குலைந்த மைக்கு பாகிஸ்தானைக் குற்றஞ்சாட் டியிருக்கிறார் இந்திய வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ். நவாஸ் ஷெரீப் டில்லிக்கு வந்தபோது அவர் அங்கு வைத்து ஹுரியத் தலைவர்க ளைச் சந்திக்க முடியாது என்று அவ ரிடம் தெளிவாகக் கூறப்பட்டது. அவ ரும் சந்திக்கவில்லை. ஆனால், இரு நாடுகளின் வெளியுறவுச் செயலாளர் களும் சந்திப்பதற்கு முன்னதாக ஹுரியத் தலைவர்களை டில்லியில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் சந்திக்க வேண்டிய தேவை என்ன என்று கேட்கிறார் சுஷ்மா சுவராஜ். அத்தகைய சந்திப்பை நடத்த வேண் டாமென்று பாகிஸ்தான் உயர்ஸ்தானி கருக்கு எச்சரிக்கையும் செய்யப்பட் டது.


இந்தியாவின் புதிய அரசாங்கம் பாகிஸ்தான் தொடர்பில் புதிய கொள் கையொன்றைக் கொண்டிருக்கிறது. சகல விவகாரங்கள் தொடர்பிலும் பேச்சுவார்த்தைகளையும் கலந்தா லோசனைகளையும் நடத்துவதில் இந் திய அரசாங்கம் நம்பிக்கைகொண்டி ருக்கிறது. ஆனால், அத்தகைய பேச்சு வார்த்தைகளோ, கலந்தாலோசனை களோ பயங்கரவாதத்தின் நிழலில் இடம்பெறுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது என்று சுஷ்மா சுவராஜ் கூறியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் கூட்டத் தொடரில் உரையாற்றிய நவாஸ் ஷெரீப் இந்தியா மீதான தனது ஆத்திரத்தை வெளிப்படுத்தத் தவறவில்லை. அவரின் செப்டெம் பர் 26 ஐ.நா. உரை, முன்னாள் இரா ணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர் வெஸ் முஷாரப் ஆற்றியிருக்கக் கூடிய உரைகளை விடவும் கடுமை யானதாக இருந்ததாகக் கூறப்படுகி றது. ஷெரீப் காஷ்மீர் பிரச்சினையைக் கிளப்பியது மாத்திரமல்ல, அவரின் உரையின் பெரும்பகுதி காஷ்மீர் பற்றியதாகவே இருந்தது. மாறியிருக் கும் புவிசார் அரசியற் சூழலில் ஐ.நா. வில் இருதரப்பு பிரச்சினையைக் கிளப்புவது பயனற்றது என்பதைத் தெரிந்திருந்தும் கூட, 1948 ஐ.நா.தீர் மானத்தில் கூறப்பட்டிருப்பதைப் போன்று காஷ்மீரில் சர்வஜன வாக் கெடுப்பை நடத்தவேண்டுமென்று கோரிக்கைவிடுத்ததைக் காணக்கூடி யதாக இருந்தது. காஷ்மீரை ஆக்கிர மித்திருக்கும் இந்தியா, அப்பிராந்தி யத்தின் பிரஜைகளின் சுதந்திரத்தை யும் கௌரவத்தையும் நிராகரிப்பதா கவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அடுத்த நாள் ஐ.நா.வில் உரை யாற்றிய நரேந்திரமோடி தனக்கேயு ரித்தான பாணியில் பாகிஸ்தானைக் கடுமையாகக் கண்டனம் செய்தார்.

உலகளாவிய அரசியல் நிலைவரங் கள், பயங்கரவாதம் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய விவகாரங்கள் மீது கவனத்தைச் செலுத்தி உரையாற்றிய இந்திய பிரதமர் எந்த விவகாரம் தொடர்பிலும் பாகிஸ்தானுடன் பேசு வதற்கு தனது நாடு தயாராயிருக்கி றது. ஆனால், சரியான சமாதானச் சூழ்நிலையை பாகிஸ்தான் உரு வாக்க வேண்டும் என்று வலியுறுத்தி னார். பயங்கரவாதத்தின் நிழலின் கீழ் பேச்சுவார்த்தையை நடத்த முடியாது என்பதை மோடி தெட்டத் தெளிவா கக் கூறினார்.

(33ஆம் பக்கம் பார்க்க...)



ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றும் நவாஸ் ஷெரீப்

**காஷ்மீர் பிரச்சினையை ஐ.நா.வில் கிளப்பிய நவாஸ் ஷெரீப்பின் செயல் அண்மைய எதிர்காலத்தில் இந்திய பாகிஸ்தான் பிரதமர்களுக்கிடையில் எந்தவொரு சந்திப்பும் இடம்பெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்பதை தெளிவாக உணர்த்தியிருக்கிறது. நியூயோர்க்கில் இருவரும் கைகுலுக்குவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்





ஜோன் அஸிஸ்



# ஸ்கொட்லாந்தின் சுதந்திரம்

## சர்வஜன வாக்கெடுப்பு தோல்வி ஆனாலும் பல விடயங்களில் பெருவெற்றி

ஸ்கொட்லாந்து சுதந்திர நாடாக இருக்கவேண்டும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? இந்த வாக்கியத்தை ஆங்கிலத்தில் கூறினால் Do you believe Scotland Should be an Independent country?

ஒன்பது சொற்கள் கொண்ட இந்த வாக்கியத்திற்கு மில்லியன் கணக்கான வாக்காளர்கள் வாக்களித்த போது (2014 செப்டெம்பர் 18) மில்லியன் அளவான காரணங்களும் இருந்திருக்கும். இல்லை என்று கூறியவர்கள் 2,001,926 வாக்குகளை அளித்தனர். 'ஆம்' என்று கூறியவர்கள் 1,617,989 வாக்குகளை அளித்தனர். இந்த சர்வஜனவாக்கெடுப்பில் 84.5 வீத மக்கள் பங்கு பற்றினர். வாக்களிப்பு முன்னர் இல்லாத உச்சத்தைத் தொட்டது. இறுதி முடிவுகள் 55% சுதந்திரத்திற்கு எதிராகவும் 45% ஆதரவாகவும் அமைந்தது.

தேர்தல் பற்றிய எதிர்வு கூறல்கள், கருத்துக் கணிப்புகளை விட 'இல்லை' வாக்கு வித்தியாசம் அதிகமாக இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. 1995 இல் கனடாவின் கியுபெக் மாகாணம் பிரிந்து சுதந்திரமாகச் செல்ல வேண்டுமா என்று வாக்களித்த போது மயிரிழை இடைவெளியில் 60,000 வாக்குகளால் தோல்வி அடைந்தது. இங்கே இடைவெளி பெரிதாக இருந்தாலும் இரு தரப்பும் கடும் போட்டியாக அமைந்த தேர்தலாக ஸ்கொட்லாந்து சர்வஜன வாக்கெடுப்பு அமைந்தது.

ஸ்கொட்லாந்தின் சுதந்திரம் பற்றிய இந்தப் பிரச்சினை பிரித்தானியா ஒன்றுபட்ட தேசமாக நிலைத்திருக்கப் போகிறதா அல்லது முன்னாள் சோவியத் யூனியன் என்ற இராட்சத தேசம் சிதைந்து அழிந்தது போல் சிதையப் போகிறதா என்ற கேள்வி சில வாரங்களுக்கு முன் என் மனதில் எழுந்து என்னைக் குழப்பிக் கொண்டிருந்தது. இப்போது தெளிவாக 'இல்லை' என்று வாக்காளர்கள் கூறிவிட்டார்கள். ஆனால் பிரித்தானியா ஒன்றுபட்ட தேசமாக நீடிக்குமா? இல்லை சிதைந்து போகுமா? என்ற கேள்விகளை தனித்தனியாக பார்த்தால் 'ஆம்', 'இல்லை' என்ற இரண்டு பதில்களை யும் கூறலாம்.

ஸ்கொட்லாந்து மக்கள் ஐக்கிய இராச்சியம் ஒன்றுபட்ட தேசமாக இருக்க வேண்டும் என்ற தேர்வைச் செய்து விட்டார்கள். ஆனால் சர்வ ஜனவாக்கெடுப்பு ஒருவிடயத்தைத் தெளிவாக்கியது. ஐக்கிய இராச்சியத்தில் அரசியல் யாப்புச் சீர்திருத்தம் அத்தியாவசியமாகிவிட்டது. அது ஒரு அவசரத் தேவை. பிரிவினைக்கு ஆம் போட்டவர்களின் பிரசார இயக்கம் தேர்தலுக்கு ஒரு மாதத்திற்கு முன் வேகம் பெற்ற போது யாப்புத்திருத்தம் தேவை என்பது உறுதியாயிற்று. இதைக் கண்ணுற்ற அரசியல்வாதிகளான கோர்டன் பிரவுண், எட் மில்லிபான்ட் (தொழிற்கட்சி), டேவிட் கமரூன் (கன்சர்வேட்டிவ்), நிக் கிளெக் (லிபரல் ஜனநாயகக்கட்சி) ஆகியோர் ஸ்கொட்லாந்து வாக்காளர்களை நோக்கிச் சில வாக்குறுதிகளைக் கூற ஆரம்பித்தனர். அவர்கள் யாவரும் 'இல்லை' என வாக்களிக்க வேண்டாம். நாம் கூடிய அதிகாரங்களை உங்களுக்குத் தருகிறோம் என்றார்கள். ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்திற்கு கூடிய அதிகாரங்கள் வழங்கப்படும். வரிவிதிப்பு உட்பட எல்லாவிடயங்களிலும் அதிகாரம் இருக்கும். நாட்டின் பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் என்ற இரண்டு விடயங்கள் தவிர மீதி எல்லா அதிகாரமும் தரப்படும் என்றெல்லாம் உறுதியளித்தனர்.

1999இல் ஸ்கொட்லாந்து அதிகாரப் பரவலாக்கல் மூலம் சுயாட்சியுடைய ஒரு பகுதியாக எழுச்சி பெற்றது. அங்கு அதிகாரப் பரவலாக்கலின் குறைந்தபட்ச அம்சங்கள் யாவும் இருந்தன. ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் நிறைய அதிகாரங்களைக் கொண்டது. சுகாதாரம், கல்வி,சூழல், சமூகசேவை, வீடமைப்பு, உள்ளூராட்சி, விவசாயம், வனத்துறை, மீன்பிடி, போக்குவரத்து ஆகிய விடயங்களில் ஸ்கொட்லாந்து தனக்குரிய சட்டங்களை இயற்றலாம். வருமான வரியைக் கூட மூன்று பென்ஸ் அளவால் கூட்டவும், குறைக்கவும் ஸ்கொட்லாந்துப் பாராளுமன்றத்திற்கு அதிகாரம் இருந்து வருகிறது. ஆகையால் பிரிந்து போதலுக்கான 'ஆம்' பிரிவினர் தேர்தலில் தோல்வியடைந்த போதிலும் உண்மையில் அவர்களுக்கு வெற்றி தான் கிட்டியிருக்கிறது. ஸ்கொட்லாந்தில் வாழும் மக்களாகிய நாம் எமது எதிர்காலத்தை, நாமே தீர்மானிக்கிறோம் என்பதை அம்மக்கள் நெஞ்சை நிமிர்த்திக் கூறிவிட்டார்கள். ஆகையால் சுதந்திரத்திற்கான ஆம் கருத்து வென்றுவிட்டது என்றே கூற வேண்டும். உறையிலிருந்து வாளை எடுத்து வீசுவதோ, அல்லது உரத்துக் கோஷம் போடுவதோ போன்று இல்லாமல் இருக்கலாம். தேர்தல் முடிவுகள் ஸ்கொட்லாந்திற்கு வெற்றியைத்தான் தந்திருக்கிறது. சுதந்திரம் வழங்கியிருக்கக்கூடிய நிச்சயமற்ற தன்மை இன்று இல்லை. இருந்தாலும் ப(F)ஸ்லேன் நீர்மூழ்கி கப்பல் தளத்தில் அணுஆயுத ஏவுகணைகளை



கமரூன்



சல்மொண்ட்



கோர்டோன் பிரவுண்



எட் மில்லிபாண்ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தி வைத்தல், ஈராக், சிரியா யுத்தம் போன்ற சர்ச்சைக்குரிய விடயங்களில் ஸ்கொட்லாந்தியர் வெஸ்ட் மினிஸ்டரில் உள்ளவர்களுக்கு விட்டுக்கொடுப்புகளைச் செய்யத்தான் வேண்டும். தாம் அவாவிய சுதந்திரத்தை அவர்கள் அடையாவிட்டாலும் வெற்றி நமதே என்று அவர்கள் கூறிக்கொள் ளலாம். பிரிந்து போவதற்காக வாக்களித்தி ருந்தால் பவுண்ஸிற்கு பதிலாக புதிய நாண யம் ஒன்றைத் தேர்ந்து கொள்ளுதல், ஐரோப் பிய யூனியனில் அங்கத்துவம் பெறுதல், சுதந்திரம் பற்றிய விபரங்களைப் பேச்சு வார்த்தையின் மூலம் தீர்வு செய்தல் போன்ற மிகப்பெரிய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். இப்போது ஸ்கொட்



நிக் கிளெக்

லாந்து பவுண்ஸ் நாணயத்தையே தொடர்ந்து உபயோகிக்கிறது. இங்கிலாந்து வங்கி அதற்கு மத்திய வங்கியாக உள்ளது, யூரோ நாணயத்தை செலாவணிக்குரியதாக ஏற் காமலே ஐரோப்பிய யூனியனின் அங்கத்து வமும் ஸ்கொட்லாந்துக்குக் கிடைக்கிறது. பி.பி.சி. ஒலி பரப்புச் சேவையும் கூட அதற்கு உரிமையானதுதான். றோயல் பாங் ஒவ் ஸ்கொட்லாந்து மற்றும் ஸ்ரான்டட் லைவ் போன்ற வங்கிகளும் வர்த்தக நிறுவனங்க ளும் மூட்டை கட்டிக்கொண்டு ஸ்கொட்லாந் தைவிட்டு வெளியே வரவேண்டியதால், ஏற் பட்டிருக்கக்கூடிய வியாபார, வர்த்தக இழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. ஸ்கொட் லாந்து பிரிந்து போவதில்லை என்று எடுத்த முடிவால் பல நன்மைகள் கிடைப்பதோடு, அதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. ஆழம் தெரியாமல் குதிப்பதில் உள்ள ஆபத்துக்களை எதிர் நோக்க வேண்டி ஏற்படவில்லை.

(65ஆம் பக்கம் பார்க்க...)

# தொடரும் விவாதம்

ஸ்கொட்லாந்தின் சர்வஜனவாக்கெடுப்பு நடைபெற்று முடிந்து விட்டது. ஆயினும் ஸ்கொட்லாந்திற்கு அதிகாரத்தைப் பரவ லாக்குதல் என்பது பற்றிய விவாதம் முடிவுக்கு வரவில்லை, அது தொடர்கிறது. தொழிற்கட்சி, கன்சர்வேட்டிவ்கட்சி, லிபரல் ஜனநாயகக் கட்சி என்ற மூன்று கட்சிகளும் ஸ்கொட்லாந்திற்குக் கூடிய அளவு அதிகாரத்தை வழங்குவோம் என்று உறுதியளித்துவிட்டன. ஆகை யால் இப்போது முழுக்கவனமும் பிரித்தானியாவில் அரசியல் யாப் புக் கட்டமைப்பின் சீர்திருத்தம் பற்றியதாக மாறியுள்ளது. ஸ்கொட் லாந்தில் சர்வஜனவாக்கெடுப்பு இப்போதைக்கு ஒரு விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்து விட்டது. ஆனால் பிரித்தானியாவில் அதி காரம் எங்கு உறைகிறது என்ற பிரச்சினைக்குரிய கேள்வி என்ற வெடி குண்டைப் பற்றவைக்கக் கூடிய தீப்பொறிபோல் அமைந்துவிட்டது என்று பி.பி.சி.யின் நிக்ரொபின்சன் கூறினார். அடுத்து அங்கே என்ன நிகழப்போகின்றது எனப்பார்ப்போம்.

***பிரிட்டிஷ் அரசாங்கமும் எதிர்க்கட்சியான தொழிற்கட்சியும் எத்தகைய உறுதிமொழிகளை வழங்கியுள்ளன?***

முன்னாள் தொழிற்கட்சிப் பிரதமர் கோர்டன் பிறவுண் அவர்களும் ஏனைய மூன்று கட்சிகளின் முக்கிய தலைவர்களும் தீர்மானங்கள் பல வற்றை உள்ளடக்கிய உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளனர். அதில் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றிய கால அட்டவணை உள்ளது. ஸ்கொட்லாந்து பற்றி அடுத்த ஜனவரி முடிவுக்கிடையில் ஒரு மசோதா கொண்டுவரப்பட வேண்டும். ஸ்கொட்லாந்தில் பொதுநலவாய மகா நாட்டு ஒழுங்குகளைச் செய்து கிளாஸ்கோ நகரில் அதனை நடத்த உத வியவரான சிமித் கெல்வின் பிரபு இந்தச் செயல்முறையை மேற் பார்வை செய்வார். ஸ்கொட்லாந்தின் பாராளுமன்றத்திற்கு முழுமை யான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்பதை எல்லாத் தலை வர்களும் ஏற்றுள்ளனர். வரிதொடர்பான அதிகாரம், அரசுச்செலவுகள், சமூக நலன் செலவுகள் என்பனபற்றியும் ஸ்கொட்லாந்தின் பாராளு மன்றம் கூடுதல் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் வகையிலான சிபார்சுகள் பற்றி பாராளுமன்றத்தில் ஒக்டோபர் முடிவுக்கு முன்னர் அறிவிக்கப்படும்.

***பிரித்தானிய அரசாங்கம் இந்த உறுதி மொழிகளை நிறை வேற்றுமா?***

இங்கிலாந்து மக்களுக்கு இப்போது தனியான பாராளுமன்றம் இல்லை. ஸ்கொட்லாந்தின் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டு பொது மக்கள் அவையில் பிரதிநிதிகளாக இருக்கும் ஸ்கொட்லாந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்போது இங்கிலாந்து மக்களுக்குரிய சட்டங்களையும் இயற்றும் அதிகாரம் உடையவர்கள். ஆகவே ஆங்கிலேயர் சட்டங்களுக்கு ஆங்கிலேயர் வாக்குகள் மட் டுமே' (English votes for English Laws) என்றொரு வாதமும் உள்ளது. சர்வஜன வாக்கெடுப்பு முடிந்த பின்னர் மறுநாள் பிரதமர் டேவிட் கமரூன் ஸ்கொட்லாந்திற்கு அதிகாரப்பரவலாக்கல் என்பதை ஆங்கிலேயர் சட்டங்களுக்கு ஆங்கிலேயர் வாக்குகள் மட்டுமே என்ற பிரச்சினையோடு இணைத்துத்தான் நோக்க முடியும் என்று மிகுந்த கோபத்தோடு பேசினார். இது கடும் எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'இல்லை' என்று வாக்களித்தவர்களின் குதூகலம்

துள்ளது. ஸ்கொட்லாந்தில் இன்று 59 ஆசனங்களைக் கொண்டுள்ள தொழிற்கட்சி டேவிட் கமரூனின் இப் பேச்சில் உள்ள ஆபத்தான பின்விளைவுகள் குறித்துக் கவனமாக இருக்க வேண்டிய தேவை உள்ளதாகக் கருது கிறது. வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்றத்தில் ஸ்கொட் லாந்து பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கை குறைக் கும் எந்த நடவடிக்கையும் தொழிற்கட்சியின் எதிர்கால நிர்வாகத்தைப் பாதிக்கும். பின்னர் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் பிரதிப்பிரதமர் நிக்கிளெக் அவர்களின் கருத்து வெளியாகியது. பிரதமரின் இந்தக் கூற்று தேர்த லுக்கு முன்னர் தொழிற்கட்சிக்கும்,கன்சர்வேட்டிவ் கட்சி க்கும் இடையே ஒரு முட்டுக்கட்டையாக அமையப்போ கிறது என்று அவர் கூறினார். டேவிட் கமரூன் இவ்வாறு பேசிய பின்னர் டவுணிங் வீதியில் உள்ள பிரதமர் அலுவ லகம் ஸ்கொட்லாந்து மக்களுக்கு எப்படியிருந்தாலும் கூடியளவு அதிகாரங்கள் வழங்கப்படும், ஸ்கொட்லாந்து எல்லைக்கு தெற்கே உள்ள இங்கிலாந்து மக்கள் பற்றிய பிரச்சினை இதில் சம்பந்தப்படாது என்று அறிவித்தது. ஆனால் ஸ்கொட்லாந்தின் தேசியவாதிகள் வெஸ்ட்மி னிஸ்டரின் மத்திய அரசியல்வாதிகள் ஸ்கொட்லாந்து வாக்காளர்கள் பிரிந்துபோவதற்கு வாக்களிக்காமல் செய் வதற்கான ஏமாற்று வேலை ஒன்றைச் செய்துவிட்டதாக குற்றம் சாட்டுகின்றனர். சர்வஜன வாக்கெடுப்பு முடிந்த கையோடு தன் பதவியில் இருந்து விலகிய ஸ்கொட்லாந்து முதன்மை அமைச்சர் அலெக்ஸ் சல்மொன்ட் இவ்வா றான குற்றச்சாட்டைக் கூறியுள்ளார்.

***வேறு என்ன மாற்றங்கள் ஏற்படலாம்?***

கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் உள்ளவர்களிடமிருந்து டேவிட் கமரூனிற்கும் அழுத்தம் வந்துள்ளது. பர்னெற் போர்முலா (BARNETT FORMULA) எனப்படும் வாய்ப்பாடு ஒன்றைப் பிரயோகித்து இப்போது ஸ்கொட் லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய அலகுகளிற்கு பொதுப் பணம் பங்கிடப்படுகிறது. இந்த வாய்ப்பாடு முறையை ஒழிக்க வேண்டும் என்று கட்சிக்குள் உள்ள ஒரு பிரிவினர் கூறுகின்றனர். தற்போதைய சனத்தொ கையினை அடிப்படையாகக் கொண்டு பொது நிதியைப் பங்கீடு செய்வதற்குப் பதில் பொதுமக்களின் தேவை யின் அடிப்படையில் பங்கீடு அமைய வேண்டும் என்று டொமினிக் கிரீவ் போன்ற அரசியல்வாதிகள் வற்புறுத்து கின்றனர். 'பர்னெற் போர்முலா'வின்படி ஸ்கொட்லாந் திற்குக் கிடைக்கும் பணம் இப்போது இங்கிலாந்திற்குக் கிடைப்பதை விட ஆளொருவருக்கு 20% கூடக் கிடைக் கின்றது. வேறுசிலர் பிரித்தானியாவிற்குப் புதியதொரு சமஷ்டிமுறை வேண்டும். அச்சமஷ்டியில் இங்கிலாந்து ஒரு தனி மாநிலமாக அதிகாரங்களைப் பெற்றதாக இருக்கவேண்டும் ஆங்கிலேய முதலமைச்சராகவுள்ள இங்கிலாந்துப் பாராளுமன்றம் ஒன்று வேண்டும் என்று கூறுகின்றனர். டேவிட்கமரூன் இப்போது இவ்விடயங் கள் பற்றி தனது கன்சர்வேட்டிவ் கட்சியின் 20 பாராளு மன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட் டுள்ளார்.

***அலெக்ஸ் சல்மொன்ட் இடத்திற்கு யார் நியமிக் கப்படுவார்?***

நிக்கோலா ஸ்ரர்ஜியன் (Nicola sturgeon) பெரும் பான்மையினரின் விருப்புக்குரியவராய் உள்ளார்; அவர் சல்மொன்டிற்கு பிரதித் தலைவராக பத்து ஆண்டுகள் கடமையாற்றியிருக்கிறார் என்று 'டெயிலி றெக்கோட்' பத்திரிகை கூறுகிறது. நவம்பரில் நடைபெறவிருக்கும் ஸ்கொட்லாந்து தேசியக்கட்சியின் (எஸ்.என்.பி) மகா நாட்டின் போது தான் பதவிவிலகுவேன் என்று சல் மொன்ட் கூறியுள்ளார். அப்போது தலைவர் ஒருவரைக் கட்சி தெரிவு செய்யும். வெஸ்ட் மினிஸ்டர் பாராளுமன் றத்தில் தலைவராக உள்ள அங்கஸ் றொபேர்ட்சன் உள் ளூராட்சி திட்டமிடல் அமைச்சர் டெரக் மக்கே ஆகியோர் ஸ்ரர்ஜியனோடு போட்டியிடக்கூடும். ஸ்கொட்லாந்தின் சுகாதார மந்திரி அலெக்ஸ் நீல் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் சர்வதேச அபிவிருத்தி அமச்சர் ஹும்சா யூசப் ஆகிய இருவரும் போட்டியிடுவதில்லை என்றும் ஸ்ரர்ஜி யன் ஆதரிக்கப் போவதாகவும் கூறியுள்ளனர். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்




# பிரிவினைவாதத்தை கையாளுதல்

## ஸ்கொட்லாந்து சர்வஜன வாக்கெடுப்பின் மூலமாக ஸ்பெயின் பெறக்கூடிய படிப்பினை

சுதந்திரமானதும் சுயாதிபத்தியம் கொண்டதுமான ஒரு அரசு என்ற வகையில் ஸ்கொட்லாந்தின் அந்தஸ்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் 1320 ஏப்ரில் 6ஆம் திகதி பரிசுத்த பாப்பரசர் 22ஆவது ஜோனுக்கு கையளிக்கப்பட்ட ஆர்புரோத் பிரகடனத்தில் (Declaration of Arbroath) ஸ்கொட்லாந்தின் உயர் குடிமகன்கள் (nobles) தங்களது தெற்கு அயலவர்களினால் தாங்கள் ஆளப்படுவதை உறுதியாக நிராகரித்திருந்தனர். ‘எங்களில் ஒரு நூறுபேராவது உயிருடன் இருக்கும்வரை, எந்தச் சூழ்நிலைகளின் கீழும் ஆங்கிலேய ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படுவதை நாம் ஒரு போதுமே அனுமதிக்கப்போவதில்லை’ என்று லத்தீன் மொழியில் எழுதப்பட்ட ஒரு கடிதவடிவிலான அந்தப் பிரகடனத்தில் உயர்குடிமகன்கள் தெரிவித்திருந்தனர். ‘அந்த நூறு பேர்’ என்பது வெறும் பேச்சளவில் தான். பிரகடனத்தில் கையெழுத்திட்டவர்களின் எண்ணிக்கை வெறுமனே ஐம்பது அளவில் தான் இருந்தது. என்றாலும் கூட பிரகடனம் பயனைத் தந்தது. ஒரு குறுகிய காலத்துக்கு ஸ்கொட்லாந்து சுதந்திர நாடாக இருந்தது.

கடந்தமாதம் 18ஆம் திகதி நூறுக்கும் அதிகமான ஸ்கொட்லாந்துக்காரர்கள் அல்ல, இலட்சக்கணக்கானவர்கள் சுதந்திரம் தொடர்பான தங்களது அபிப்பி



கற்றலோனியா ஜனாதிபதி ஆர்டர் மாஸ் எதிர்வரும் நவம்பர் 9ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கான உத்தரவில் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக தலைநகர் பார்சலோனாவில் அரசாங்க மாளிகைக்கு முன்னால் பதாகைகளுடன் நிற்கும் கற்றலோனியா பிரிவினைவாதிகள். செப்டெம்பர் 27, 2014



திமோதி வில்லியம் வாட்டர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராயத்தை உலகறிய வெளிப்படுத்தியிருந்தார்கள். 'ஸ்கொட்லாந்து சுதந்திர நாடாக வேண்டுமா? ஆம்/இல்லை' ஐக்கிய இராச்சியத்துடனான தங்களின் பிணைப்பைத் துண்டிக்க வேண்டுமா, இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக அன்றைய தினம் நடத்தப்பட்ட சர்வஜனவாக்கெடுப்பின்போது ஸ்கொட்லாந்து மக்களிடம் கேட்கப்பட்ட கேள்வி இது தான்.

இன்றைய ஸ்கொட்லாந்து மக்கள் ஆர்புரோத் பிரகடனத்தைத் தயாரித்தவர்களைப் போன்று உயிரைப் பணயம் வைக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. ஏனென்றால் சர்வஜன வாக்கெடுப்பின் முழுச்செயற்பாடுகளுக்கும் இன்றைய ஆங்கிலேயர்கள் இணங்கிக் கொண்டார்கள். ஸ்கொட்லாந்து ஐக்கிய இராச்சியத்தில் இருந்து பிரிந்து தனிநாடாக வேண்டுமென்று பெரும்பான்மையான ஸ்கொட் மக்கள் வாக்களித்திருப்பார்களேயானால் லண்டன் அவர்களின் முடிவை ஏற்று இணங்கிக்கொண்டு சுதந்திரமான ஸ்கொட் அரசுக்கு சுயாதிபத்தியத்தை ஒழுங்கமைவான முறையில் மாற்றுவதற்கு பேச்சுவார்த்தைகளை நடத்த முன்வந்திருக்கும். 'ஆம்' என்பதற்கும் 'இல்லை' என்பதற்கும் இடையிலான போட்டி மிகவும் நெருக்கமானதாகவே இருந்தது. ஆனால், இறுதியில் 55 சதவீதமான ஸ்கொட் மக்கள் ஐக்கிய இராச்சியத்தில் தொடர்ந்து வாழ்வதற்கே தங்கள் விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

பிரிவினையின் விளைவுகள் சிக்கல் நிறைந்தவையாகவும் தடுமாறச் செய்கிற அளவுக்கு பாரதூரமானவையாகவும் இருந்திருக்கும். ஸ்கொட்லாந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்தும் அங்கம் வகித்திருக்க முடியுமா? பவுணை அதன் நாணயமாகக் கொண்டிருக்க முடியுமா? முடியாட்சியின் கீழ் தொடர்ந்தும் இருந்திருக்க முடியுமா? ஆனால், இப்போது ஸ்கொட்லாந்து பிரியாமல் இருப்பதனால் ஏற்படக்கூடிய விளைவுகளும் அதேயளவுக்கு வியப்பைத் தருபவையாக இருக்கின்றன. ஸ்கொட்லாந்தின் சர்வஜனவாக்கெ




டுப்பு நடந்தேறியிருக்கின்ற விதம் உலகசட்டத்திலும் அரசியலிலும் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் இதுவிடயத்தில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். சர்வஜனவாக்கெடுப்பு நடைபெற்று அதில் பிரிவினையில் விருப்பம் கொண்டவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. அதனால், சுதந்திர அரசுகளாக தாங்கள் பிரிந்து சென்றுவிட வேண்டுமென்று ஏங்கிக் கொண்டிருக்கின்ற பெருவாரியான மக்கள் சமூகங்கள் நிறைந்த இன்றைய உலகில் இச்சர்வஜனவாக்கெடுப்பை ஒரு வெற்றியென்றும் கருத முடியும். பிரிவினை நாட்டத்தைக் கண்டு அஞ்சுகிறவர்களுக்கும் இதில் ஒரு பெறுமதியான பாடம் இருக்கிறது.

பிரிவினை என்றதும் எம்மையறியாமலே நாம் அஞ்சுகிறோம். ஏனென்றால் அது தேசியவாதப் பேயைத் தூண்டிவிடுகிறது, தேசங்களை சிதைக்கிறது, இனப்பிரிவினர், மதப்பிரிவினர்களிடையேயான மோதல்களினால் தேசங்களை இரத்தத்தில் தோய்க்கிறது. இதன் காரணத்தினாலேயே 2014 இன் அடுத்த பிரிவினைச்சவாலை எதிர்ப்பதிலும் நாம் முனைந்து நிற்கிறோம். ஸ்பெயின் நாட்டில் கற்றலோனியா பிராந்தியம் (Region of Catalonia) அதன் சொந்த சர்வஜனவாக்கெடுப்பை நவம்பர் 9ஆம் திகதி நடத்துவதற்கான திட்டங்களை முன்னெடுத்துக்கொண்டிருக்கிறது. ஆனால், ஸ்கொட்லாந்து விவகாரம் எமக்கு உணர்த்துவதைப் போன்று, எமது அச்சங்கள் முற்றுமுழுதாகச் சரியானவை என்று இல்லை- முக்கியமான மாறுபாடு சுதந்திரத்துக்கான சிறுபான்மையினத்தவரின் விருப்பம் அல்ல, அதுதொடர்பிலான பெரும்பான்மையினரின் எதிர்வினையேயாகும்.

உண்மையில், புதிய அரசொன்றை அமைப்பதற்கான சில ஸ்கொட்லாந்துக்காரர்களின் முயற்சியல்ல, பிரிட்டனின் தங்கு தடையின்றிய இணக்கமே ஸ்பெயின் விவகாரத்தையும் உலகின் ஏனைய பெரும்பாலான பகுதிகளில் நிலவக்கூடிய அத்தகைய விவகாரங்களையும் ஸ்கொட்லாந்து விவகாரத்திலிருந்து வேறுபட்டதாகக் காட்டியது. ஐக்கிய இராச்சியம் ஒரு அபூர்வமான அரசு, அது தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், உண்மையான அக்கறைகளைக் கொண்ட மக்களுக்கு வாய்ப்பொன்று அளிக்கப்பட்டால் தங்களது தெரிவுகளை எவ்வாறு செய்து கொள்வார்கள் என்பதற்கு ஸ்கொட்லாந்து சர்வஜன வாக்கெடுப்பு முடிவுகள் சிறந்த அறிகுறியாகும். ஸ்பானியர்களுக்கும் கற்றலோனியர்களுக்கும் அந்த சர்வஜன வாக்கெடுப்பு உணர்த்தியிருக்கும் பாடம் இதுவாகும். தங்களுக்கென்று சொந்தமான நாடு வேண்டும் என்று விரும்புகின்ற மக்களுக்கும் அந்த விருப்பத்திற்கு அஞ்சுகின்ற மக்களுக்கும் இது ஒரு பாடமாகும்.



ஸ்கொட்லாந்து சர்வஜன வாக்கெடுப்பு முடிவுகள் குறித்து பார்சலோனாவில் செய்தியாளர் மகாநாட்டில் விளக்கமளிக்கும் கற்றலோனியா ஜனாதிபதி ஆர்டர் மாஸ். (செப்டெம்பர் 19, 2014)

சொந்தப் பிரிவினையின் சாத்தியத்தையும் தழுவியிருக்கிறது. அறிவுபூர்வமான ஒரு தன்னல நடவடிக்கையாக, ஐக்கிய இராச்சியம் அதன் நிலைப்பாட்டை பலவந்தமான வழிமுறையில் அல்ல, நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடிய இணக்கமான வழிமுறையில் முன்வைத்தது.

பிரிட்டன் வெளிக்காட்டிய இணக்கப்போக்கே ஸ்கொட்லாந்தின் சர்வஜனவாக்கெடுப்பைச் சாத்தியமாக்கியது. அதன் காரணத்தினாலேயே ஸ்கொட்லாந்து விவகாரம் உலகின் ஏனைய அத்தகைய விவகாரங்களில் இருந்து வேறுபட்டதாக இருக்கிறது. பெரும்பாலான நாடுகளில் பிரிவினை அனுமதிக்கப்படுவதில்லை. பல நாடுகளில் பிரிவினைக் கோரிக்கை தேசத்துரோகமாகவே கருதப்பட்டு ஒடுக்கப்படுகிறது. சீனாவின் மேற்குப் பிராந்திய மாகாணமான ஸின் ஜியாங்கில் பிரிவினைக் கோரிக்கையை நியாயப்படுத்தியமைக்காக உய்குர் இனத்தைச் சேர்ந்த பிரபல பேராசிரியர் இலாம் தொஹ்டிக்கு அண்மையில் ஆயுட் காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. கொசோவோவிலும் தென்சூடானிலும் பிரிவினை சாத்தியமாகியது என்ற போதிலும் அவற்றின் தாய் நாடுகளினால் பல வருடகாலமாக மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்கள் மற்றும் படுமோசமான வன்முறைகளுக்குப் பிறகே அது நிகழ்ந்தது. நைஜீரியாவின் தென்கிழக்கு மாநிலமான பையாஃ பராவில் இடம்பெற்ற பிரிவினைப்போர் தோல்வியில் முடிந்தது. ஈராக்கிலும் உக்ரெயினிலும் இடம்பெற்றுவருகின்ற கொலைகள் அமைதியான முறையில் பிரிந்து செல்வதற்கு தயாராயிருக்கின்ற ஒரு நாட்டில் வாழக்கிடைத்திருக்கின்றவர்கள் மீது எவரையும் பொறாமை கொள்ளவே வைக்கும்.

ஸ்பெயினில் இதைப் போன்ற வன்முறையை எவரும் நினைக்கவில்லை. ஆனால், ஸ்பெயின் அரசாங்கம் பிரிவினையை கர்ணகடூரமாக எதிர்க்கிறது. இங்குதான் பிரிட்டனின் அணுகுமுறைக்கும் ஸ்பெயினின் அணுகுமுறைக்கும் இடையிலான வேறுபாடு பிரகாசமாகத் தெரிகிறது. கற்றலோனியாவின் சர்வஜன வாக்கெடுப்பை ஸ்பெயின் அரசாங்கம் நிராகரித்திருக்கிறது. வாக்கெடுப்பு நடத்தப்படுவதைத் தடுப்பதற்கு ஸ்பெயினின் அரசியலமைப்பு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்வதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது. பிராந்தியத்தில் நடத்தப்படக்கூடிய சர்வஜன வாக்கெடுப்பொன்று ஸ்பெயினின் அரசியலமைப்பை மீறுவதாக அமைகிறது என்பது தெளிவானது. கற்றலோனியா பிராந்திய அரசாங்கத்தின் அதிகாரத்தை இடைநிறுத்தப் போவதாகக் கூட அச்சுறுத்தப்படுகிறது. ஆனால், இத்தகைய அசட்டை மனப்பான்மை - அவமதிக்கும் போக்கு கற்றலோனியா மக்களின் உணர்வுகளை மேலும் தூண்டுவதாக மாத்திரமே அமையும்.

ஸ்பெயினோ அல்லது ஏனைய அரசுகளோ பிரிட்டனின் தாராள மனப்பான்மையுடனான-துணிவார்வமிக்க நிலைப்பாட்டை பின்பற்றும் என்பதற்கான சான்று எதுவுமேயில்லை. அவ்வாறானதொரு நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று எந்த அரசாவது உணருகின்றதாகவும் இல்லை. ஸ்கொட்லாந்தின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதற்கு சர்வதேசச் சட்டம் தேவை என்று பிரிட்டன் கூட நம்பவில்லை. ஸ்கொட்லாந்தில் சர்வஜனவாக்கெடுப்பை நடத்துவதற்கு பாராளுமன்றம் அனுமதித்தது. ஏனென்றால், அதன் பாரம்பரியங்கள் அவ்வாறு நடந்துகொள்வதற்கு தன்னைக் கடமைப்படுத்துவதாக அப்பாராளுமன்றம் உணர்ந்தது. ஸ்கொட்லாந்து பிரிவினை என்பது ஒரு தனி ஒதுக்கமான விவகாரமாகவே இருந்தது.

ஆனால், ஒரு முன்னோடி மாதிரியானதாக இல்லாவிட்டாலும்கூட, பிரிவினைக்கான சர்வதேசமயப்படுத்தப்பட்ட உரிமை என்றைக்காவது ஒரு யதார்த்தமாக வேண்டுமென்றால் ஸ்பெயினும் ஏனைய அரசுகளும் கடைப்பிடிக்க வேண்டிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்போக்கிற்கு அறிவுரை கூறும் வகையிலானதாக பிரிட்டிஷ் அணுகு முறை விளங்குகிறது எனலாம். ஸ்கொட்லாந்து வகைமாதிரியை உல கம் பின்பற்றாமல் இருக்கலாம். ஆனால், அது ஒரு முன்மாதிரியான தாக இருக்க முடியும். ஏனென்றால் பிரிந்துபோக வாய்ப்பளிப்பது தேசத் தின் ஆரோக்கியத்துக்கு நன்மையா னதாகவும் இருக்க முடியும்.

ஸ்கொட்லாந்து மக்களை சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களிக்க அனும தித்துவிட்டு, பிரிட்டன் ஐக்கியத்தை நியாயப்படுத்தியே முழுமூச்சாக அதன் வாதங்களை முன்வைத்தது. தொடர்ந்தும் இணைந்திருப்பதில் உள்ள பயன்களையும் பிரிந்து செல் வதால் ஏற்படக்கூடிய பாதகங்களை யும் விளக்கிக்கூறிய பிரிட்டன், ஸ்கொட்லாந்துக்காரர்கள் ஐக்கிய இராச்சியத்தில் தொடர்ந்தும் இணைந் திருந்தால் கூடுதல் அதிகாரங்களைப் பரவலாக்குவதாக உறுதியளித்தது. அந்த உறுதிமொழி பயனளித்தது. பல வாக்காளர்களைப் பொறுத்த வரை சர்வஜனவாக்கெடுப்பில் ஆமா/ இல்லையா என்பதைத் தீர்மா னிப்பதில் பவுண்ஸ் நாணயமும் நடைமுறைச் சாத்தியமான பல்வேறு விவகாரங்களும் முக்கிய காரணி களாக இறுதியில் வந்துவிட்டன. வட கடல் எண்ணெய் மூலமான வரு வாயைப் பகிர்ந்துகொள்தல், உயர் கல்விக் கட்டணங்கள், நிச்சயமற்ற தன்மைகளினால் ஏற்படக்கூடிய பாத கங்களைத் தவிர்ப்பதில் நாட்டம் ஆகியவையே இந்த நடைமுறைச் சாத்தியமான விவகாரங்களில் முக்கி யமானவை. உணர்ச்சிமுனைப்பு டைய தேசியவாதம் இங்கு ஒரு பெரிய காரணியாக இருக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.



கற்றலோனியா தினமான செப்டெம்பர் 11 பார்சலோனா வீதிகளில் பிரிவினைவாத கொடியுடன் திரண்ட மக்கள்

உண்மையான எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், உண்மையான அக்க றைகளைக் கொண்ட மக்களுக்கு வாய்ப்பொன்று அளிக்கப்பட்டால் அவர்கள் தங்களது தெரிவுகளை எவ் வாறு செய்துகொள்வார்கள் என்ப தற்கு ஸ்கொட்லாந்து சர்வஜனவாக் கெடுப்பு ஒரு சிறந்த அறிகுறியாகும். ஸ்பானியர்களுக்கும் கற்றலோனியர் களுக்கும் ஸ்கொட்லாந்து சர்வஜன வாக்கெடுப்பு உணர்த்தியிருக்கும் பாடம் இதுவேயாகும். தங்களுக் கென்று சொந்தமான நாடு வேண்டு மென்று விரும்புகின்ற மக்களுக்கும் அந்த விருப்பத்துக்கு அஞ்சுகின்ற மக்களுக்கும் இது ஒரு பாடமாகும். பிரிந்து செல்வதற்கு வழங்கப்படக் கூடிய அனுமதி பண்டையகால தேசி யவாத உணர்ச்சிக் கொந்தளிப்புக ளுக்கு வழிவகுக்க வேண்டுமென் றில்லை. இரத்தக்களரியை ஏற்படுத்த வேண்டுமென்றில்லை. மனிதப் பிற விகள் தங்களது சொந்த எதிர்கால த்தை வடிவமைத்துக் கொள்வதற்கு அனுமதிப்பதாகவே அமையும். பிரி ந்து செல்வதோ அல்லது தொடர்ந்தும் இணைந்திருப்பதோ அதை அவர் களாகவே (சிறுபான்மையினர் என்ற வகையில் அல்ல, ஒரு மக்கள் சமூ கம் என்ற வகையில்) தீர்மானிப்ப தாக இருக்க வேண்டும். ■

***(திமோதி வில்லியம் வாட்டர்ஸ் - அமெரிக்காவின் இன்டியானா பல்க லைக்கழகத்தின் சட்டக்கல்லூரி பேராசிரியர், அரசியலமைப்பு ஜன நாயகத்துக்கான நிலையத்தின் இணைப் பணிப்பாளர்)***

---


***(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

இந்த உயர்வுக்கேற்ப சமகாலத்தில் அரசாங்கம் வறுமைத் தணிப்பிற்கான முன்னேற்றகரமான நடிவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவில்லை. ஆனாலும் வறுமை மட்டம் மிகக்கு றைந்துவிட்டதாக அரசினால் புள்ளி விபரங்கள் முன்வைக்கப்பட்டுவரு வதை அவதானிக்கலாம். போருக்குப் பின்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களில் சமுர்த்தித் திட்டத்தை அறிமுகப்படுத்தி அமு லாக்கம் செய்துவருவதை ஒரு வறு மைத்தணிப்பு துரித நடவடிக்கையாக அரசு எடுத்துக்காட்டி வருகிறது. எனி னும் பத்துவறிய குடும்பங்கள் இருந் தால் ஒரு குடும்பம் மட்டுமே சமுர்த்தி முத்திரையைப் பெறக்கூடியதாகத் தான் அத்துரித நடவடிக்கையமைந் துள்ளது.

இந்த அடிப்படையில் பார்த்தால் மேற்கொள்ள வேண்டிய துரித அபி விருத்தி நடவடிக்கைகள் குவிந்து போய்க்கிடக்கின்றன. அரசு பட்டிய லிடுவதெல்லாம் வெறும் காகித அபிவிருத்தி நடவடிக்கைகள் மட்டு மேயென்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இந்திய விவகாரம்



# பதவி மீதான மன்மோகனின் காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கென தனியான சுயநல நோக்கத்தைக் கொண்டிராத மன்மோகன் சிங் போன்ற ஒரு மனிதர் பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதற்காக இளக்காரமாக நடந்து கொண்டார் என்பதை நினைக்கும் போது மனதிற்கு கஷ்டமாக இருக்கிறது. வகித்த பதவியை இழக்காமல் இருப்பதை உறுதி செய்வதற்காக, அந்த பதவிப் வேண்டி நின்ற எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு தன்னை தயார்படுத்தாத ஒருவராக அவரை எதிர்கால சந்ததி மதிப்பீடு செய்யும்



குல்திப் நாயர்

'நான் எனது கடமையைச் செய்தேன்' - 2ஜி ஸ்பெக்ரம் மற்றும் நிலக்கரி சுரங்க விற்பனையில் ஊழல் இடம்பெற்றுக் கொண்டிருந்ததை அறிந்திருந்ததாகவும் அவற்றைத் தடுத்து நிறுத்த எதையும் செய்யவில்லை என்றும் தன்மீது தெரிவிக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு முன்னாள் பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங் அளிக்கின்ற பதில் இதுதான். அதாவது தான் ஒரு நேர்மையான மனிதர் என்று அவர் சொல்கிறார். ஆனால், அவ்வாறு சொல்வதென்பது அவரின் கண்முன்னாலேயே இடம்பெற்றுக்கொண்டிருந்த அப்பட்டமான ஊழலுக்கு துணைபோன குற்றப்பொறுப்பில் இருந்து அவரை விடுவித்துவிடப் போவதில்லை.

முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் விநோத் ராய் எழுதிவெளியிட்டிருக்கும் நூலில் இருந்து அறியக்கூடியதாக இருக்கும் விபரங்கள் படுமோசமானவையாகவுள்ளன. முன்னாள் பிரதமர் தனது நம்பகத்தன்மையைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமென்றால் நிச்சயமாக தனது தரப்பு நிலைப்பாட்டை விளக்க வேண்டியது அவசியமானதாகும். தனிப்பட்ட முறையில் பணம் பண்ணவில்லை என்று அல்லது நேரடியாக எந்த இடத்திலும் சம்பந்தப்படவில்லை என்று வாதிடுவது போதுமானதேயல்ல. பல மாதங்களாக இடம்பெற்றுக் கொண்டிருந்த ஊழல் விவகாரங்களுக்கு உடந்தையாக இருந்ததாக அல்லது கண்டுங் காணாதமாதிரி இருந்ததாக நிலவுகின்ற அபிப்பிராயத்தை மன்மோகன் சிங் இல்லாமற்செய்ய வேண்டியிருக்கிறது. முழு ஊழல் விவகாரமும் சகலருக்கும் தெரிய வந்த போது அவர் அதற்கு எதிராக நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. தனது கடமையையே செய்து கொண்டிருந்ததாக எவ்வாறு அவரால் கூறமுடியும்? ஊழலை ஆதியோடு அந்தமாக இந்திய மத்திய புலனாய்வுப் பணியகம் (சி.பி.ஐ) துருவி ஆராய்ந்து அறிக்கையொன்றை தனது அலுவலகத்துக்கு அனுப்பிவைத்த பின்னராவது குறைந்த பட்சம் மன்மோகன்சிங் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

தனது கடமையையே செய்ததாக அவர் கூறுவதில் எந்தவிதமான அர்த்தமுமில்லை. ஊழல் விவகாரங்களுக்குப் பொறுப்பானவர்கள் நீண்ட காலமாக எந்தவிதமான தடையுமில்லாமல் தங்களது காரியத்தைப் பார்த்துக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கிறது. பிரதமரின் அலுவலகம் ஆரம்ப அறிக்கையை பெற்றுக் கொண்ட உடனேயே நடவடிக்கையில் இறங்கியிருக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கையில் இறங்கவில்லையென்பதால் பல கேள்விகள் எழுகின்றன. அவற்றுக்கு பதில் கிடைத்தாக வேண்டும். வெறுமனே மௌனம் சாதிப்பது எந்தப் பயனையும் தரப்போவதில்லை. குற்றச்சாட்டுகளின் பாரதூரத்தன்மையைத் தணிக்கப் போவதுமில்லை.

நடந்தவையெல்லாவற்றையும் மன்மோகன்சிங் அறிந்திருந்தார் என்பதுடன் அரசியல் நோக்கங்கள் காரணமாக அவர் மௌனம் சாதிக்க விரும்பினார் என்பது தெளிவாகத் தெரிகிறது. பச்சையாகச் சொல்வதானால், எது எப்படியானாலும் பதவியில் தொடர்ந்து இருப்பதையே அவர் விரும்பினார். மன்மோகன்சிங் வெறுமனே ஒரு முகப்பு போன்று இருந்தார் என்பதும் 'இலக்கம் 10 ஜன்பத்' என்ற பெயரினால் (காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியின் வாசஸ்தலம்) அறியப்பட்ட சக்திகளே பணத்தை சுருட்டிக்கொண்டன என்பதும் ஏறத்தாழ நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அது ஊழல் உடன்பாடுகள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருந்தபோது அவற்றைக் கவனிக்காமல் அலட்சியமாக இருந்த குற்றப் பொறுப்பில் இருந்து அவரைவிடுக்காது. ஊழல் விவகாரங்களில் பங்கேற்றதாக முன்னாள் பிரதமர் மீது யாருமே குற்றஞ்சுமத்தவில்லை. ஆனால், அவர் எதையுமே செய்ய முடியாதவராக சகலவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தார் என்று எவராலும் சான்று வலிமையுடன் கூறிவிடமுடியாது.

இன்று தனக்கு எதிராக கூறப்படுகின்றவற்றை விடவும் சிறப்பாக எதிர்காலத் தலைமுறைகள் தன்னை மதிப்பிடும் என்று மன்மோகன் சிங் அடிக்கடி கூறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மூன்று-நான்கு தசாப்தங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப் பிறகு மக்களின் எண்ணங்கள் எவ்வாறானதாக இருக்கும் என்று முன்கூட்டியே ஊகிப்பது கஷ்டமானதாகும். பலவீனமான ஒரு பிரதமராக இருந்தார் என்று அவர் பற்றி கூறப்படுகின்ற அவதானம் சில தசாப்தங்களுக்குப் பின்னரும் கூட நிலைத்திருக்கும் என்பதிற் சந்தேகமில்லை.

விவகாரங்கள் இன்று உள்ளதைப் போன்றே தொடர அனுமதிக்கப்படுமானால், அது நாட்டுக்குச் செய்யப்படுகின்ற அநீதியாக இருக்கும். விசாரணையொன்று நடைபெற்றேயாக வேண்டும். அரசியல் சச்சரவுகள் காரணமாக, இன்னமும் லோக்பால் (ஊழல் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான குறைகேள் அதிகாரி) நியமிக்கப்படவில்லை என்பது வருந்தத்தக்கது. ஆனால், லோக்பால் நியமிக்கப்படவில்லையென்பதற்காக, ஊழல் மோசடிகள் தலைவிரித்தாடியபோது அவற்றுக்கு எதிராக நடவடிக்கையை எடுப்பதில் அக்கறை காட்டாமல் பராமுகமாக இருந்தவர்கள் (அது மன்மோகன்சிங்காக இருந்தாலென்ன வேறு யாருமாக இருந்தாலென்ன) யார் யார் என்பதை கண்டறிய தீவிரவிசாரணை நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளக் கூடாது என்று அர்த்தப்படாது.

ஊழல்தனமான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பது இப்போது நிரூபணமான ஒன்று. மேலும் தொடர்ந்து விசாரணைகளை நடத்தி அந்த ஊழல் விவகாரங்களுக்குப் பொறுப்பானவர்கள் யார் யார் என்பதைக் கண்டறியாமல் விடுவது, ஊழல் உடன்பாடுகளின் முழு விபரங்களையும் மக்களுக்கு தெரியப்படுத்தாமல் விடுவது நாட்டுக்கு செய்யப்படுகின்ற அநீதியாகும். குற்றப் பொறுப்புக்குரியவர் யார் என்பதைக் கண்டறிவது ஒன்றும் கஷ்டமானதல்ல. ஏனென்றால், ஊழல்தனமான கொடுக்கல் வாங்கல்களுக்கு, உடன்பாடுகளுக்கு யாரோ ஒருவர் அனுமதியளித்திருக்கவேண்டும். அவை நடைமுறைப்படுத்தப்படுவதை யாரோ ஒருவர் கண்காணித்துக் கொண்டிருந்திருக்கவேண்டும். எவரும் குற்றஞ்செய்யவில்லை



ஆட்சி நிருவாகத்தை தூய்மைப்படுத்தப் போவதாக பிரதமர் மோடி திரும்பத் திரும்ப கூறிக்கொண்டிருக்கிறார். அரசாங்க ஊழியர்கள் கடமைக்கு நேரம் தவறாமல் வர வேண்டும் என்பது சரியானது தான். ஆனால் ஊழல் விவகாரங்களில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற மக்களை திருப்திப் படுத்தக்கூடிய மாற்றமாக இது இருக்கப்போவதில்லை.

யென்று கூறி பழிதுடைத்துவிடுமாறு அரசியல் நெருக்குதல்கள் பிரயோகிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கின்றபோதிலும் கூட, சி.பி.ஐ.யிடம் விசாரணைப் பொறுப்பை ஒப்படைக்க முடியும். ஊழல்தனமான உடன்பாடுகளைச் செய்துகொண்டதில் அரசியல்வாதிகளே சம்பந்தப்பட்டிருப்பதன் காரணமாக, உயர்மட்ட அதிகாரிகளுக்கு எதிராகக் கூட, நடவடிக்கை எடுக்கப்படுவதாக இல்லை என்பது கவலை தருகின்ற விடயம். நாட்டில் பலவீனமானதொரு பிரதமர் பதவியில் இருந்தார் என்ற காரணத்துக்காக இந்த விவகாரங்கள் தொடர்பில் எதையும் செய்யாமல் விடுவதற்கு அரசாங்கம் தீர்மானிக்குமேயானால், அதன் அர்த்தம் ஊழல் விவகாரங்கள் இடம்பெறவில்லையென்றோ அல்லது அரசியல்வாதிகளும் உயர்மட்ட அதிகாரிகளும் கோடிக்கணக்கில் பணத்தைச் சுருட்டிக் கொள்ளவில்லை என்றோ ஆகிவிடாது.

இப்போது அரசாங்கம் மாறியிருக்கிறது. ஆட்சி நிருவாகத்தைத் தூய்மைப்படுத்தப் போவதாக பிரதமர் நரேந்திரமோடி திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டிருக்கிறார். சில நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கவேண்டும். அரசாங்க ஊழியர்கள் கடமைக்கு நேரந்தவறாமல் வர வேண்டும் என்பது சரியானது தான். ஆனால், ஊழல் விவகாரங்களில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று எதிர்பார்க்கின்ற மக்களை திருப்திப்படுத்தக்கூடிய ஒரு மாற்றமாக இது இருக்கப்போவதில்லை.

நடந்துகொண்டிருந்த காரியங்களை '10 ஜன்பத்' அறிந்திருந்தது அல்லது அவற்றில் சம்பந்தப்பட்டிருந்தது என்பதற்கு நேரிடையான சான்றுகள் இல்லையென்றபோதிலும், அவ்வாறான எண்ணம் மக்கள் மனதில் இருக்கிறது. திரைமறைவில் நடந்துகொண்டிருந்த காரியங்களைப் பற்றிய 'கதையொன்றை'ச் சொல்வதற்காக வெளியிடப்பட்டிருக்கும் நூல்கள் முழுவிவகாரங்களையும் பற்றி விசாரிப்பதற்கும் அரசியல்வாதிகளும் உயரதிகாரிகளும் கைகோர்த்துக்கொண்டு எவ்வாறு நாட்டைச் சூறையாடினார்கள் என்பதை நாட்டு மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதற்கும் மாண்புமிக்க பிரமுகர்களைக் கொண்ட சுயாதீனமான உயர்மட்டக் குழுவொன்றை அமைப்பதற்குப் போதுமான விபரங்களைத் தெரியப்படுத்தியிருக்கின்றன.

மறுபுறத்திலே, நேரடியான எந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புமேயில்லாமல் சோனியா காந்தியே அரச நிருவாகத்தை நடத்தியதாகக் கூறப்படுகிறது. இரகசிய கோவைகள் அவரின் பார்வைக்கு அனுப்பிவைக்கப்படுவது ஒரு நடைமுறையாக இருந்திருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டு பகிரங்கத்துக்கு வந்த போதிலும் கூட, அவரிடமிருந்தோ அல்லது மன்மோகன் சிங் தலைமையில் இருந்த அரசாங்கத்திடமிருந்தோ நம்பத்தக்க விளக்கம் எதுவும் வரவில்லை.

கணக்காய்வாளர் நாயகம் வழங்கியிருக்கும் பேட்டி அவரின் அறிக்கையை விடவும் கூடுதலான பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கிறது. மன்மோகன் சிங்கை நேரடியாகச் சந்தித்து குறிப்பிட்ட சில விடயங்களைக் கூறியதாக அவர் தெரிவித்திருக்கிறார். இருந்தும் கூட எந்த நடவடிக்கையுமே எடுக்கப்பட்டிருக்கவில்லை. மன்மோகன் சிங் நடவடிக்கை எதையும் எடுக்காததற்கு அவர் பிரதமர் பதவியில் தொடர்ந்தும் இருக்கவிரும்பினார் என்பதைத் தவிர வேறு எந்தக் காரணத்தையும் கூறுவது கஷ்டமானதாகும். பிரதமர் பதவியில் மன்மோகன் சிங்கை அமர வைத்ததற்கு பல காரணங்கள் இருந்தன. அது வேறுவிடயம். ஆனால், ஊழல் மோசடிகளைத் தடுத்து நிறுத்துவதற்கு அவர் ஏதாவது நடவடிக்கை எடுப்பார் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும் என்பதைக் காட்டிலும் அவருக்கு பிரதமர் பதவி முக்கியத்துவம் வாய்ந்ததாகிப் போகிற அளவுக்கு அவர் சீரழிந்து போனதையே நாடு கண்டது.

தனக்கெனத் தனியான தன்னல நோக்கத்தைக் கொண்டிராத மன்மோகன்சிங் போன்ற ஒரு மனிதர் பிரதமர் பதவியில் தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதற்காக இளக்காரமாக நடந்துகொண்டார் என்பதை நினைக்கும் போது மனதுக்கு கஷ்டமாக இருக்கிறது. வகித்த பதவியை இழக்காமல் இருப்பதை உறுதிசெய்வதற்காக, அந்தப்பதவி வேண்டி நின்ற எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தன்னைத் தயார்படுத்தாத ஒருவராக எதிர்காலச் சந்ததி அவரை மதிப்பீடு செய்யும்! ■

---

*(41ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

பார்த்து 2-ஜி வழக்கில் என்ன அபராதம் வரப் போகிறது என்ற மிரட்சியில் இருக்கிறாரா என்று தெரியவில்லை. முடிந்தவரை இந்த வழக்கைக்கொண்டு வந்து, தண்டனை வாங்கிக் கொடுத்தது டாக்டர் சுப்ரமணியன் சுவாமிதான் என்ற பெயர் வரட்டும். தி.மு.க. முன்னிலையில் நிற்க வேண்டாம் என்று கருணாநிதி கருதுகிறார் என்றே தெரிகிறது. அக்டோபர் 2ஆம் திகதி அ.தி.மு.க. எம்.பி.க்கள் அனைவரும் டில்லியில் காந்தி சிலை முன்பு உண்ணாவிரதம் இருந்துள்ளார்கள். ஒரு காலத்தில் இதே டில்லியில் ஊழல் ஒழிக்க லோக்பால் சட்டம் வேண்டும் என்று அன்னா ஹசாரே உண்ணாவிரதம், போராட்டம் எல்லாம் செய்தார். இப்போது ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டதை எதிர்த்து அ.தி.மு.க. எம்.பி. க்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### அ.தி.மு.க. எம்.பி.க்கள் உண்ணாவிரதமும், ஆட்சிக் கலைப்புக் கோரிக்கையும்

இந்தச் சூழ்நிலையில் டாக்டர் ராமதாஸ், டாக்டர் கிருஷ்ணசாமி போன்றோர் ஊழல் வழக்கில் தண்டனை அளித்ததை எதிர்த்துப் போராட்டம் நடத்தும் அ.தி.மு.க.வை விமர்சித்துள்ளார்கள். ஊழலுக்கு ஆதரவாக ஆளுங் கட்சியே போராட்டம் நடத்தும் அவலம் தமிழகத்தில் நடக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். எம்.பி.க்களின் உண்ணாவிரதத்தைத் தொடர் ந்து டாக்டர் சுப்ரமணியன் சுவாமியும், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது. குடியரசுத் தலைவர் ஆட்சியை அமுல்படுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். தீர்ப்பு வெளிவந்தவுடன் சுவாமி மற்றும் தி.மு.க.வினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலைச் சுட்டிக்காட்டி இந்தியக் குடியரசுத் தலைவருக்கும், பிரதமர் நரேந்திரமோடிக்கும், தமிழகத்தில் அரசியல் சட்டம் செத்து விட்டது என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கடிதம் எழுதியிருந்தது கூர்ந்து கவனிக்கத்தக்கது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட முடியாமல் திணறும் அரசு நிர்வாகத்தை ஆளுநர் ரோசைய்யா மத்தளத்திற்கு இரு பக்கமும் அடி என்பது போல் தாங்கிக் கொண்டிருக்கிறார்.

### தமிழகத்திற்கு தி.மு.க.வா? பா.ஜ.க.வா?

ஜெயலலிதாவிற்கு எதிரான தீர்ப்பு அ.தி.மு.க.வை தமிழகத்தில் தனிமைப்படுத்தியிருக்கிறது. அனுதாபம் அவருக்கு ஏற்பட்டாலும், அது 2016 வரை தாக்குப் பிடிக்குமா என்பது கேள்விக்குறிதான். வெற்றிமுகட்டில் இருந்த அக்கட்சியினை அதல பாதா ளத்தில் தள்ளியிருக்கிறது பெங்களூர் தனி நீதிமன்ற தீர்ப்பு. இதனடிப்படையில் இரு காட்சிகள் அரங்கேறலாம். தி.மு.க. தலைமையில் புதிய அணி உருவாகலாம். அதற்கு வேறு கட்சிகள் முன்வராதபட்சத்தில் பா.ஜ.க. தன் தலைமையில் ஒரு அணியை உருவாக்க முயற்சிக்கலாம்.

1989இலும், 1996இலும் இது போன்ற வாய்ப்புகள் தேசியக் கட்சிகளுக்கு வந்தது. அப்போது இருந்த காங்கிரஸ் கட்சி அதைப் பயன்படுத்தி திராவிட இயக்கங்களுக்குப் போட்டியாக தமிழகத்தில் உருவெடுக்க கடும் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை. இன்றைய தினம் அப்படியொரு முயற்சியை மேற்கொள்ளும் சக்தி காங்கிரஸுக்கு தமிழகத்தில் இல்லை.

ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க.விற்கு அந்த வாய்ப்பு இருக்கிறது. எதிர்க்கட்சியாக இருக்கும் தி.மு.க.வினருக்கும் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவதற்கு ஒரு வாய்ப்பு உருவாகியிருக்கிறது. ஆனால் 2-ஜி வழக்கில் இது மாதிரி தீர்ப்புகள் வெளிவந்தால், தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்று காமராஜர் 1970-களில் சொன்ன கருத்து மீண்டும் வலுப்பெறும். அந்த வெற்றிடத்தை பா.ஜ.க. நிரப்புமா என்பது பிரதமர் நரேந்திரமோடி மனதில் தமிழக அரசியல் பற்றி என்ன நினைப்பு இருக்கிறது என்பதைப் பொறுத்திருக்கிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய அரசியல்

# சீன ஜனாதிபதியின் தெற்காசிய விஜயம் கிளப்பும் கேள்விகள்



என்.சத்தியமூர்த்தி







**இந்தியாவுக்கும் சீனாவுக்கும் எல்லைப் பிரச்சினை உட்பட நேரடி பிரச்சினைகள் பல உள்ளன. அவற்றுக்கிடையே இந்தியாவைச் சுற்றியுள்ள குட்டி நாடுகள் குளிர்காய நினைப்பது இந்தப் பிராந்தியத்திற்கே ஆபத்தாக முடியலாம்**

இந்தியாவில் புதிய பிரதமராக நரேந்திரமோடி பதவியேற்ற சுமார் நான்கு மாதங்களுக்குப் பின்னர் சீன ஜனாதிபதி சி ஜின்பிங்-கின் மூன்று-நாடு தெற்காசிய பயணம், அந்த அலையை அடக்கும் முகமாக அமையும் என்று சில சர்வதேச விமர்சகர்கள் எதிர்பார்த்திருந்தால், அதில் அவர்கள் தவறிழைத்தார்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது. காரணம், கடந்த இரண்டு-மூன்று ஆண்டுகளாக இந்திய அரசியலில் தனது அதிரடி ஆட்டத்தில் வெற்றிபெற்ற பிரதமர் மோடி, ஜின்பிங் விஜயத்தின் போதும், தன்னையும், தனது தனித்தன்மையையும் முன்னிறுத்துவதிலும், அதன் மூலம் உலகளவில் மேலும் அரசியல் விமர்சகர்கள் மற்றும் தொலைக்காட்சி - பத்திரிகைத் துறையினரின் மனதையும் கவர்ந்தார் என்றே முடிவு செய்ய வேண்டியுள்ளது.

ஆனால், 'மீடியா ஈவன்ட்' என்பதற்கு அப்பால், மாலைதீவு, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய மூன்று நாடுகளுக்கான விஜயத்தின் போது, சீன ஜனாதிபதி சாதித்தது என்ன? விட்டுச் சென்றது என்ன? பிரதமர் மோடியின் அமெரிக்க விஜயத்தில் இந்தியா உடனடியாக மூழ்கி விட்டாலும், ஜின்பிங் வருகையை ஒட்டி, மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுடன் சீனா செய்து கொண்ட சில ஒப்பந்தங்கள், இந்தியாவிற்கு கவலை அளிக்கும் விடயமே. அதற்கு காரணமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனா தான். முன்னெப்போதும் இல்லாமல், ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது, சீன படையினரும் 'சாதாரண மக்களும்' (?) வடமேற்கு லடாக்-சுமார் பகுதியில் இந்திய எல்லையில் குவிந்தது தான்.

ஜப்பான், வியட்நாம் போன்ற அண்டை நாடுகளுடனான கடல் எல்லை குறித்த பிரச்சினைகளை சீனா மீண்டும் தூசி தட்டி எடுத்துள்ளது. அந்த வகையில் இந்தியாவுடனான எல்லைப் பிரச்சினையையும் அனாவசியமாக ஊதி பெரிதாக்கும் சீனாவின் தற்போதைய முயற்சி, தெற்காசிய பிராந்தியத்திற்கே கவலை அளிக்கும் விடயம். இந்தப் பின்னணியில், இந்தியாவின் அண்டை நாடுகளான மாலைதீவு மற்றும் இலங்கையுடன், கடல் பிராந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த சீனாவின் ஒப்பந்தங்கள் இந்திய பெருங்கடலில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்த வல்லது என்ற கவலை இந்தியாவில் மீண்டும் தோன்றியுள்ளது எனலாம்.

## முத்தரப்பு கடல் பாதுகாப்பு

சீன ஜனாதிபதியின் புதிய முயற்சிகளை, இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய மூன்று நாடுகள் இடையேயான கடல்வழி பாதுகாப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் காண வேண்டும். கடந்த 2012-ஆம் ஆண்டு, கொழும்பில் வைத்த கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம், கடற்கொள்ளை, கடல் மாசுபடல் போன்ற பிரச்சினைகளையே தன்னுள் கொண்டது. என்றாலும், இதனையே, இன்று உலகளாவிய முக்கியத்துவம் பெற்றுள்ள இந்திய பெருங்கடலின் ஒட்டுமொத்த பாதுகாப்பின் முக்கிய அலகாக மாற்றப்படும் வாய்ப்பு இன்னமும் உள்ளது.

இந்தப் பின்னணியில், சீனாவுடன், இலங்கை மற்றும் மாலைதீவு தற்போது கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தங்களின் ஷரத்துக்கள், முத்தரப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாற்றம் ஏற்படுத்துமா என்ற கேள்வியையும் எழுப்புகிறது. அதாவது, உப்புசப்பில்லாத கடல்சார் பாதுகாப்பிற்கு இந்தியாவும், உண்மையிலேயே முக்கியமான விடயங்களுக்கு சீனாவும் என்று இந்த இரு நாடுகளும் கருதுகிறதா என்ற கேள்வியும் எழுகிறது. இது குறித்த விடயங்கள், எதிர்வரும் மாதங்களில், கொழும்பில் நடைபெறவுள்ள முத்தரப்பு தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் பேச்சுவார்த்தையில் முக்கிய விடயமாக முன்னெடுக்கப்படும் வாய்ப்பும் உள்ளது.

## சீன முதலீடுகள்

சீன ஜனாதிபதியின் வருகையின் போது, மூன்று தெற்காசிய நாடுகளிலும் சீனாவின் முதலீடுகள் குறித்து முக்கிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாயின. அந்த வகையில், அண்டை நாடுகளில் சீனாவின் முதலீடுகள் குறித்து இந்தியா அதீதமாக கவலைப்படவில்லை என்பதே உண்மை. அதிலும் குறிப்பாக, உலக நாடுகளில் இன்று சீனாவிடம் மட்டுமே பெரும் முதலீடு செய்யும் வசதி உள்ளது. அமெரிக்காவும் இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல.

ஆனால், பாதுகாப்பு விடயத்தில், இந்தியா, சீனாவை அண்டி நிற்கவில்லை. மாறாக, அந்த இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள எல்லைப் பிரச்சினை, தெற்காசியாவையே நிலைகுலைக்க வைக்கும் வல்லமை பொருந்தியது. அவ்வாறாகாமல் பார்த்துக் கொள்வது அந்த இரண்டு நாடுகளின் கடமை. அத்தகைய பிரச்சினை தோன்றாமல் பார்த்துக் கொள்வதும், அதனால் தாங்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு அச்சாரம் கூறுவதும் அந்தந்த நாடுகளின் உரிமையும் கடமையும் கூட.

இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தியாவின் பிற தெற்காசிய அண்டை நாடுகளில் பாகிஸ்தான் தவிர்ந்து எந்த நாட்டிற்கும் இந்தியாவுடன் பெரிய அளவிலான எந்தப் பிரச்சினைகளும் இல்லை. இன்னும் சொல்லப்போனால், இந்தியாவின் தற்காப்பும் இந்த இரு நாடுகளின் தற்காப்பும் பின்னிப் பிணைந்தவை. பரந்த இந்திய பெருங்கடலில் தங்களது பாதுகாப்பை உறுதிசெய்து கொள்ளும் நிலையில், இப்போதும், எப்போதும், இந்த இரு நாடுகளும் இல்லை. இந்தியாவை ஒட்டி தங்களது புறப்பாதுகாப்பு கொள்கைகளையும் உத்திகளையும் வகுத்துக் கொள்வது தான் அவர்களது எதிர்கால நலனுக்கு எப்போதும் நலம்பயக்கக் கூடிய விடயம்.

அந்த வகையில், ஜனாதிபதி ஜின்பிங்-கின் 'கடல் வாணிப வழி' (Maritime Silk Route, MSR), திட்டத்தில் இலங்கையும் மாலைதீவும் தங்களை இணைத்துக்கொள்ள முடிவு செய்துள்ளமை இந்தப் பகுதிக்கே கவலை அளிக்கும் விடயம் என்று கருதுவோரும் உள்ளனர். சீனாவின் திட்டம் என்ன, அதில் தங்களது உண்மையான பங்களிப்பு என்ன, என்று தெரியாமலே இரு நாடுகளும் இது குறித்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனவோ என்ற நியாயமான கவலையும் எழுகிறது. பிறிதொரு காலத்தில், சீனா இந்திய பெருங்கடலில் ஓர் 'ஆயுதப்போட்டி' அல்லது போரிலோ ஈடுபட்டால், இந்த இரு நாடுகளின் பங்களிப்பும் இருக்குமா, அது எவ்வாறாக இருக்கமுடியும் என்ற கேள்விகளும் உடனெழுகின்றன.

எண்பதுகளில் இது போன்ற ஒரு சூழ்நிலையில் தான், இலங்கை அமெரிக்காவுடன் துணைபோக முற்பட்டு, இந்தியாவை பகைத்துக்கொண்டது. அது பனிப்போர்க்காலம். என்றாலும், இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் நேரடி பிரச்சினைகள் எதுவும் இருக்கவில்லை. இன்றைய நிலைமை வேறு. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் எல்லைப் பிரச்சினை உட்பட்ட நேரடி பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கிடையே, இந்தியாவை சுற்றியுள்ள குட்டி நாடுகள் குளிர் காய நினைப்பது இந்தப் பகுதிக்கே ஆபத்தாக முடியலாம்.

இதில், இந்தியா செய்ய வேண்டியது என்ன? ஒன்று அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களை செய்துகொள்வதற்கு முன்னர், அவற்றால் பாதிக்கப்படுவோம் என்று கருதும் இலங்கை, மாலைதீவு

*(65ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்



# இஸ்லாமிய அரசுடன் மோதும் மேற்குலகம்

**இஸ்லாமிய அரசிடமிருந்து வருகின்ற சவாலுக்கு முகம் கொடுப்பதற்கு போதுமானதாக தந்திரோபாயம் வகுக்கப்பட்டிருக்கிறதா அல்லது மத்திய கிழக்கில் இன்னொரு இராணுவ தலையீட்டை செய்து சகதிக்குள் விழப்போவதன் தொடக்கமா இது?**



ஹர்ஷ் வி.பந்த்

இஸ்லாமிய அரசு இயக்கத்தினால் இரு அமெரிக்கர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டதைக் காண்பிக்கும் வீடியோப்பதிவுகள் அந்த இயக்கத்தினால் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்ற அச்சுறுத்தலை ஏற்றுக்கொண்டு புதியதொரு கொள்கை அணுகுமுறையை அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை இறுதியில் ஒபாமா நிருவாகத்திற்கு ஏற்படுத்தியது. இந்த அணுகுமுறை இஸ்லாமிய அரசுக்கு எதிராக ஒரு மட்டுப்பாடு இல்லாத அமெரிக்க இராணுவ ஈடுபாட்டுக்கு வழிவகுப்பதில் போய் முடிந்துவிடும் என்று சிலர் வாதிடுகிறார்கள்.

பெரிதும் அஞ்சப்படுகின்ற இஸ்லாமிய அரசைக் கையாளுவதற்கு அமெரிக்காவிடம் எந்தத் தந்திரோபாயமும் இல்லை என்று முதலில் சொன்ன ஜனாதிபதி பராக் ஒபாமா, பிறகு அந்த இயக்கம் ஈராக் மற்றும் சிரிய மக்களுக்கும் அமெரிக்கப் பிரஜைகள், அதிகாரிகள் மற்றும் அமெரிக்க நலன்கள் உட்பட பரந்தளவில் மத்திய கிழக்கிற்கும் பெரும் அச்சுறுத்தலாக அமைகிறது என்றும் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் இப்பயங்கரவாதிகள் அந்தப் பிராந்தியத்துக்கு அப்பாலும் (அமெரிக்கா உட்பட) அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கக் கூடிய பேராபத்து இருக்கிறது என்றும் தனது நாட்டு மக்களுக்குக் கூறினார். இத்தகைய பின்புலத்தில் ஒபாமா வாஷிங்டனின் கொள்கையைத் தெளிவுபடுத்தினார். 'பயங்கரவாதத்துக்கு எதிரான விரிவானதும் நிலைபேறானதுமான தந்திரோபாயமொன்றின் மூலமாக இஸ்லாமிய அரசை இழிவுபடுத்தி இறுதியில் ஒழித்துக் கட்டுவோம்' என்று அவர் கூறினார். அவரது வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இஸ்லாமிய அரசு தோற்கடிக்கப் படும். முடித்துக் கட்டப்படும். இந்தப் பணியை எவ்வாறு நாம் நிறைவேற் றுகிறோம் என்பதை அடிப்படையா கக் கொண்டே நாமெல்லோரும் கூட் டாக மதிப்பிடப்படப்போகிறோம்' என்று அமெரிக்க காங்கிரஸுக்கு கூறினார்.

மிதவாதப் போக்குடைய சிரிய கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதமும் பயிற்சியும் வழங்கும் ஜனாதிபதி ஒபாமாவின் திட்டத்துக்கு அமெ ரிக்க காங்கிரஸ் அங்கீகாரம் அளித்த தையும் காணக்கூடியதாக இருந்தது. தீவிரவாதிகளுக்கு சிறந்ததொரு எதி ரிடையான சக்தியாக சிரிய எதிர ணியைப் பலப்படுத்துவதற்கும் இன் னொரு தரைவழிப் போரில் அமெரிக்கத் துருப்புகள் சிக்குவதைத் தவிர்ப்பதற்கும் சுதந்திர சிரிய இரா ணுவத்தின் கிளர்ச்சியாளர்களுக்கு (Free Syrian Army rebels) ஆயு தங்களை வழங்கி பயிற்சி அளிப்பது ஒபாமாவின் தந்திரோபாயத்தின் ஒரு அங்கம். போரினால் சலிப்படைந்து



விட்ட ஒபாமாவின் சொந்த ஜனநாய கக் கட்சியின் காங்கிரஸ் உறுப்பினர்க ளிடமிருந்து வருகின்ற ஆட்சேபனை களுக்கு மத்தியில், ஒபாமா நிருவா கம் காங்கிரஸில் குடியரசுக் கட்சியின ரின் ஆதரவையும் பெறும் முயற்சிக ளிலும் இறங்கியது. மற்றும்படி காங்கிரஸிற்குள் இரு துருவங்களா கச் செயற்படுகின்ற ஜனநாயகக் கட்சி யினரும் குடியரசுக் கட்சியினரும் ஒபாமாவின் தந்திரோபாயத்துக்கு ஆதரவளிப்பதில் ஒன்றிணைந்து நின் றார்கள். இஸ்லாமிய அரசுத் தீவிரவா





**இஸ்லாமிய அரசு மீது மேற்குலகம் கவனத்தைக் குவித்தி ருப்பதால் அசாத் தனது இராணுவ வல்லமையை மிதவாதப் போக்குடைய கிளர்ச்சிப் படைகளை அழித்தொழிப்பதற்கு முழுமையாக பயன்படுத்தக்கூடிய வசதியான சூழ்நிலை உருவாகக்கூடும்**

திகளுக்கு எதிரான விமானத் தாக்கு தல்களை நடத்தும் ஒபாமாவின் திட்டத்துக்கு அமெரிக்கர்கள் ஆதரவு அளிக்கின்ற அதேவேளை, அந்த இயக்கத்துக்கு எதிராக நீண்டகால இராணுவ நடவடிக்கைகளை பெரு மளவுக்கு எதிர்க்கிறார்கள் என்று அபிப்பிராய வாக்கெடுப்புகளின் மூலமாகத் தெரியவருகிறது. இதை மனதிற்கொண்டு, அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இஸ்லாமிய அரசுக்கு எதிராக தரைச் சண்டைக ளில் ஈடுபடப்போவதில்லை. ஆனால், அவை ஆகாயமார்க்கத் தாக்குதல்கள் பயனுறுதியுடையவை யாக அமைவதை உறுதிப்படுத்துவ தற்கான விமானப் படைப்பலத்தை யும் தளபாடங்களையும் வழங்கும்.

தரையில் உள்ள ஈராக்கியப்படைக ளுக்கு உதவுகின்ற அடிப்படையி லேயே தங்களது விமானப் படைப்ப லப்பயன்பாட்டை மேற்குலக நாடு கள் திட்டமிட்டிருக்கின்றன. ஆனால், இது இறுதியில் மேற்குலகத் துருப்புக ளைத் தரையில் இறக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு வழிவகுக்குமா என்ற விவாதம் ஏற்கனவே தொடங் கிவிட்டது. இஸ்லாமிய அரசு படைக ளுக்கு எதிராக முன்னரங்க நிலைக ளில் அமெரிக்க 'ஆலோசகர்களை' கூடுதலான அளவுக்கு ஈடுபடுத்துவ தற்கான சாத்தியங்கள் குறித்து அமெ ரிக்க கூட்டுப்படைகளின் தலைவர் மார்ட்டின் டெம்சி தெரிவித்த கருத்து மேற்குலகின் இராணுவத் தந்திரோ பாயத்தில் உள்ள அழுத்த நிலைக ளைக் கோடிட்டுக் காட்டுகிறது. நிலை வரங்களைத் தனித்தனியாக நோக்கு வதன் அடிப்படையில், மோதலுடன் சம்பந்தப்பட்ட கடமைகளில் அமெ ரிக்கத் துருப்புகளை பயன்படுத்துவ தற்கான சாத்தியத்துக்கு ஒபாமா வழி திறந்துவிட்டிருக்கிறார் என்பதை டெம்சி ஒப்புக்கொண்டுள்ளார் என் பது கவனிக்கத்தக்கது.

ஈராக்கிலோ அல்லது சிரியாவிலோ அமெரிக்கா மோதல் துருப்புகளை நிலைவைக்கப் போவதில்லை என் பதை தெளிவுபடுத்த வெள்ளைமா ளிகை நிர்ப்பந்திக்கப்பட்டது. மேற்கு லகின் தந்திரோபாயம் மத்திய கிழக்கின் களநிலைவரங்களினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கலாக்கப்பட்டிருக்கிறது. சிரிய அரசாங்கம் இஸ்லாமிய அரசை எதிர்த்துப் போரிடுகிறது என்ற போதிலும், டமாஸ்கஸுடன் எந்தவிதமான வெளிப்படையான தொடர்பையும் கொண்டிருக்க மேற்குலக நாடுகள் தயக்கம் காட்டுகின்றன. இங்கு எதிரியின் எதிரி எனது நண்பனல்ல என்பது போல் ஆகிவிட்டது. சிரியாவில் நிலவுகின்ற குழப்பகரமான நிலைவரமே இஸ்லாமிய அரசு தன்னை நிலைநிறுத்திக் கொண்டு பிறகு அதன் காட்டுமிராண்டித்தனத்தை ஈராக்கிற்கு ஏற்றுமதி செய்வதற்கும் உதவியிருக்கிறது. இஸ்லாமிய அரசு மீது மேற்குலகு கவனத்தைக் குவித்திருப்பதால், சிரிய அரசாங்கம் அதன் இராணுவ வல்லமையை மிதவாதப் போக்குடைய கிளர்ச்சிப் படைகளை அழித்தொழிப்பதற்கு முழுமையாகப் பயன்படுத்தக்கூடிய வசதியான நிலை உருவாகக் கூடும்.

இஸ்லாமிய அரசைப் பொறுத்தவரை, அது ஒரு வல்லரசுடன் மோதுகின்ற நிலைமை தோன்றியிருக்கிறது. இஸ்லாமிய அரசுப்படைகளின் கொலைகாரத்தனமான நடத்தை உலகிற்குத் தெரிந்ததே. அவர்களால் ஆட்டு மந்தைகளைப்போன்று அமெரிக்கர்களை இரக்கமின்றிக் கொல்ல முடியும். அதன் மூலமாக அவர்கள் பிரசித்தியடைய முடியும் என்பது மாத்திரமல்ல, பிரத்தியேகமான பிராந்திய சூழலில் தங்களுக்கு நம்பகத்தன்மையையும் கூட பெற்றுக் கொள்ள முடியும். இஸ்லாமிய அரசின் அளவும் அதன் நோக்கெல்லையும் இதுகாலவரையில் இருந்திருக்கக்கூடிய ஏனைய ஜிஹாதி இயக்கங்களில் இருந்து அதை வேறுபடுத்துகிறது. ஏனென்றால், அது சிரியாவிலும் ஈராக்கிலும் கணிசமானளவு நிலப்பகுதிகளை ஏற்கனவே கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருக்கிறது. அவ்வியக்கம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் நிதிவசதியைக் கொண்டதாகவும் தொடர்ந்து விளங்கிவருகிறது. அது கண்டிருக்கும் வெற்றி காரணமாக வெளிநாடுகளில் இருந்து பெரும் எண்ணிக்கையில் போராளிகளைக் கவர்ந்திழுக்கக்கூடிய சாத்தியத்



தையும் கொண்டிருக்கிறது.

தீர்க்கமான முறையில் செயற்படுவதில் ஒபாமாவுக்கு இருப்பதாக வாஷிங்டனின் பல அரபு நேசநாடுகள் காண்கின்ற ஊசலாட்டமும் விருப்பமின்மையும் கூட அவரது புதிய தந்திரோபாயத்துக்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்துகின்றன. சண்டைக்குப் போவதற்குத் தயங்குகின்ற ஒருவராக ஒபாமா நோக்கப்படுகிறார். இஸ்லாமிய அரசு இயக்கம் செயற்படத் தொடங்கிய ஆரம்பநாட்களில் இருந்தே அதற்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்குவதற்கு அமெரிக்கா கூடுதலான அளவுக்கு துடிப்பான பாத்திரத்தை வகிக்க வேண்டுமென்று அரபு நேசநாடுகள் கேட்டுக் கொண்டிருந்த போதிலும் கூட, அந்த இயக்கத்தின் அச்சுறுத்தலை இனிமேலும் அலட்சியம் செய்வது சாத்தியமில்லை என்ற நிலை வந்த பின்னர் மாத்திரமே அதற்கு எதிரான நடவடிக்கையை எடுக்க ஒபாமா நிர்ப்பந்திக்கப்பட்டார்.

பிரிட்டனைப் பொறுத்தவரை அது உள்நாட்டில் வளர்கின்ற தீவிரவாதப் போக்கிற்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த நிலைவரத்தையும் பிரிட்டிஷ் பிரஜையான உதவிப்பணியாளர் ஒருவர் இஸ்லாமிய அரசு படையினரால் அண்மையில் சிரச்சேதம் செய்யப்பட்ட சம்பவத்தையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, இஸ்லாமிய அரசுக்கெதிரான சண்டையில் பிரிட்டன் இணைவதற்கான சாத்தியங்கள் வெகுவாக இருக்கின்றன. ஸ்கொட்லாந்து விவகாரத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் கவனத்தைக் குவித்திருப்பதால், மத்திய கிழக்கில் இராணுவ நடவடிக்கை தொடர்பான லண்டன் அறிவிப்பு எப்போது வெளிவரும் என்பதும் ஈராக்கில் மாத்திரம் தான் அந்த இராணுவ நடவடிக்கை மட்டுப்படுத்தப்படுமா அல்லது சிரியாவுக்கும் கூட விஸ்தரிக்கப்படுமா என்பதும் தெளிவில்லாமல் இருக்கிறது. இஸ்லாமிய அரசுக்கு எதிரான சண்டைக்கு உதவுவதற்கு மத்திய கிழக்கிற்கு தனது 600 துருப்புகளை அனுப்புவதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருக்கிறது.

பிரிட்டன் உட்பட பல நாடுகளைப் போன்று அவுஸ்திரேலியாவும் வெறுமனே வெளிநாடுகளில் மாத்திரமல்ல உள்நாட்டிலும் இஸ்லாமிய அரசிடமிருந்து வரக்கூடிய அச்சுறுத்தல் குறித்து கவலையடைந்துள்ளது. சிரியாவிலும் ஈராக்கின் வட பகுதியிலும் ஜிஹாதி குழுக்களுடன் சேர்ந்து குறைந்தது 60 அவுஸ்திரேலியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் இதுவரையில் மோதல்களில் 15 அவுஸ்திரேலியர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் (இரு தற்கொலைக் குண்டுப் போராளிகள் உட்பட) நம்பப்படுகிறது. இஸ்லாமிய அரசின் கொடியினால் சுற்றப்பட்டு அவுஸ்திரேலிய பொதுமகன் ஒருவரை சிரச்சேதம் செய்வதற்கு திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டப்பட்டிருப்பதாக வெளியான புலனாய்வு அறிக்கைகளையடுத்து அவுஸ்திரேலிய வரலாற்றிலேயே மிகப்பெரியது என்று வர்ணிக்கப்படக்கூடிய பயங்கரவாத எதிர்ப்பு ஒத்திகையை அந்நாட்டுப் பொலிஸார் நடத்தியிருக்கிறார்கள்.

'அமெரிக்காவை அச்சுறுத்துகின்ற பயங்கரவாதிகள் எங்கிருந்தாலும் அவர்களை நாம் வேட்டையாடுவோம். அதன் அர்த்தம் இஸ்லாமிய அரசுக்கு எதிராக ஈராக்கிலும் சிரியாவிலும் நடவடிக்கை எடுக்க நாம் தயங்கப்போவதில்லை என்பதேயாகும். எனது நிருவாகத்தின் ஒரு அடிப்படைக் கோட்பாடு இதுவாகும்; அதாவது அமெரிக்காவை அச்சுறுத்துபவர்களுக்கு பாதுகாப்பான புகலிடம் எங்குமே கிடைக்காது' என்று கடந்த மாதம் தனது நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோது ஒபாமா குறிப்பிட்டார்.

இஸ்லாமிய அரசிடமிருந்து வருகின்ற சவாலைச் சமாளிப்பதற்கு போதுமானதாக தந்திரோபாயம் வகுக்கப்பட்டிருக்கிறதா அல்லது பெருஞ்செலவையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தக் கூடியதாக மத்திய கிழக்கில் அமெரிக்கா இன்னொரு இராணுவத்தலையீட்டைச் செய்து சகதிக்குள் விழப்போவதன் தொடக்கமா இது என்பது தெளிவாகத் தெரியவில்லை. ■

***(ஹர்ஷ் வி.பந்த் லண்டன் சிங்ஸ் கல்லூரியின் பாதுகாப்பு ஆய்வுகள் திணைக்களத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றுகிறார்)***

---

***(50ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

ஸ்கொட்லாந்தின் முடிவு, ஐக்கிய இராச்சியம் முழுமையிலுமாக மிகப் பெரிய மாற்றத்திற்கு வித்திட்டுள்ளது. ஐக்கிய இராச்சியத்தின் அரசியல் யாப்பு பழமையானது; சிக்கல் வாய்ந்தது; எழுதப்படாதது, இப்படியான இயல்புகளைக் கொண்ட யாப்பில் மாற்றங்கள் விரைவில் ஏற்படப் போகின்றன.

முழுமையான சமஷ்டிமுறை பிரித்தானியாவிற்கு அறிமுகப்படுத்தப்படப்போகிறது. ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வடஅயர்லாந்து என்பன மேலும் கூடுதல் அதிகாரங்களைப் பெறப்போகின்றன. அத்தோடு இங்கிலாந்திற்கும் ஒரு தனிப் பாராளுமன்றம் கிடைக்கப்போகிறது. இங்கிலாந்து தவிர்ந்த ஏனைய மூன்று பகுதிகளும் தற்போது இங்கிலாந்திற்காக வெஸ்ட்மினிஸ்டரில் இயற்றும் சட்டங்களில் வாக்களிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன. இச்சமச்சீரின்மை திருத்தப்படவேண்டியுள்ளது.

ஸ்கொட்லாந்து மட்டுமன்றி வடஅயர்லாந்து, வேல்ஸ் என்பனவும் இங்கிலாந்தின் பிராந்தியங்களும் கூடுதல் அதிகாரங்களைப்பெற வேண்டும் என்று டேவிட் கமரூன் கூறினார். எமக்கு இப்போது அரியதொரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. பிரித்தானிய மக்களை ஆளும் முறைமையில் மாற்றத்தைச் செய்யப்போகிறோம். மாற்றம் நன்மைக்கானதே என்று அவர் கூறினார். 'இன்று ஸ்கொட்லாந்து பாராளுமன்றம் வரிவிதிப்பு, சமூக நலன் ஆகியனவற்றில் தமக்குரிய சட்டங்களை தாமே ஆக்கிக் கொள்கின்றன. இதேபோன்று இங்கிலாந்து, வடஅயர்லாந்து, வேல்ஸ் என்பனவும் தமது பாராளுமன்றங்கள் மூலம் சட்டம் இயற்றப் போகின்றன' என்றும் கமரூன் கூறினார்.

ஸ்கொட்லாந்துக்கு இவை எல்லாவற்றையும் பிரிவினைக்கு எதிரானவர்கள் உடனடியாகக் கொடுக்கப் போகிறார்கள் என்று கூற முடியாது. 2015 மே மாதம் ஐக்கிய இராச்சியத்தில் பொதுத்தேர்தல் நடக்கப்போகிறது. இன்னும் ஒரு சில மாதங்களே உள்ள நிலையில் சமஷ்டி முறையை நோக்கிய மாற்றம் அதற்கு முன்வந்துவிடும் என்று நினைப்பது தவறு. இன்றைய கூட்டணி அரசாங்கம் இதனை நடைமுறைப்படுத்துவதற்கான தெளிவான திட்டம் ஒன்றை வைத்திருக்கிறது என்பதை மட்டும் கூறலாம். பிரித்தானியா அரசியல் யாப்பு மாற்றங்களை எவ்வாறு கொண்டு வரப் போகிறது, என்னென்ன மாற்றங்கள் வேண்டும் என்பதை முடிவு செய்யக் கால அவகாசம் தேவை. வரப்போகும் தேர்தலில் எல்லாக் கட்சிகளும் தமது திட்டங்களை முன்வைக்கப் போகின்றன.

வேறுவார்த்தைகளில் கூறினால் பிரித்தானியா இன்னொரு தேர்தலுக்குத் தயாராகிறது. ■

***(ஜோன் அஸீஸ்- The week.comஇன் பொருளாதார, வர்த்தக ஆசிரியர்.)***

---

***(61ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

போன்ற அண்டை நாடுகளின் நியாயமான கவலைகளைத் தீர்க்க வேண்டும். இரண்டு, இந்த இரு நாடுகளின் உள்நாட்டு அரசியலில் அமெரிக்கா எடுக்கும் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு இந்தியா தனது சர்வதேச அரசியல் நிலைப்பாட்டை பயன்படுத்த வேண்டும். இது, அந்தந்த நாட்டு அரசியல் தலைமைகளின் அத்தியாவசியமான எதிர்பார்ப்பு. என்றாலும், அதுவே சர்வதேச அரசியலில் ஒரு பகுதி என்று ஆன பின்னர், இந்தியா அவை குறித்து வாளாவிருக்க முடியாது.

ஆனால், பிரச்சினையே அது தான். இந்தியா தனது அண்டை நாடுகளின் சர்வதேச அரசியல் தேவைகளில் துணை நின்றாலும், சீனாவுடனான பொருளாதாரத்திற்கு அப்பாற்பட்ட அரசியல்-இராணுவ உடன்படிக்கைகளில் இருந்து இலங்கை, மாலைதீவு போன்ற நாடுகள் ஒதுங்கி நிற்குமா? அல்லது, சீனாவின் இத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்யாவிட்டால், சீனா அவர்களுக்கு பொருளாதார உதவிகளை அள்ளிஅள்ளி வழங்குமா? அவ்வாறானால், அவர்களது பொருளாதார தேவைகள் மற்றும் முதலீடுகளுக்கு அவர்கள் எங்கே செல்ல முடியும்?

இவை அனைத்துமே, ஜனாதிபதி ஜின்பிங்-கின் மூன்று நாட்டு தெற்காசிய விஜயம் முன்வைத்துள்ள கேள்விகள். பதில்கள், யாரிடம்? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்



ந.கணநாதன்

# காகித அபிவிருத்தி

இதுவரை காலமும் நாட்டிற்கு அச்சுறுத்தலாகவிருந்த பயங்கரவாதத்தை வேரோடு அழித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர் நாடு அபிவிருத்தியை நோக்கித் துரிதமாகப் பயணித்து வருவதாகக் கூறப்படுகிறது. 'கிழக்கின் உதயம்' 'வடக்கின் வசந்தம்' போன்ற அலங்கார வார்த்தைக் கருதுகோள்கள் முன்வைக்கப்பட்டு அபிவிருத்திக் குறிகாட்டிகள் இலக்க ரீதியாக எடுத்துக்காட்டப்படுகின்றன. உண்மையில் இது வெறும் எழுத்தளவிலான காகித அபிவிருத்திமட்டுமே. யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல்வேறு விதமான துரித அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அரசு பெரிதாகக் கூறி வருகிறது.

பிரதான வீதிகளை அகலித்துச் செப்பனிடல், தொலைத் தொடர்புக்கோபுர நிர்மாணம், லக்சபான விலிருந்து நேரடி மின்சார வசதி, நிதிநிறுவனங்களின் கிளைகளை திறத்தல், வியாபாரச் செயற்பாடுகளின் விரிவாக்கம், துரிதமான போக்குவரத்து வசதி, புகையிரதசேவை விரிவாக்கம் என அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசு பட்டியலிட்டு வருகின்றது. இதையெல்லாம் அபிவிருத்தியெனக் கொள்ளலாமா என்பதுதான் கேள்விக்குரியது. உண்மையில் நாட்டின் எல்லாப்பிரதேசங்களையும் கருத்திற்கொண்டு செப்பனிடவேண்டிய வேலைகளை முறைப்படி நிறைவேற்றிக் கொள்ளும் பொறிமுறையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதே மெய்யான அபிவிருத்தியாக இருக்க முடியும். அரசாங்கம் முதன்மையளித்து நிறைவேற்றியிருக்க வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாகச் சில முக்கியமானதும் அடிப்படையானதுமான கேள்விகளுக்கு விடையளித்தாக வேண்டும்.

01. புனர்வாழ்வளித்து இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு அரசு ஏதாவது முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதா?

புனர்வாழ்வு முகாமில் வைத்து அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தது. அவர்களை விடுவித்த பின்னர் பிரதேச செயலகரீதியாகக் கடன் வழங்கப் போவதாகக் கூறி விண்ணப்பப்படிவங்களை வழங்கி தகவல்களைத் திரட்டியது. அவ்வளவுதான் பெரிதாக வேறொன்றும் நடந்துவிடவில்லை.

02. இடைத்தங்கல் முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்ட மக்களுக்குரிய அத்தியாவசிய தேவைகள் முழுமையாக அரசினால் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா?

சர்வதேச அழுத்தத்திலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே அரசு இந்த மீள்குடியேற்றமென்ற நாடகத்தை அரங்கேற்றியது. இடைத்தங்கல் முகாம்களை மூடிவிடுவதுதான் அரசின் பிரதான நோக்கமாக இருந்ததே தவிர மீள்குடியேற்றம் மற்றும் தொடர்புடைய தேவைகளின் நிறைவேற்றுகை குறித்து அரசிடம் எவ்விதமான திட்டமிடல் பொறிமுறையுமிருக்கவில்லை. இடைத்தங்கல் முகாம்களிலிருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு ஒருதொகைப்பணம் உடனடியாக வழங்கப்பட்டு மேலுமொரு தொகைப்பணம் அவர்களது வங்கிக் கணக்குகளிலிடப்பட்டது. மீள்குடியேற்றம் நடந்து சில வருடங்களும் கடந்த நிலையில் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணம் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவும் போதுமானதாக இருக்கவில்லை. மேலும் மீள்குடியேற்றப்பட்டுச் சிலமாதங்களுக்கு மட்டுமே நிவாரணக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டிருந்தன. கூடாரத்துணி, கூரைத்தகடுகளும் வழங்கப்பட்ட போதிலும் சில குடும்பங்கள் தமது அன்றாட உணவுத் தேவைகளுக்காக அவற்றை விற்றுவிட்ட நிலைமையும் காணப்படுகிறது. மேலும் எவ்வித அடிப்படைவசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்காமல் மீள்குடியேற்றப்பட்ட நிலையில் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சைக்கிளிலாவது போக்குவரத்துச் செய்யக்கூடியளவுக்கேனும் உள்வீதிகள் செப்பனிடப்படவில்லை. இந்திய வீட்டுத்திட்டம், செஞ்சிலுவைச் சங்க வீட்டுத்திட்டம் போன்ற உதவிகளெல்லாம் பரவலாக்கப்படவில்லையென்பதுடன் சிலபகுதிகளில் பொருத்தமற்ற பயனாளிகளே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.


03. வறுமைத் தணிப்பிற்காக அரசு சமகாலத்தில் ஏதேனும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுத்துள்ளதா?

போர் முடிவுக்கு வந்த பின்னர் சார்பளவில் வறுமைமட்டம் உயர்ந்துள்ளது.

(55ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com


Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# NIRO HOLIDAY RESORT


## கதிர்காமத்தில்...



தமிழ் பேசும் மக்களுக்காக
வரவேற்பாளர்கள் முதல்
ஊழியர்கள் வரை தமிழில்



கதிர்காம யாத்ரீகர்களின் நலன்கருதி
சகல வசதிகளுடன் கூடிய அறைகள்
உங்கள் குடும்பத்தினருடன் தங்கி மகிழ



No.51, Sella Road, Kataragama. Tel: 047 2236901, 047 5701055, 0777 216263
E-mail: niroholidayresort@gmail.com www.niroholidayresort.com


Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No. 185, Grandpass Road, Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org